ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்த்ரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

முருகனுக்கும் முனியனுக்கும் ஸம்வாதம்.

(முன் தொடர்ச்சி.)

கேள்வி:—அந்தோ ! ஆச்சரியம் !! கடவுள் எங்கும் நிறைந்தவராயிற்றே? அவரைக்கோவில்லுள்ள கல்லில்மட்டிலும் இருப்பதாக நினைத்துக் கொண்டுகுரங்குப் பிடிவாதம் பிடிப்பது நாணயமாகுமா ?

விடை:—கடவுள் வியாபகர்தான். ஆனாலும்அவர் வைதிகமந்திரப்பிரபாவத்தால்கோவில் கல்லில்தான் ஸான்னித்தியம் பெற்றிருக்கின்றார். இந்த வித்தியாஸத்தால் ஹிந்துக்கோவிலில் பிடிவாதம் நாணயமே.

கே:—காந்தீஜி கீதையைத்தவிர வேறொன்றையும் சாஸ்திரமாக நம்பவில்லையே? மலைக்கல்லுக்கும் கோவில்கல்லுக்கும் வித்தியாஸம் இவருக்கு எப்படி ஏற்பட்டது? கீதையைக்கொண்டும் ஆத்ம சக்தியைக்கொண்டும் வேறொரு கல்லைக் கடவுள் ஸான்னித்தியம் அடையும்படியாகச் செய்துவிடக்கூடாதா ?

வி:—இது நியாயமாகாது. கல்லைக் கடவுளாகச் செய்கிற விஷயம், கீதையிலில்லை. ஆத்மசக்தியையும் இவ்விஷயத்தில் உபயோகப்படுத்துவது காந்தீஜிக்கு அவ்வளவு அவச்யமாகத் தோன்றவில்லை. தனிப்பட்ட கோவிலைக் கட்டிக்கொடுத்து அவர்களை தனியாக ஒதுக்குவது ஹிந்து ஸமூகத்திற்கே ஒரு மாசு என்று அவரபிப்பிராயம்.

கே:—அவருடைய அபிப்பிராயம் ஸரியில்லை. எந்தப் பிரமாணத்தால் ஜாதிஹிந்துக்களுக்குக் கோவிலில் நம்பிக்கையோ? அதை அவர் நம்புகிறாரா ?

வி:—அதில் அவருக்கு நம்பிக்கையில்லாமலா இவ்வளவு பாடுபடுகிறார்.

கே:—அப்படியானால் ஹிந்துக்கோவில் ஸம்பந்தப்பட்ட ஆசாரானுஷ்டான முறைகளெல்லாவற்றையும், தெரிவிக்கின்ற எல்லா சாஸ்திர ஸம்பிரதாயங்களையும் அவர் அவச்யம் நம்பவேண்டுமே ?

வி:— அப்படியே நம்பட்டுமே ?

கே:—அப்படி நம்பினால் அவைகளில் ஆலயப்பிரவேசத்திற்குக் கொஞ்சமிடமிருப்பதாக நான் கேட்டவரையில் தெரியவில்லை. ஆகையால் காந்தீஜியின் பிடிவாதம் நாணயமாகாது. சுபம்.

V. J. S.

ஆர்ய தர்மம்.

ஆங்கிரஸஹுமார்கழிமீ கஉ

ஜகத்குரு ஸ்ரீ சங்கரசார்யஸ்வாமிகளின் உபந்யாசம்.

சந்தியாவந்தனம்.

23-11-32

சந்தியாவந்தனத்தைப்பற்றி சென்ற 23உயன்று மயிலாப்பூரில் ஸ்ரீசங்கராச்சார்ய ஸ்வாமிகள் அவர்கள்செய்த ப்ஸங்கத் பின்வருமாறு:—

தனுர் வேதத்தில் அஸ்திரம், சஸ்திரம் என்று இருவகை ஆயுதங்கள் சொல்லப்பட்டிருப்பதில் அஸ்திரம் மந்திரங்களைக்கொண்டு செலுத்தப்படுவது என்றும், பிராமணன் அஸ்திர ப்ரயோகம்செய்யக் கூடாதென்றும்சொன்னேன். ஆனால் ஒரு அஸ்திரத்தைதினந்தோறும் அவன் மூன்று தடவை ப்ரயோகம் செய்ய வேண்டும் அந்த அஸ்த்ரம் ஜலம். அசுரர்களை நாசம் செய்வதற்காக அந்த அஸ்த்ர ப்ரயோகம் உத்தேசிக்கப்பட்டது. அந்த அசுரர்கள் நமது புத்தியை ஆசிரயித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் போய்விடவேண்டும். ஞான சூரியன் உதயமாவதைத் தடுக்கும் பிரதிபந்தங்களை தொலைக்க இந்த ப்ரயோகத்தை தினம் மூன்று முறை செய்ய வேண்டும். இந்த எண்ணத்துடன்தினம்செய்தால் சத்துருக்கள் நாசமாகிவிடுவர்.

பிறகு பிராணாயாமம் மூக்கைப் பிடித்துக்கொண்டு செய்கிறோம். அது சரியல்ல. மூச்சைப் பிடித்துக்கொண்டு செய்ய வேண்டும். மூச்சைப் பிடித்துக்கொண்டு செய்வதுடன், மனஸ் ஒருமைப்படும்படி செய்ய வேண்டும். ஜபம் முதலிய ஆத்மார்த்த காரியங்களைச் செய்ய சித்தம் ஒருமைப்படவேண்டும். அதற்கு மூச்சைப்பிடித்துக்கொள்வது சாதனம். மனஸ் ஒருமைப்படின் மூச்சு தானாக நிற்கும். மூச்சு நிற்கில், மனஸ் ஒருமைப்பட்டு

விடும். ஆச்சரியம் துக்கம் முதலியன திடீரென்று சேரும்போது ஹா என்கிறோம். அப்பொழுது மூச்சு தானாக நின்றுவிடுகிறது, ஏனெனில் மனம் ஒருமைப்பட்டுவிட்டது. நாமாக மூச்சை நிறுத்தவில்லை, அது தானாக நின்றுவிட்டது. ஆகையால் ப்ராணாயாமத்தால் சித்த ஏகாக்ரம் உண்டாகும். 12-வயதில் உபநயனம் செய்ததாக வைத்துக்கொண்டாலும் தினம் 10-ப்ராணாயாமம் செய்து வந்திருப்பின் யோகிகளாயிருப்போம். மூக்கைப் பிடித்துக்கொண்டு சிறிதுநேரம் உட்கார்ந்திருப்பதைமூச்சைப்பிடித்துக் கொண்டிருக்க வேண்டும். செய்வன திருந்தச் செய். அதற்காக யோகத்தில் இறங்கி விடவேண்டாம். கர்மாவைச் செய்வதே போதும். சந்தியாவந்தனம் செய்ய ஆரம்பித்ததுமுதல் முடியும் வரையில் பேசக்கூடாது. பரமேசுவர ப்ரீத்யர்த்தம் என்று சங்கல்பம் செய்துகொண்டு ஆரம்பம் செய்து மார்ஜனம் ப்ரோக்ஷணம், அர்க்யப்ரதானம், ப்ராணாயாமம், ஜபம், ஸ்தோத்ரம், அபிவாதனம், முதலியன செய்து முடிக்கவேண்டும். பிராணாயாமம் முக்கியமானது. மூச்சை இரண்டு க்ஷணம் நிறுத்தி விடுவது போதும். நாம் பாவம் செய்யும்போது மனோவாக்கு காயங்களால் செய்கிறோம். பரிகாரமாகச் செய்யும் சந்தியாவந்தனத்தில் மூன்றும் சேர்ந்திருக்கின்றன.

கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகமும் இதில் சேர்ந்திருக்கின்றன. தீர்த்தபாத்திரம் தனியாக வேண்டும். அவசரமாகச் செய்யக் கூடாது. அபிவாதனத்தில் நீங்கள் எந்த மகருஷிகளுடைய குலத்தில் வந்தவர்கள் என்பதைச் சொல்லுகிறீர்கள். மகான்களுடைய குலத்தில் வந்தவர்கள் என்பதைச் சொல்லுகிறீர்கள் மகான்களுடைய வம்சத்தில் பிறந்ததற்காகவாவது கர்மானுஷ்டானத்தை விடக்கூடாது. மந்திரலோப மன்னியில் மௌனத்துடன் பரமேசுவரனுக்கு அர்பணம் செய்துவிட்டு பக்திச்ரத்தையுடன் செய்யவேண்டும். இந்த வழக்கம் ஸ்திரப்பட்டுவிட்டால் மந்திரங்களின் அர்த்தத்தையும் தெரிந்துகொள்ளுங்கள் என்று ஸ்வாமிகள் சொல்லி முடித்தார்கள்.

II

மயிலாப்பூரில் சென்ற வியாழக்கிழமை நவம்பர் 24வ. யன்று காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்காசாரியஸ்வாமிகள் அவர்கள் செய்தபிரசங்க ஸாரம் பின் வருமாறு:—

காயத்ரீஜபம்.

காயத்ரீ என்பதற்கு 'காயந்தம் த்ராயதே இதி' என்று சொல்லப்பட்டிருக்கிறது. தன்னைப் பிரேமையுடன் பாடுகிறவனை ரக்ஷிப்பது என்பது அதன் பொருள். வேதத்தில் காயத்ரியை சந்தஸாம் மாதா என்று சொல்லியிருக்கிறது அதாவது காயத்ரி சந்தஸ்களுக்குத் தாய். சந்தஸ் என்றாலே வேதம். ஆகையால் காயத்ரி வேதங்களுக்கு தாய் என்று ஏற்படுகிறது. தேகத்தையும் மனதையும் காப்பாற்றுக்கொள்ள காயத்ரி உபயோகப்படுகிறது. தேகம் ஒரு தேவாலயம். கோவிலில் மகாலிங்கமிருப்பது போல தேகத்தில் ஜீவன் இருக்கிறான்' தேவாலயத்தில் அசுத்தி ஏற்பட்டுவிட்டால் பரிசுத்தம் செய்ய வேண்டுமென்பதுபோல், தேகத்தில் அசுத்தி ஏற்பட்டாலும் ப்ரிசுத்தி செய்யவேண்டும். தேவாலயத்திற்குள் மாம்சம், சுருட்டு முதலியவைகளைக்கொண்டு போவது நமக்கு அருவருப்பாக இருப்பதுபோல் தேகத்திற்குள்ளும் அசுத்தபதார்த்தங்களைப்போடக்கூடாது. அசுசியான ஆகாரங்களைச் சாப்பிடக்கூடாது. அசுசியான காரியங்களைச் செய்யக் கூடாது. அப்படி நியமத்துடனிராவிடில் மந்த்ரசக்திபோய் விடும் என்பதற்காகப் பிராமணனுக்கு நிர்ப்பந்தங்கள் ஏற்பட்டிருக்கின்றன, புஷ்டியுடையவனாக இருக்கவேண்டுமென்பதே லக்ஷியமல்ல. தேகம் வேதத்தைரக்ஷிக்க ஏற்பட்டது. வேதரக்ஷணம் பிராமணனுக்கு ஏற்பட்ட தொழில். தேகம் ஆலயமாகையால் உள்ளே ஒரு சக்தியைக் காப்பாற்ற வேண்டும். கண்டதை எல்லாம் ஏன் தின்னக்கூடாது? ஏன் அன்னிய தேசங்களுக்குப் போகக்கூடாது? என்றால் நம்மை உத்தேசித்தது வேறுகாரியத்துக்காக. வெளித் தேசங்களுக்குப் போவதால் வரக்கூடியபொருள் வேண்டாமென்று இருக்கவேண்டியதுதான். பொருளே வேண்டாமென்று நான் சொல்லவில்லை. அதை இரண்டாந்தரமாகவே கருதவேண்டுமென்றே சொல்லுகிறேன். மந்திரசக்தி என்ற அக்னி நம்மிடத்தில் காப்பாற்றப்படின், எவருக்கும் நாம் ஒரு சமயத்தில் உபகாரம் செய்யமுடியும். யாரேனும் ஒருவர் நம்மிடம் மந்திர உபகாரத்தை விரும்பிவந்தால், "நானும் உன்னைப் போல் எதையும் தின்கிறேன், செய்யக் கூடாத காரியங்களைச் செய்கிறேன். என்னிடம் மந்திர அக்னி ஏது" என்று சொல்ல வேண்டியிருக்கும். மந்திர அக்னியைக் காப்பாற்ற வேண்டும்.

ஒரு பொறிதான் பாக்கியிருக்கிறது. உபனயனத்தின்போது காயத்ரி உபதேசம் செய்யப்பட்டால் தான் அந்த ஒரு பொறி பாக்கியிருக்கிறது. அதன்மேல் செத்தைக் குப்பையைப்போட்டு அதை மூட்டிவிடவேண்டும். அதுதான் காயத்ரி நெருப்பு. 3-வேதங்களையும் காப்பாற்ற வேண்டுமானால் காயத்ரியைபாவது சம் ரக்ஷிக்க வேண்டும். ரிக், யஜுஸ், ஸாமம் என்ற ஒவ்வொரு வேதத்திலிருந்தும், ஒரு பாதத்தைக் கறந்து காயத்ரி எற்பட்டது. ஞாயிற்றுக்கிழமைகளிலாவது ஆயிரம் முறை காயத்ரியை ஜபம் செய்ய வேண்டும். கிரஹணகாலங்களில் ஜபம் செய்யவேண்டும். நாம் இதுவரையில் சரியாக நடந்துகொள்ளவில்லை என்று உண்மையில் வருத்தமேற்படின் சமுத்திரத்தில் ஸ்நானம் செய்து பிராயச்சித்தம் செய்துகொண்டு காயத்ரியையாவது ஜபித்துவர வேண்டும். சந்த்யாகாலங்களில் காயத்ரிஜபம் செய்யவேண்டும். காலையில் விஷ்ணுரூபமாகவும், சாயங்காலத்தில் சிவரூபமாகவும், மத்யானத்தில் பிரும்மரூபமாகவும், ஆராதிக்க வேண்டும். எல்லா மந்திரங்களும் சக்திகளும் காயத்ரியில் அடங்கியிருக்கின்றன. அதன்னியில் வேறு எந்த ஜபமும் பலிக்காது. மனதை வசியப்படுத்த ஹிப்னடிஸம் என்று இக்காலத்தில் ஸாதனம் செய்வது போல் காயத்ரிஜபம் மோக்ஷத்திற்குரிய ஹிப்னடிஸம். காயத்ரி ஜபம் ஆசையை அடக்கி ஸாத்விகமாகச் செய்யும். அதை ரக்ஷிப்பது நமது கடமை. மற்ற காரியங்களைக் கொஞ்சமாவது குறைத்துக்கொண்டு காயத்ரி ஜபத்தைத் தவாமல் செய்யவேண்டும்.

சுபம் !

பரதேவதையின் மகிமை.

10-12-32 மயிலாப்பூரில் காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசங்கராசார்யஸ்வாமிகள் அவர்கள் செய்த உபந்யாசத்தின் வருமாறு:—

ரிஷிகளில் துர்வாஸர் அம்பாளுடைய பிரசாதத்தைப் பரிபூர்ணமாகப் பெற்றவர்.

அவர் ஆர்யாத்விசதி என்று ஒரு கிரந்தம் செய்திருக்கிறார். ஆர்யா என்பது ஒருவகைச் செய்யுள். அந்நூலுக்கப்புறமே உல

திலுள்ள எல்லாக் கவிகளின் வாக்கும். அந்த வாக்கில் அம்பாளை ஆவிர்பவித்திருப்பதாக அனுபவிக்கப்படுகிறது. ஸ்ரீசக்ரம், ஆவரண தேவதைகள் முதலியவைகளின் ரூபத்தைச்சொல்லி அவர்களுடைய பிரசாதத்தையடைந்து கடைசியில் காமேசுவரியின் பிரசாதத்தையடைய வழி சொல்லியிருக்கிறார். அதைப் பாராயணம் செய்வதால் அம்பாளுடைய அனுக்ரஹம் கிடைத்துவிடும். பிரஸித்தக் கவிகள் அப்படி ஏதேனும் ஒரு பாராயணம் செய்தே காவியசக்தியைப் பெற்றனர். அம்பாளைப்பற்றி மூககவி 500 சுலோகம் செய்திருக்கிறார். ஆர்யாசதகம், முதலியன அவரால் செய்யப்பட்டிருக்கின்றன.

மூக கவியின் 500 சுலோகங்களில் 100 சுலோகம் ஆர்யா விருத்தத்தில் அமைந்திருக்கிறது. சித்திரக்காரன் எழுதக்கூடியது போல இருவரும் வாக்கினுல் நமக்கு அம்பாளைப் பிரத்தியக்ஷமாகக் காட்டும்படி சொல்லியிருக்கிறார்கள். சௌந்தர்ய லஹரி ஆசார்யாளால் செய்யப்பட்டது. கம்பீரத்தில் அது சிறந்தது. மிருதுவாக உள்ள தன்மை மூகபஞ்சாசத்தில்அடங்கியிருக்கிறது.

அம்பாளை ஆராதித்தால் சகல தேவதைகளையும் ஆராதிப்பதாகும் என்று லஹரியில் ஆசாரியாள் சொல்லியிருக்கிறார்.

त्रयाणां देवानां त्रिगुणजनितानां तव शिवे
भवेत्पुजा पूजा तव चरणयोर्या विरचिता ।
तदा हि त्वत्पादोद्वहनमणिपीठस्य निकटे
स्थिता ह्येते शश्वन्मकुलितकरोत्तंसमकुटा ॥:

உன்னுடைய சரணங்களில்செய்யப்பட்ட பூஜை திருகுணங்களான மூர்த்திகளுக்கும் செய்த பூஜையாகும்.

எப்படியெனில், உன்னுடைய பாதத்தைச்சுமக்கும்படியான ரத்ன பீடத்திக்குக் கீழே அவர்கள் தங்களுடைய கைகளை மொட்டுகள்போல் வைத்துக்கொண்டு அஞ்சலிபந்தனம் செய்துகொண்டு சிரமேற்றுங்கி நின்று கொண்டிருக்கிறார்கள். அம்பாளுக்குச் செய்யும் அர்ச்சனை அவர்கள் தலையில் விழும். அபிஷேக தீர்த்தம் அவர்கள் தலையில் விழும்; பிரார்த்தனை அவர்கள் காதில் விழும்; அம்பாள் சித் ஸ்வரூபிணி. ஸகஸ்ரநாமத்தில் சித்சக்தி என்று சொல்லப்பட்டிருக்கிறது. இருப்பதெல்லாம்ஸத் அதாவது உண்மை ஈசுவர ஸ்வரூபமே உண்மை, இருப்பதை அறிவதும் உண்மை

அதுதான் சித் ஸ்வரூபம். அறியாவிடில் உள்ளது இருப்பதில் பிரயோஜனமில்லே. ஆகையால்தான் ஈசுவானும் அம்பாளும் ஒன்று என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஞானமே மோட்ச சாதனம். ஞானஸ்வரூபிணி பரதேவதை. அவள் அனுக்ரஹம் பெற்றுவிடின் ஜன்மவிடுதலே கிடைத்துவிடும். ஸஹஸ்ராரம் என்று நமது சிரசில் ஒரு சக்ரம் இருக்கிறது. அதில் அம்பாளுடைய சாணுரவிந்தங்களை வைத்து அம்ருத பானம் செய்யவேண்டும். அதற்கு உபாயங்களை லஹரியிலும் ஆர்யாக்களிலும் விஸ்தார மாகச் சொல்லியிருக்கிறார்கள். அவளை ஆராத்தித்தால் எல்லா தேவதைகளையும் ஆராதித்ததாகும். நாம் ஆராதிக்க முடியாவிடின் பெரியவாள் பூஜித்த ஆலயங்களுக்குப் போய் நமஸ்காரம் செய்தால் அவளுடையக்ருபை கிடைக்கும் என்று சொல்லி முடித்தார்கள்.

க்ருதயுகம்.

R. நடராஜன் எழுதியது.

கிருத, த்ரேதா, துவாபா, கலி ஆகிய நான்கு யுகங்களில்முதலாவதாக உள்ளது கிருதயுகம். இதுவே சிருஷ்டியின் ஆரம்பத்திலும் முதலில் ஏற்பட்டது. இதை தங்கக்காலம் (The goldan age) என்று சொல்லுவார்கள். இந்த யுகத்தில் அமைதியும் சந்தோஷமும் பூர்ணமாக நிலவியதாலும் தங்கக் கனிகள் ஏராளமாக இருந்து வந்தமையாலும் மத்யகாலத்திற்குப் பிறகு ஆடையாபாணங்களும் வீட்டுக்குபயோகமான சாமான்களும் வீடுகளும்கூட விசேஷமாக பொன்னுல் ஆக்கப்பட்டு வந்ததாலும் இதுகாரணப் பெயராகும். ஸத்வகுணம் அதிகமாக இருந்து ஸத்யமே உருக்கொண்டவர்களாய் பிராணிகள் இருந்து வந்தமையால் ஸத்யயுகம் என்றும் வழங்கப்படுகிறது.

• 1440000 வருஷங்கள் கிருதயுகத்தின் முக்யகாலமாகும் கிருதயுகஸந்தியா காலங்களாக 144000 வருஷங்கள் முன்னும் பின்னும் சேர்க்கப்பட கிருதயுகத்திற்கு மொத்தம் 1728000 வருஷங்கள் ஆகின்றன. மனிதர்கள் $31\frac{1}{2}$-அடி உயரமுள்ளவர்களாக இருந்தார்கள். ஜீவ்யகாலம் 100000-வருஷங்களாக இருந்தது.

எலும்புகளில் மத்தியில் ஓர்வகை கசிவான திரவ பதார்த்தம் (Morow) இருக்கும் வரை பிராணன் உடலில் இருந்துவரும். அக்காலத்திய மனிதர்கள் நினைத்தமாத்திரத்தில் ஆயாஸமின்றி ஸ்தூல தேகத்தைவிட்டுப் பிரியும் ஆற்றல் பெற்றிருந்தார்கள். பாரமார்த்திக மார்க்கங்களிலும் தர்மானுஷ்டானங்களிலும் புத்திசக்தியிலும் மனோ உறுதியிலும் தேகபலத்திலும் உயர் நிலையில் இருந்தார்கள். ஸ்தூலக்கண்களால் பார்க்கக் கூடியதைவிட தங்கள் ஞானக்கண்ணால் அதிகமாகப் பார்த்தார்கள். அவர்களுக்கு ஆடைகள் அதிகமாக தேவையில்லாமல் இருந்தன. நாம் இப்பொழுது ஆடையணிவது வெட்கம், கேவலத்தன்மை இவற்றினின்றும் முதலாவதாக தடுத்துக்கொள்ளவும், இரண்டாவதாக வெய்யில், மழை முதலான சீதோஷ்ண மாறுதல்களிலிருந்து காப்பாற்றிக் கொள்வதற்கும் ஆகும்.

கிருதயுகத்து மனிதர்கள் நகரும் வேதங்களாயும், நடக்கும் புத்திகளாயும், பாரமார்த்திக சக்தியேவுருவெடுத்தவர்களாயும், விளங்கினர். அவர்கள் உன்னத ஸ்திதியில் இருந்தார்கள் என்பதற்கு தற்காலத்திய எவ்வித சாதனங்களுமில்லாமலே நிறைந்த ஆரோக்யம் வகித்திருப்பதே அத்தாக்ஷியாம்.

பருவநிலை ஆரோக்யமாயும், மிதமாயும் சுககரமாயும் இருந்தது அக்காலத்தில் ஸ்திரீபுருஷர்களுக்கு தற்கால காமப்ரயுக்தமான சேர்க்கை முற்றிலும் இல்லவேயில்லை. ஆத்மஸ்வரூபத்திலிருந்த திருடதரமான தியானதாரையானது நச்வரமான ஜடதேகசம்பந்தமான சந்தோஷங்களில் ஈடுபடும்படி செய்யவில்லை.

அவர்கள் பழங்களையும் கிழங்குகளையும் ஆகாரமாயும் பாலையும் ஜலத்தையும் பானமாகவும் வெகுகாலத்திற்கொருமுறை அபூர்வமாகஉட்கொண்டனர். இவ்வாறு சிறிது ஆஹாரம் உட்கொள்வதின் காரணம் மாயையால் விளங்கும் பிரபஞ்சத் தோற்றங்களை சிற்சில சமயங்களில் ஸ்தூலக்கண்களால்பார்க்க நேரிடுவதேயாம், அவர்களுக்கு ஸ்வல்ப ஆகாரமும் பானமும் தேவையானால் சிரமபரிகாரமும் சிறிது அவசியமே. ஆகவே அவர்கள் பசுமையான புல்கள் நிறைந்த தரையில் சிறிது படுத்துக்கொள்வார்கள். கிருதயுகத்தின் மத்யகாலம் முடிய தூக்கம் என்ற தமோகுணத்தின்

கார்யமானது இல்லையென்றுகூறலாம். அவரவர் தங்குமிடங்களே வீடுகளாகவும் உயரத்தில் விளங்கும் ஆகாயம் கூறைகளாயும் அன்னைபூமியே தரையாகவும் பெரியனவும் சிறியனவுமான மரங்களே சுவர்களாயும் இருந்துவந்தன. எல்லாஜீவப் பிராணிகளும் அவர்களது ஒரே குடும்பமாகவும் பூமிமுழுவதும் ஸ்வதேசமாகவும் கருதப்பட்டன.

தேவஸ்திரீ புருஷர்கள் அடிக்கடி பூமியில் ஸஞ்சரித்துவந்தார்கள். அந்த பாரமார்த்திக சக்தி நிறைந்த மனிதர்களும் தேவர்களும் மரங்களையும் செடிகளையும் அணுகும்போது அவை வாஸனையுள்ள அழகிய புஷ்பங்களை வர்ஷித்து தங்களிடமுள்ள இனியகனிகளை உதிர்த்து ஸத்காரஞ்செய்தன. கொடியவிலங்குகளாகிய சிங்கம் புலிகளும் மற்றும்பரஸ்பர சத்துருவர்க்கங்களும் கூட ஸத்வகுணம் நிரம்பப் பெற்றவைகளாய் எத்தகைய கஷ்டங்களையும் விளைவிக்காமல் அன்யோன்யமாய் அமைதிக்குத் தூண்டகளாய் இருந்துவந்தன. மரங்களும் புஷ்பச்செடிகளும் பெரியவைகளாயும் இனிப்பாயும் வாசனையாகவுமுள்ள பழங்களையும்புஷ்பங்களையும் ஸ்வபாவமாக ஈன்றன. பயிர்கள் மனிதப்ரயாஸையில்லாமல் அளவுக்குமிஞ்சியதான்யங்களை ஏராளமாகக்கொடுத்தன.

இத்தகைய கிருதயுகத்தின் வாழ்க்கை நிலைதான் வெகு காலத்திற்கு முன்னமே மறக்கப்பட்டு தவறாக கிரஹிக்கப்பட்டதாயும் வேறு முறையில் வியாக்யானம் செய்யப்படுவதுமாகிய ஈடன் (The garden of Eden in the old Testament)) தோட்டமாகும். அழகிய காக்ஷிகளுடன் பூமி முழுவதும் வியாபித்திருந்த இத்தோட்டத்தை இப்போதைய ஆராய்ச்சிக்காரர்களில் சிலர் ஸிரியா (Syria) தேசத்திலும், மற்றவர் ஈஜிப்டு (Egypt) தேசத்திலும் இருந்ததாக குறிப்பிடுகின்றனர். இதுவே ஆடம் ஈவ் (Adam and Eve) கதையால் தெரிவிக்கப்படும் புனிதமான வாழ்க்கை முறையாகும். இதுதான் பைபிள் (Bible) மதநூலில் ஸெண்டு ஜான் தெய்விகபுருஷரால் (St-Jhon the Devine) நேரில் பார்க்கப்பட்டதாக உள்ள 20, 21, 22 அத்யாய வெளியீடுகளின் யதார்த்த நிலையாகும். இவ்வாறு அவரது வெளியீட்டின் 21-வது அத்தியாயத்தில் கிருதயுகத்தின் உலகநிலை ஒருவாறு எடுத்துக்காட்ட முயபற்ச்சிக்கப்பட்டிருக்கிறது.

மிருகங்கள் கலியுகத்தில் பேசக் கூடாதவைகளாக காணப்படுமானால் இதுவே கிருத திரேதா துவாபரயுகங்களிலும் அவை பேசமுடியாதனவாக இருந்தனவென்று சொல்லுவதற்கு சரியான காரணமாகாது. கலியுகத்தில் நாம் மிருகங்களின் பாஷையை அறிந்துகொள்ள சக்தி அற்றவர்களாய்விட்டோம். அல்லது மிருகங்களுக்கு ஸ்பஷ்டமாக பேசுந் திறமை குறைந்துவிட்டது என்று சொல்லலாம். இரண்டையும் காரணமாக நாம் சேர்த்துச் சொல்லுகிறோம். ஆராய்ச்சி வல்லவர்கள் இவ்விஷயத்தில் பிராணிகளுக்கும் பாஷை இருந்துவருவதை அங்கீகரிக்கின்றனர்.

(தொடரும்)

மனுஸ்மிருதி அத்தியாயம் (3)
சில வசனங்கள்

1. இப்பதினாறு ராத்ரிக்குள் முதல் நான்கு, பதினொன்று பதினாறு இவைகள் தள்ளப்படவேண்டும் என்றும் மிகுதி பத்து ராத்திரிகள் சிலாக்யமானவை என்றும் சொல்லப்படுகின்றது.

2. இந்த பத்துராத்ரிகளுக்குள் ஆறு, எட்டு முதலான இரட்டைப்பட்ட ராத்திரிகளில் ஆண் ஸந்ததியும், ஐந்து, ஏழு முதலிய ஒற்றைப்பட்ட இராத்திரிகளில் பெண் ஸந்ததியும் ஜனிக்கும். புத்ர இச்சையுள்ளவன் ருதுகாலத்தில் இரட்டைப்பட்ட ராத்திரிகளில் பத்னியிடம் செல்லவேண்டும்.

3. மேற்சொல்லிய நிஷித்த இரவுகளில் ஸ்திரீ ஸம்ஸர்க்கம் செய்யாதவன் எந்த ஆச்ரமத்தில் இருந்தாலும் பிரம்மசாரிக்கு ஒப்பானவன்.

4. தர்மம் தெரிந்த தகப்பன் பெண்ணுக்கு அணுவாகிலும் சுல்கம் வாங்கான். பேராசையால் சுல்கம் வாங்குகிறவன் குழந்தையை விற்கும் தோஷத்துக்குள்ளாவான்.

5. முட்டாள் தனமாய் ஸ்திரீக்கு ஏற்பட்ட சொத்தை வண்டியோ வஸ்திரமோ உபயோகப்படுத்தி காலக்ஷேபம் செய்பவன் பாவியாகி நரகத்தை அனுபவிப்பான்.

6. கன்னிகைக்காக வரன் கொடுத்த சொத்தை உபயோகப்படுத்தாமல் திரும்பக் கொடுத்துவிடுகிறவனுக்கு கன்னிகை விற்

கும் தோஷம் வரா? அப்படிச் செய்வது கன்னிகைக்கு மரியாதை பிரீதி அன்புகாட்டுவதுக்கு ஒப்பானது.

7, தகப்பன், ஸஹோதரன், பதி, மைத்துனன், இவர்கள் தங்கள் க்ஷேமத்திற்காகவே ஸதிரீயைப் பூஜித்து அலங்கரிக்க வேண்டும்,

8 ஸ்திரீகளை கௌரவப்படுத்தினால் தேவதைகள் திருப்தி அடைவார்கள். அவர்களுக்கு கௌரவமில்லாத இடத்தில் ஒரு தர்மகாரியமும் பலிக்காது.

9. விட்டிலிருக்கும் ஸ்திரீகள் துக்கமடைந்தால் குலமே சீக்கிரம் நசிக்கும். அவர்களுக்கு துக்கமற்ற குடும்பம் விருத்தி அடையும்.

10. ஸ்திரீவர்க்கம் பூஜிக்கப்படாமல் எந்த கிரஹத்தை சபிக்கிறதோ அந்தக் கிரஹம் சூன்யம் வைக்கப்பட்டதுபோல் அடியோடு நசிக்கும்.

R. ஸ்வாமினாதய்யர்

சிறுவருக்கான சிறுகதைக்கொத்து.

காமத்தை ஜயித்த அர்ஜுனன்.

1- அர்ஜுனனுக்குப் பரமசிவன் பாசுபதாஸ்த்ரம் தந்தாரல்லவர்? ஸகல தேவரும் தன் தன் அஸ்த்ரத்தையும் கொடுத்தனர். உடனே இந்த்ரன் தேரோட்டியாகிய மாதலி வந்தான்: உன் பிதா உன்னை ஸ்வர்க்கத்திற்கு அழைத்துவரச்சொன்னார் என்றான். சரீரத்துடன் ஸ்வர்க்கம் செல்வது யாருக்கு முடியும்? அதிலும் இந்திரன் தேரிலே செல்வது ஸுலபமா?

2. அர்ஜுனன் மஹா புண்யசாலி. ஸ்வர்க்கம் சென்றான். அங்கே உள்ள அத்புத வஸ்துக்களைப் பார்த்தான். அமராவதி என்று இந்த்ரன் பட்டணத்திற்குப் பெயர். அங்கே கந்தர்வர் கின்னரர் முதலிய பல தேவ ஜாதிகளிருந்தன. இந்த்ரனைத் தர்சித்து நமஸ்கரித்தான். அவர் உத்திரவுபடி அர்க்யம் பாத்யம் முதலியவைகள் அர்ஜுனனுக்குக் கொடுத்தார்கள். அதை ஏற்றுக்கொண்டான்.

3. நாட்யம் பாட்டு முதலியவைகளைக் கற்றுக்கொடுக்கும்படி சித்ரஸேனனுக்கு உத்திரவிட்டான். அர்ஜுனன் அஸ்த்ர சஸ்த்ரங்களையும் கற்றான். ஐந்துவர்ஷமங்கே இருந்தான். அப்ஸரஸுகளது ஆடல் பாடல்களைப் பார்த்தான். ஊர்வசீ என்று ஓர் அப்ஸரஸ். அவள் மிக்க அழகுள்ளவள். நாராயண ரிஷியின் துடையிலிருந்து பிறந்தவள். அவளும் ஆடினாள்.

4. அர்ஜுனன் அவளை உற்றுப்பார்த்தான். இதை இந்த்ரன் கவனித்தான். சித்ரஸேனனை அழைத்தான். ஊர்வசியை அர்ஜுனனுடன் போகும்படி சொல் என்றான். அவள் தேவதாஸி அல்லவா? இயற்கையிலே அழகுள்ளவள். அர்ஜுனனை மயக்கவேண்டுமென்று இன்னும் அழகு செய்துகொண்டாள். நடு ராத்திரியில் பார்த்தனிடம் சென்றாள்.

5. இவள் வந்ததை வாசக்காப்பவன் அவனிடமறிவித்தான். உடனே எழுந்து அன்புடன் அவளை எதிர்கொண்டழைத்தான். ஸாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்தான். இதைக்கண்ட ஊர்வசி ஆச்சரியப்பட்டாள். இந்த்ரனே தன்னை அவனுக்குப் போகத்திற்காக அனுப்பியதாகச் சொன்னாள். அதைக் கேட்டவுடன் இரு காதுகளையும் மூடிக்கொண்டான்,

6. ஆஹா! இஃதென்ன ஆச்சரியம்! தாயைப் பெண்டாளுபவன் உண்டோ? குந்தி இந்த்ராணிகளைப்போல் நீயும் என் தாயே ஆவாய்! என்றான். ஊர்வசீ, இங்கு அந்த தர்மமில்லை. புண்யம் செய்தால் போதும். தந்தையும் பிள்ளையும் என்னை ஏற்பர். உன்னிடம் ஆசையுடன் வந்த என்னை இழக்காதே! ஏற்றுக்கொள் என வேண்டினாள்.

7. இந்த்ரனுக்கு ப்ரியமானவள் என்பதுமாத்ரமல்ல. என் வம்சத்திற்குக் காரணமானவர் பூரூரவஸ். அவர் உன்னை மணந்து பூமியில் வம்சத்தை விருத்திசெய்தார். அந்த வம்சத்திலே பிறந்த நான் உன்னை எப்படி மணப்பதென்று அர்ஜுனன் கூறினான்? ஊர்வசி ஆனால் நானுடும்போது என்னை ஏன் உற்றுப்பார்த்தாய்.

7. என் வம்சத்தைப் படைத்தவள், என்று பகுமானத்துடன் குழந்தை தாயைப்போல் பார்த்தேன் என்றான். அவள் என்ன சொல்லியும் அவன் கேட்கவில்லை. அவளுக்குக் கோபம் வந்தது. நீ பேடியாகி பெண்கள் நடுவில் ஆடிப்பாடி நிற்பாய் என்று சபித்து வீடு சென்றாள். அர்ஜுனன் இதென்ன இப்படி நேர்ந்தது?

8. என சிந்தைகொண்டான். காலே எழுந்து சித்ரஸேன னிடம் நடந்ததைக் கூறினன். அவன் இந்த்ரனிடம் இவனே அழைத்துச் சென்றான். எல்லோரும் இவனது செயலைக்கண்டு ஆச்சரியமடைந்தனர். அவனைக் கொண்டாடினர். அப்ஸரஸ் தானே வந்து அழைத்தும், பல நீதிவழிகளைக் காட்டியும் தர்மம் தவறு திருந்தாய்.

9. இப்படிப்பட்ட பரீக்ஷை காலத்திலேதான் ஒருவனது தர்மத்தைப் பார்க்கவேண்டும். அர்ஜுந! உன்னைப்போல் உத்தமன் ஒருவனுமிரான். உன்னைப் பெற்றெடுத்த குந்தியே பாக்ய சாலி என வாயார வாழ்த்தினர். சாபத்தைப்பற்றி அஞ்சாதே. தர்மந்தவறாத ஒருவன் எதற்கும் பயப்படவேண்டாம்.

10. இந்த சாபத்தை நீ ஒரு வருஷம் அநுபவி போதும். அதுவும் உனக்கு அனுகூலமாகவே இருக்கும் என இந்த்ரன் ஆசிர்வதித்தார், பாண்டவர் பனிரண்டு வருஷம் வனத்திலும் ஓராண்டு மறைந்தும் வஸிக்கவேண்டுமென்பது சூதாட்டத்தால் ஏற்பட்ட நியாயமல்லவா ? அழகுள்ள அர்ஜுனன் எப்படி மாறு வேஷம் போடுவது ?

11. அந்த ஸமயத்திற்கு இந்த பேடி வேஷம் உதவியது. காமத்தை ஜயித்ததனுலுண்டான மேன்மையைப்பாருங்கள்.

வே. ஸோமதேவசர்மா.

மலையாளத்தில் ஸநாதர்ம ப்ரசாரம்.

ஸ்ரீ காஞ்சிகாமகோடிபீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கரா சார்ஸ்வாமிகளின் பூர்ண ஆசிர்வாதத்தைப் பெற்று சென்னையிலிருந்து ஸ்ரீமான்களான வக்கீல் தார்மிக துரந்தர டி. ஆர். ராமச்சந்திரய்யரவர்கள், தில்லைஸ்தானம் சுப்ரமணிய அய்யாவர்கள், வக்கீல் இராஜகோபாலய்யர், வக்கீல் சிவராமகிருஷ்ணய்யர். திருப்புகழ்மணி டி. எம். கிருஷ்ணசாமி அய்யர், எம். கே. ஆசாரியார், ஸாஹித்ய வாங்முகபூஷணம் வே. சோமதேவசர்மா, கே. ஜயராமய்யர் முதலியவர்கள் தர்மப்ரசாரத்துக்காக 9உ ஸெப்டம்பர் சனிக்கிழமை பாலக்காடு வந்து சேர்ந்தனர்.

10உ மாலை நூரணிஹைஸ்கூலில் ஸ்ரீமான் ராமச்சந்திர அய்யர் அவர்கள் தலைமையின் கீழ் ஓர் பெரும் கூட்டம் கூடிற்று,

டி. எம். கிருஷ்ணசாமி அய்யரவர்கள், டி. ஆர். கிருஷ்ணசாமியய்யர், முனிசிபல் சேர்மென் எஸ். கே. ராமஸ்வாமி அய்யரவர்கள், வே. சோமதேவசர்மா அவர்கள் பலர் சனாதனதர்மம், தீண்டாமை, ஆலயப்ரவேசம் முதலியவைகளைப்பற்றி விரிவாகப்பேசினர். ஆலய ப்ரவேசசட்டத்தைக்கண்டித்து கரகோஷத்தோடு ஏகமனதுடன் ஷை தீர்மானம் நிறைவேறியது. இராஜப்ரதிநிதிக்கும் கவர்னருக்கும் தந்தி அனுப்பட்டது.

குருவாயூர்.

11உ ஷை கோஷ்டி குருவாயூருக்கு காலை 9-மணிக்கு விஜயம் செய்தது. ப்ரபலவியாபாரியான ஸ்ரீமான் அப்பய்யர் டாக்டர்சங்கரய்யர், K.V. சுப்ரமணிஅய்யர், முதலிய பற்பல வக்கீல்களும் ஆயிரக்கணக்கான மகாஜனங்களும் கூடி வரவேற்றனர். கோட்டைக்கல் அரண்மனை வீராயன் ராஜா அவர்கள், அக்ராஸனம் வகிக்க டி. ஆர். ராமச்சந்திரய்யர் எஸ். சுப்ரமண்யய்யர், டாக்டர் சங்கரய்யர், தெக்காடு கோவிந்தமேனன், கே. வீ. சுப்ரமணியய்யர், வே, சோமதேவசர்மா, கிருஷ்ணசாமிசாஸ்திரிகள், N.S முதலியவர்கள் விஸ்தாரமாக உபன்யாசம்செய்து ஆலயப்ரவேச மசோதாவைக் கண்டித்து ஏகமனதாய் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி கவர்னர், ராஜப்ரதிநிதி, ஜாமொரின் முதலியவர்களுக்கு அனுப்பப்பட்டது.

ஆலயத்தில் உபன்யாசம்.

ஷை ஆலயத்தில் 5-மணிக்கு குருவாயூர் அப்பாலயத்தில் ஆஸ்தான வித்வான் ஸ்ரீமான் லக்ஷ்மீநாராயணசாஸ்திரிகளவர்கள் அக்ராஸனத்தின்கீழ் கோவிந்தமேனன், சோமதேவ சர்மா, முதலியோர் அறிய உபன்யாஸம் செய்தனர். பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் மறுபடியும் உபன்யாஸம் செய்யவேண்டுமென்று பிரார்த்திக்க அன்றிரவும் ஷை சர்மாவால் விரிவாக உபன்யசிக்கப்பட்டு மிக்க பக்திசிரத்தையுடன் ஆயிரக்கணக்கான ஜனங்களால் கேழ்க்கப்பட்டு ஷை மசோதா கண்டனம் ஷையார்களுக்கு அனுப்பப்பட்டது.

கே. ஜேயராமய்யர்.

வாரவிருத்தாந்தம்.

பாராட்டல். 6உ ஸ்ரீ ஜகத்குரு காஞ்சிகாமகோடிபீடாதிபதி ஸ்ரீ சங்காசார்யஸ்வாமிகள் குருவாயூர் ஸ்ரீ கிருஷ்ண ஆலயதர்ம கர்த்தாவான ஜாமெரினுக்கும் கள்ளிக்கோட்டைத் தம்பிரானுக்கும் அவரது தார்மிகச் செயலை ஆதரித்துப் பாராட்டி ஓர் தந்தி அனுப்பினர்கள். தார்மிகரை மிகவும் பாராட்டுபவர், ஜாமரின் தர்மம் குறையும்போது தான் அவதரித்து அதைப் பரிபாலிப்பதாகக் கூறிய ஸ்ரீ கிருஷ்ண ஆலயத்தையே பரிபாலனம் செய்யும் பாக்யத்தைப் பெற்ருர். அத்துடன் ஸ்ரீ பரமாசார்யாள் போன்ற ப்ரத்யக்ஷ தைவத்தின் ஆசீர்வாதத்தையும் பெருகிருர்.

சட்டமும் ஏற்காது 7உ தார்மிக தூர்ந்தார் ஸ்ரீமான் டி, ஆர், ராமச்சந்திரய்யர்வாள் ஜாமெரினுக்கு எழுதியகடிதத்தில் ராமனுதபுரம் ராஜா காடார்களை ஆலயத்தில் விட ஓர் ஸமாதானம் செய்ததாகவும் அது சீமையிலுள்ள ப்ரீவிகௌன்ஸில் ஸ்தானத்தாலும் தப்பெனத் தள்ளப்பட்டதென்பதைக் குறித்திருக்கிருர். சட்டத்தில் சிறந்தவர் சட்டரீதியாக எடுத்துக்காட்டியது நியாயமே. தர்மமும் சட்டமும் இடங்கொடா: ஒன்றைப் பிடிவாதம் செய்வதழகல்ல

பலத்த ஆக்ஷேபம் 7உ சென்னை வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தின் சார்பாக இந்தியா சட்டசபையில் அங்கத்தினராக பல காலம் இருந்த ஸ்ரீமான் எம். கே. ஆசாரியரும் மாஜிதிவான்பேஷ்கார் என். சுப்பிரமணியய்யரும் சண்டாளரை ஆலயத்தில் விடும் விஷயமாக வரும் சட்டத்திற்கு இடமளிக்காதபடி ராஜப்ரதிநிதிக்கு தந்தி கொடுத்திருக்கின்றனர். ஸ்ரீரங்கம், காஞ்சி, திருவல்லிக்கேணி, ஆகிய இவ்விடங்களில் பல்லாயிரம் ஆஸ்திகர்கள் கூடி அதை எதிர்க்கின்றனர். இதில் ப்ரவேசிக்காமலிருப்பதுதான் ஸ்ரீ காந்திக்கும் அவர் கோஷ்டிக்கும் புத்திசாலித்தனமாகும்.

டாக்டரின் உபதேசம். 5உ கும்பகோணத்தில் ஓமோபாதி டாக்டர் பீடர்ஸ் என்பவர் மாணவர்களுக்கு உபன்யாசம் செய்தார். அதில் பஞ்சமரது நிலைமையை விளக்கி அவர்களது தைவமான வீரன் முதலானவர்களை விட்டுவிட்டால் அவர்கள் கதி என்னுகும்? என்பது போன்ற விஷயங்களை மாணவர் மனதில் நன்ருகத் தைக்குமாறு மிக அழகாக உபன்யாஸம் செய்தார். இது காலை மாணவருக்கு நல்லுபதேசம் செய்வது மிகஅவச்யமாகும்.

குருவாயூர் ஆலயம். 9உ ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கரபகவத் பாதாளது கடாக்ஷத்தைப் பெற்று ஓர் ஆஸ்திக கோஷ்டி ஷெ ஊருக்குக் கிளம்பிற்று. ஆங்குள்ள பக்தி வைதிகச்ரத்தை உத் ஸாகம் முதலியவைகளை விரிவாக அடுத்த வாரப் பத்திரிகையில் காணலாம். பத்ரிகைகளும் நிரூபர்களும் உண்மைக்கு மாறாக வும் ஸ்வல்பத்தை அதிகமாகக் காட்டியும் ஆர்பாட்டம்செய்வதால் ஆஸ்திகர் உள்ளம் அஞ்சும். நேரில் பார்த்தபிறகு ஆஸ்திகருக்கு உண்மையைக் கூறவேண்டுமானால் குருவாயூருக்கு அதனைச் சார் ந்த பல கிராமங்களும் ஆஸ்திகருக்குக் கோட்டை எனத்தகும். அதை எதிர்க்க எவராலும் இயலாது. ஜயம் நமக்கே.

வேதகாவ்ய விருத்தி. பாலக்காட்டிலுள்ள நூரணி அக்ர ஹாரத்தில் ஸ்ரீமான் அப்பாத்துரைபட்டர் அவர்களால் சுமார் 2-ஆண்டுகளாக மாணவர்களது நலத்தை நாடி ஓர் வேதகாவ்ய வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. நாற்பது பிள்ளைகளுக்குமேல் அவ சியமான வேதகாவ்யங்கள் கற்பிக்கப்படுகிறது. பொதுவாகப். பார்க்குமிடத்தில் இங்குசப்தாஹம்,வாரம் எனும் வேதபாராயணம் முதலிய ஆஸ்திகத்தின் லக்ஷணம் பல காணப்படுகிறன.

அப்ராம்மணர்களின் ஆதரவு 10உ குருவாயூரில்நடந்த ஸநா தன தர்ம ப்ரசாரசபையில் ஆயிரக்கணக்கான அப்ராம்மணசகோ தரர்கள் கூட இருந்தனர். அதில் தெக்காடு கோவிந்தமேனனெ ன்ற ஒருவர் மிக அழகாக தர்மத்தைத் தாங்கி எல்லையில் மிக அட ங்கிப் பேசினர். அந்த வகையைச் சார்ந்த பெண்மக்களும் மிக்க பக்தியுடன் கிருஷ்ணனே ப்ரத்யக்ஷமாக வந்தார் என உபந்யாஸ கரைக்கொண்டாடி வணங்கினர்.

பலத்த தர்ம ப்ரசாரம். 16உ சென்னையிலிருந்து திருப்புகழ் கோஷ்டியும் ஸ்ரீமான் தர்ம்மரக்ஷாமணி பாலசுப்ரம்மண்ய அய்யர் முதலிய சுமார் 25-பேர் சேர்ந்த ஓர் கோஷ்டி குருவாயூரிலும்அத னருகிலுள்ள ப்ரதேசங்களிலும் உபன்யாசம் செய்யக் கிளம்பு கிறது. இவ்வளவுக்கும் ஆணிவேராயுள்ளது ஸ்ரீ ஜகத்குரு பகவத் பாதாளது பாததூளிஎன்பதை மறைப்பதற்கில்லை. ஸ்ரீபகவத்பாத தூளி உள்ளவரை தர்மத்திற்கு ஹானிவாராதென்பது திண்ணம்.

வெ. ஸோமதேவ சர்மா.

உ

மைசூர் மகாராஜா

மானஸ ஸரஸ், கைலாசபர்வதம் போய்வந்த யாத்திரை:—

தின விஷயக் குறிப்பு.

1931 ஜூன் 18உ—27உ மைசூரிலிருந்து ஆல்மோரா

1931ஞ ஜூன்-ீ 18உ மாலை 5-30, ஸ்பெஷல் டிரெயினில் மைஸூரிலிருந்துபுறப்பட்டுமறுநாள் காலை 6-55க்கு குண்டக்கல் சேர்ந்தோம். அங்கிருந்து உடனே மதுராஸ்மெயிலில் ஏறி ஜூன்20உகாலை 6-15க்குபம்பாய்போய்ச்சேர்ந்தோம். பம்பாயில் அப்பொழுது உஷ்ணம் அதிகம். அன்றிரவே B. B. & C. I. எல்லைமெயில்வண்டியில்சென்று ஜூன் 21உமாலை 5-43 மத்ராவை (Muttra) அடைந்தோம்.

அப்பொழுது மத்ராவில் உஷ்ணம் மிகுதி. புழுதியும் காற்றும் அதிகரித்து நிரம்ப அஸௌகரியம் நேர்ந்தது. அன்று இரவு புறப்பட்டு ஜூன் 22உ காலை 10-25, கத்கோடம் (Kath godam) சேர்ந்தோம். அன்று மாலை 1-க்கு அவ்விடம் விட்டு மாலை 5-க்கு ராணிகேட் (Ronikhet) சேர்ந்தோம். மறுநாள் அங்கு தங்கி ஜூன் 24உ ஆல்மோரு (Almora) போனோம். அவ்விடம் ராம்ஸே ஸேனாதிபதி(General Ramsay) ஒருஸமயம் வஸித்த ஸர்க்கியுட்ஹௌஸ் (Circuit House) என்றகிருஹத்தில் நாங்கள் இருந்து ஜூன் 27உ காலைவரையில் மேல்யாத்திரைக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தோம்.

மகாராஜா தயைகூர்ந்து எங்களுக்கும் எங்கள் வேலைக்காரர்களுக்கும் ஏராளமாய் குளிரடக்கும் போர்வைகளைக் கொடுத்தார். யாத்திரை மூழுவதும்எங்களைப்பாதுகாக்க உபகாரசம்பளம் பெற்ற மூன்று கூர்க்க யுத்தவீரர்களும் (Ghurkas) மூன்று குமானீஸ் போர்ச்சேவக வீரர்களும் (Kumaonese) நியமிக்கப்பட்டிருந்தார்கள். நாங்களும் அரண்மனையிலிருந்து குண்டு மருந்து முதலிய போர்க்கருவிகளைக் கொண்டுபோயிருந்தோம். என்னைத் தவிர மகா ராஜாவுடன் கீழ் குறிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்களும் வந்திருந்தார்கள்.

1. மகாராஜாவுக்கு உபகார்யதர்சி மகா-ா-ஸ்ரீ ஸாதக். Zஷா
2. உதவிப்படைத்தலைவர் கர்னல் A. V. சுப்பிரமண்ணிய ராஜ் அர்ஸ்.
3. இராணுவ உத்தியோகஸ்தர் S.கோபால்ராவ் அவர்கள்.
4. படைத்தலைவர் நாபிகான் அவர்கள்.
5. மைசூர் ஈட்டி ஸைந்ய உப தலைவர் ரங்கராஜ பகதூர் அவர்கள்.
6. மகாராஜா ஸ்வகீயகாரியதர்சி ஆபீஸ் மானேஜர் ம-ா-ஸ்ரீ A. வெங்கட சுப்பையா அவர்கள்.
7. மோக்டேசர் காஸ் ஸமுகம் மகா-ா-ா-ஸ்ரீ C. V. சுப்பிரமணியராஜ் அர்ஸ்.
8. மகாராஜாவின் ஸ்வகீய கார்யதர்சி ஆபீஸ் கிளார்க் மகா-ா-ா.ஸ்ரீ K. வெங்கட்ட ரங்கய்யா அவர்கள்.
9. உப அஸிஸ்டெண்டு ஸர்ஜன் மகா-ா-ா-ஸ்ரீ C. கிருஷ்ணப்பா அவர்கள்.

முன்சென்ற பதரி நாராயண யாத்திரையில் மகாராஜாவுக்கு விதேயராயிருந்த ஆல்மோரு (Almora) தாசில் மகா-ா-ா-ஸ்ரீ பிரதாபசிங் அவர்கள் இந்த யாத்திரையிலும் சாமான்களை சேகரம் செய்தல் அவைகளைக் கொண்டுபோதல் முதலிய ஏற்பாடுகளைச் செய்ய எங்களுடன் வரும்படி ஐக்கியமாகாண கவர்ண்மெண்டாரால் அதிகாரங்கொடுத்து அனுப்பப்பட்டார்.

1931 ஜூன் 27

ஆல்மோரு (Almora) விலிருந்து பரீசிஞு (Barechina)

இரவு 3 மணியில் எழுந்து 4-30 மணிக்கு புறப்படத் தயாராளேம். குதிரைகள் வந்திருக்கவில்லை. எங்களை அழைத்துப் போக ஆல்மோருதாசிலின் சப்பிரசியும் (Chaprassi) வரவில்லை.

அவர்கள் 5-30 மணிக்கு வந்த பிறகு நாங்கள் புறப்பட்டு சுமார் 8 மைலுக்கப்பாலுள்ள பரீசிஞுவை (Barechina) காலை 8 மணிக்கு அடைந்து அங்கே ஒரு மேட்டிலிருக்கும் காட்டு பங்களாவில் தங்கினோம். எங்கள் வழி நெடுக தேவதாரு மரங்கள்

இருந்தன. குன்று சரிவிலுள்ள ஸமதளங்களிலும், பள்ளத்தாக்கு களிலும் சாகுபடிப் பிரதேசங்கள் காணப்பட்டன. ஆல்மோறுவைவிட பள்ளத்திலிருப்பதால் பரீசினுவில் ஸூர்ய வெப்பம் மிகுதி. குதிரைசவாரி வழி கோணலாய் குன்றுகளின் பக்கமாய் செல்லுகிறது. ஸமீபத்தில் எதிரிலிருக்கும் ஒரு குன்றின்மேல் பின்ஸார் நிலம் (Binsar Estate) இருக்கிறது. அதில் ஒரு கனிவர்க்கத் தோட்டமும் பங்களாவும் உண்டு. இப் பங்களாவில் பூர்வத்தில் ராம்ஸே ஸேனாதிபதி (General Ramsay) வஸித்தார். அப்பிரதேசத்திலிருக்கும் ஜனங்கள் எங்கள் மகாராஜாவுக்கு பருத்த ஏலக்காய்களை பரிசளித்தார்கள். அன்றிரவு ஒருவகை குளிர்ச்சியாயிருந்தது. சந்திரன் நன்றாய் பிரகாசித்தது. அங்கிருந்த பள்ளத்தாக்குகளின் வழியாய் ஒரு சிற்றாறு ஓடிற்று. அப்பிரதேசங்களில் அப்பொழுது மூடுபனி வியாபித்திருந்தது. எங்கள் மூட்டை முடிச்சுகளை கோவேறு கழுதைகளைக்கொண்டு எடுத்துச்சென்றோம்.

1931 ஜுன் 28௳

பரீசினு (Barechina) விலிருந்து கனீரிசினு (Kanerichina)

இரவு 4 மணியில் பரீசினுவிலிருந்து 10, 11, மைலிலிருக்கும் அடுத்த தங்குமிடமாகிய கனீரிசினு (Kanerichina)வுக்குச்செல்ல புறப்பட்டோம். முதல் 3, 4, மைல் எங்கள் வழி முழுமையும் மேலுக்கு மேல் மேட்டில் ஏறவேண்டியதாயிருந்தது. பிறகு குளுமையான உச்சிப்பிரதேசம் வந்தோம். பாக்கி வழி பெரும்பாலும் பள்ளத்திலிறக்கம். வழிநெடுக தேவதாரு விருக்ஷங்கள் இருந்தன. பரீசினுவில் செய்ததுபோல் ஆங்கு காட்டில் மேட்டுப் பிரதேசத்திலுள்ள ஒரு பங்களாவில் தங்கினேம். அப்பிரதேசம் பக்கத்தாக்குகளில் தாழ்ந்திருப்பதால் பகலில் உஷ்ணம் அதி உக்கிரமாயிருந்தது. பக்கத்தில் ஒரு சிற்றாறும் ஓடுகிறது. அங்கே ஓடுக்கமான நெல்விளை நிலங்கள் அநேகம் காணப்படுகின்றன.

1931 ஜுன் 29௳

கனீரிசினு (Kanerichina) விலிருந்து கணேய் (Ganai)

கனீரிசினுவிலிருந்து இரவு 4 மணியில் புறப்பட்டோம். நேற்றுச் சொல்லிய ஆற்றின் மார்க்கமாய் சுமார் 4, 5, மைல்

நடந்துபோனோம். இருட்டாயிருந்ததால் ராந்தல் வெளிச்சம் வேண்டியிருந்தது. பிறகு ஸாயூநதிக்கு வந்து அதில் போட்டிருக்கும் நேர்த்தியான தொங்கும் பாலம்வழியாய் அவ்வாற்றைக் கடந்தோம். அப்பள்ளத்தாக்கு மிகவும் குறுகிக் கோணலாயிருந்ததால் அதிகாலையில்கூட மிக உஷ்ணமாயிருந்தது. ஆனால் ஸாயூநதிக்கு ஸமீபத்தில் அது அகண்டிருந்தது. ஸாயூநதியைக் கடந்த பிறகு சுமார் 2 மைல்தூரம் குதிரையின்மேல் சவாரி செய்து கொண்டு மேட்டில் ஏறவேண்டியதாயிருந்தது. 12 மைல் தூரம் சென்று காலை 8 மணியில் கணேய் (Ganai) போய் சேர்ந்து அக்காட்டிலிருக்கும் பங்களாவில் தங்கினோம்.

கணேய் உயர்ந்த பர்வத பிரதேசத்திலிருந்தும் பகலில் மிக உஷ்ணமானது. மாலையில் அக்கிராமக்குடிகள் அனைவரும் எங்கள் மகாராஜாவை தர்சித்து உபசரிக்க வந்தார்கள். மகாராஜாவும் கருணையுடன் அவர்களுடைய சுகவாழ்வைப்பற்றி விசாரித்தார்கள். அவர்கள் திரும்பும்முன் எங்கள் மகாராஜாவுக்கும் அவர்களின் கைலாஸ யாத்திரைக்கும் வெற்றி கூறி, 'ஜே'' கூப்பாடு போட்டார்கள். பிறகு மிகுந்த ஆநந்தத்துடன் அவர்கள் தங்கள் தங்கள் இடம் சென்றார்கள்.

1931 ஜூன் 30உ

கணே(Ganai) யிலிருந்து பேரிநாக் (Berinag)

இரவு 2-30 மணியில் எழுந்து காலைக்குவேண்டியஆடையை அணிந்துகொண்டோம். நல்லசந்திரவெளிச்சம் இருந்தது.உடனே 3-40 மணியில் கணேயை (Ganai) விட்டு பேரிநாக்கை (Berinag) நோக்கி சுமார் 6 மைல்தூரம் பள்ளத்தாக்கில் நடந்துசென்றோம். போகும்வழி பெரும்பாலும் ஸமதரையாயிருந்தது. பேரிநாக் (Berinag) ஸமீபத்தில்தான் சுமார் 3 மைல் தூரம் குதிரையின் மேல் ஏறிக்கொண்டு,செங்குத்தாயும் கோணலுமான மேட்டுவழியாக ஏறிச்செல்ல வேண்டியிருந்தது. ஆகமொத்தம் 12 மைல் சென்றுகாலை 8 மணிக்கு பேரிநாக் (Berinag) போனோம்.

வழியில் சிறு கிராமங்கள் உண்டு. அவைகளில் சாகுபடி செய்த துண்டு பூமிகளும் காணப்பட்டன. பேரிநாக் கணேயை விட உயரத்திலிருக்கிறது. அது அதைவிட குளிர்ந்தப்பிரதேசம்

அங்கே பெரிய தேவதாரு விருக்ஷங்களடர்ந்திருக்கின்றன. வழக்கம்போல் அக்காட்டிலிருக்கும் பங்களாவில் தங்கினேம். அங்கிருந்து பார்த்தால் பர்வதங்களும் பள்ளத்தாக்குகளும் வெகு நேர்த்தியாய் கண்ணிற்குத் தோன்றும். அங்கே எனக்கு ஓர் துரதிஷ்டம் நேர்ந்தது. என்னுடைகளிருந்த ஸ்டீல்பெட்டிகளை சுமந்துசென்ற கோவேறுகழுதை வழியில் இடறி விழவே என் மூட்டைபள்ளத்தாக்கில் 100 அடி கீழ்விழுந்துமிகக்கேடடைந்தது. கிராமத்தார்கள் பேரிகை அடித்துக்கொண்டு கூட்டமாய் வந்து மகாராஜாவை உபசரித்தார்கள். காலை 5 மணியில் மழை ஆரம்பம்செய்தது. எங்கள் யாத்திரையில் அதுதான் முதல் மழை. அங்கே தேயிலை சாகுபடி உண்டு அங்கிருந்து மூன்றுமைலில் சௌகூரி (Chowkoorie) என்ற இடத்தில் ஓர் பாற்சாலை (Dairy) இருக்கிறது. தக்கோர் தேவஸிம்ஹபிஷ்டு (Thakore Dev Singh Bhisht) என்ற தனம்மிகுந்த முதலாளிக்கு அந்த தேயிலை பிரதேசம், பாற்சாலை இரண்டும் சொந்தம். எங்கள் மகாராஜா அவருக்கு பேட்டியளித்தார்.

1931 ஜூலை 1௳

பேரிநாக் (Berinag) கிலிருந்து தால் (Thal)

இரவு 3-45 மணியில் பேரிநாக் (Berinag) கைவிட்டு சுமார் 7 மைல்தூரம் மேட்டிலிருந்து பள்ளத்தில் கால்நடையாய் சென்றேம். அங்கிருந்த ஆற்றை ஒரு சிறு மரப்பாலவழியாய்க்கடந்து பிறகு 3 மைல்தூரம் குதிரைமேல் மேடேறிச்சென்று காலை 7மணிக்கு மொத்தம் சுமார் 10மைலுக்கப்பாலுள்ள தால் (Thal) போய் அடைந்தோம். வழியில் மூன்று ஐரோப்பிய பாதிரிஸ்ரீகள் குடியிருந்து வந்ததைக்கண்டோம். அங்கிருந்த பங்களாவிலிருந்து கீழிருக்கும் பள்ளத்தாக்கையும் சுற்றிருக்கிறவைகளையும் நன்றாய் பார்த்து இருந்திருக்கலாம். அக்காக்ஷி மிக நேர்த்தியானது. பிற்பகல் அதிக உஷ்ணமாயிருந்தது. வடக்கே வெகுதூரத்தில் பனி மூடின மலை உச்சிகள் மாலை நேரத்தில் முதல் தடவை ஒரு மாதிரி க்ஷணநேரம் கண்ணுக்குப் புலப்பட்டன. கீழே பள்ளத்தாக்கில் 100 அடிக்குமேல் அகலமுள்ள ராமகங்கா (Ramganga) நதி ஓடுகிறது. அந்நதிக்கு ஓர் தொங்கும்பாலம் உண்டு. ராமகங்கா பின்வரும்காளிக்கு உபநதி.

1931 ஜூலை 2உ

தாலி (Thal) லிருந்து ஸாந்தியோ (Sandeo)

வழக்கம்போல் இரவு 3-45 மணிக்கு தாலே (Thal) விட்டு புறப்பட்டு பள்ளத்தாக்கில் இறங்கி ராமகங்கையைக் கடந்து குதிரைகளிலேறி முதலில் மூன்று மைல்தூரம் முழுமையும் மேட்டிலேறினோம். அதற்கப்பால் எங்கள் வழி அதிக செங்குத்தாயில்லை. அன்றைக்கு முதல்நாள் மழை பெய்திருந்ததால் வழி மிகக் குளிர்ச்சியாயிருந்தது. 10 மைல்தூரம் சென்று காலை 7 மணிக்கு ஸாந்தியோ(Sandeo)விலுள்ளபங்களாவுக்குப்போனோம். வழிநெடுக பச்சைப்புல், வெவ்வேறு தேவதாரு விருக்ஷம், கறுங்காலி மரம் இருந்தன. இதுவரை வந்ததில் இவ்வழிதான் மிக சீதளமானது. இப்பொழுது எங்களுக்குப் பிரியமான உதகமண்டல ஞாபகம் வந்தது. மாலையில் வெகு தூரத்தில் பனிமூடின நந்திதேவி (Nanda Devi) பஞ்சசூளி (Panchachuli)பிண்டாரி (Pindari) மலை உச்சிகள் கண்ணிற்கு மங்கலாய் தோன்றின. ஸமுத்திரமட்டத்திற்குமேல் ஸாந்தியோ சுமார் 6400 அடி உயரத்திலிருக்கிறது. சுற்றிருக்கும் பிரதேசங்கள் ஸாந்தியோ (Sandeo) விலிருப்பவர்களுக்கு வெகு அழகாய்த்தோன்றும்.

1931 ஜூலை 3உ

ஸாந்தியோ (Sandeo) விலிருந்து ஆஸ்காட் (Askot)

இரவு 2 மணிக்கு விழித்துக்கொண்டேன். அப்பொழுது மழை கனமாய் பெய்தது. அப்படியே 5-மணிவரையில் கனமாயிருந்து பிறகு தூறலாயிற்று. 5 மணியில் ஸாந்தியே (Sandeo) வை விட்டுப்போனோம். பெரும்பாலும் வழி ஸமவெளியில் சென்றது. இங்கும் அங்கும்தான் கொஞ்சம் மேடு இருந்தது. மழை தாங்கும் உடுப்பைத் தரித்துக்கொண்டு பெரும்பாலும் கால் நடையாய்ச்சென்று 9மைலுக்கப்பாலிருக்கும்ஆஸ்காட்டுக்கு (Askot) 8-மணிக்குப் போய்ச் சேர்ந்தோம். அங்கிருக்கும் பெரிய மிராசுதார் ராஜ்வார் விக்ரமபகதூர் பால் (Rajwar Vikram Bahadur Pal) எங்கள் மகாராஜாவை எதிர் கொண்டழைத்தார். பென்ஷனடைந்த டிப்டிகலெக்டர் குமாரகட்க ஸிம்ஹபால்



SUSPENSION BRIDGE—THAL TO SANDEO



HIS HIGHNESS AND THE RAJWAR FAMILY OF ASKOT

(Kumar khadga Singha Pal) என்ற அவருடைய மாமனும் எதிர்கொண்டு உபசரித்தார்.

பகல்முழுவதும் மழைபொழிந்தது. பள்ளத்தாக்கில் ஒருவித நெல் சாகுபடி செய்கிறார்கள். அப் பயிருக்கு நிலையான நீரிருப்புத் தேவையில்லை. இங்கே மாமரங்கள் மிகுதி. மழை பெய்தலால் அவ்விடம் குளிர்ந்திருந்தது. என் வாழ்க்கையில் இப்பொழுது தான் முதல் தடவை இங்கே எனக்கு இரண்டு அட்டைக்கடிகள் ஏற்பட்டன. ஒவ்வொரு காலிலும் ஒரு கடி ஏற்பட்டது. ஆஸ்காட் Askot ஸமுத்திரமட்டத்திற்குமேல் 5000 அடிஉயரமுள்ளது.

———

1931 ஜூலை 4உ

ஆஸ்காட் (Askot) டிலிருந்து பலவகாட் (Balavakot)

இரவு 3-30 மணிக்கு ஆஸ்காட்டை (Askot) விட்டு சுமார் 3-மைல் தூரம் ஒருசெங்குத்தான பள்ளத்தாக்கிலிறங்கிசிறுபாலம் போடப்பட்டதும் கர்ஜித்து வேகத்துடன் செல்லுவதுமான கௌரிகங்கா(Gowri Ganga) நதியைக்கடந்தோம். சுமார் ஒரு மைலுக்கப்பால் இவ்வாறு காளிங்கா (Kali Ganga) நதியுடன் சேருகிறது. கௌரிகங்கா நதியைத் தாண்டின பிறகு காளி நதியை எதிர் நோக்கி அதன் வலது பக்கமாய் மேடேறிச் செல்ல வேண்டியிருந்தது. போகும் வழி சில விடங்களில் மிக ஒடுங்கியும் முந்தினநாள் மழையால் அதிகமாக மண்குழம்புள்ளதாயுமிருந்தது. சிலவிடங்களில் எங்கள் வழி ஆற்றுத் தரைக்கு நூற்றுக் கணக்கான அடிகள் மேலிருந்தது. அருகிலுள்ள பள்ளத்தாக்கின் பக்கங்கள் கிட்டத் தட்ட நேர் செங்குத்தாயிருந்தன. எங்கள் குதிரைகளுக்கு அங்கே சற்றேனும் சறுக்கல் ஏற்பட்டால் மகாவிபத்து நேரும். இவ்விரண்டாறுகளும் சேருமிடத்திற்கு ஜால்ஜீவி (Jaljeevi) என்று பெயர். ஆங்கு அக்டோபர் மாதத்தில் சந்தையொன்று கூடும். அப்பொழுது ஆயிரக்கணக்கான ஜனங்கள் சேர்வார்கள். மேல் பிரதேசங்களிலிருக்கும் போதியர்கள் (Bhotias) டிபேட் (Tibet) சாமான்களை மிகுதியாகக் கொண்டு வந்து விற்று வேறு ஸாமான்களை வாங்கி தீவிரமான வியாபாரம் நடைபெறுகிறது. காலை 6-30 மணிக்கு 12-மைல் தூரத்திலுள்ள பலவக்காட்டை (Balavakot) ச் சேர்ந்தோம். காளிநதி அருகிலுள்ள

புல் சரிவில் பாளையமிறங்கினோம். மாலையில் அவ்விடம் அத்யந்தம் உஷ்ணமாயிருந்தது. காளிநதி ஜலம் மிகக் குழப்பானதாயிருந்தது. ஆங்கு காலிவீடுகள் அனேகமுண்டு. மாரிகாலத்தில் உயரத்திலுள்ள பயன்ஸ் (Byans) கர்பயங் (Garbayang) பிரதேசங்களில் தங்களுக்கிருக்கும் போதியர்கள் தங்கள் ஸ்திரமானவீடுகளை விட்டு மேற்சொல்லிய காலிவீடுகளில் வந்து வசிப்பது வழக்கம்.

1931 ஹு ஜுலைமீ 5உ

பலவக்காட்டிலிருந்து (Balavakot) தார்சூலா (Dharchula)

இரவு 3-45 மணிக்கு பலவக்காட்டை (Balavakot) விட்டு சுமார் 11-மைல் தூரம் சென்று அடுத்த தங்குமிடமாகிய தார்சூலாவை (Dharchula) காலை 7-30க்கு அடைந்தோம். எங்கள் வழி எல்லாவற்றையும் யோசித்தால் நன்றாயிருந்ததென்றே சொல்லவேண்டும். மேடேறுவதும் பள்ளமிறங்குவதும் அதிகமில்லை. ஸமதரைகளும் விசேஷமாயுண்டு. காளி நதியை தொடர்ந்தேசென்றது. காளிநதி சிலவிடங்களில் அகண்டும் சிலவிடங்களில் அகலமற்றும் எப்பொழுதும் கர்ஜித்து அலை மோதிக் கொண்டே விடாது போகிறது. கர்பயங் (Garbayang) வரையில் இந்த நதியையே நாங்கள் தொடர்ந்து செல்லவேண்டுமென்று தோன்றுகிறது. இறக்கங்களில் நதிக்கு வெகு சமீபத்தில் இருப்போம். ஏற்றங்களில் எங்கள் வழி நதிக்கு நூற்றுக்கணக்கான அடி களுக்கு மேல் உயர்ந்திருக்கும். நேபாள (Nepal) தேசத்திற்கும் இங்கிலீஷ்காரர் பரிபாலிக்கும் இந்தியாவுக்கும் (British India) காளிநதி எல்லையாயிருக்கிறது. அந்நதியின் எதிர்பக்கம் நேபாளத்தைச்(Nepal) சேர்ந்தது. தார்சூலா (Dharchula) வில் அப்பள்ளத்தாக்கு அகலமாயிருக்கிறது. எங்கள் பக்கம் சரிவாயும் செழிப்பானதாயுமிருக்கிறது. இதனில் நெல் பயிருண்டு. சோளம் ஏராளமாய் விளையும். வாழை, மா, எலுமிச்சை, கிச்சிலி இவைகளும் உண்டாகின்றன. நேபாள (Nepal) பக்கம் செங்குத்தானதென்றே சொல்லவேண்டும். எங்கள் மகாராஜா அவ்விடம் பள்ளிக்கூடத்தில் தங்கினார்கள். நாங்கள் கூடாரத்தில் தங்கினோம். எங்கள் கூடாரத்தருகில் காளிநதிக்கு குறுக்கே நேபாள (Nepal) தேசப் பக்கமாய் கயிறு வடம் அனேகங்

களை நிலைப்படுத்தியிருந்தார்கள். ஒரு கயிறுவடத்தில் Λ உருவமுள்ள ஓர் கட்டையை வைத்து அக்கட்டையின் இரு கிளைகளிலிருந்து ஒரு கயிற்றூஞ்சலைத் தொங்கவிட்டார்கள். குரங்கு போல் கை கால் விரல்களால் கயிறு வடத்தைப் பிடித்துக்கொண்டு ஆற்றை ஜனங்கள் குறுக்கிட்டுச் செல்லுகிறார்கள்.

தாண்டும்போது ஜனங்கள் கயிற்றூஞ்சலில் இடுப்பைத்தான் வைத்துக்கொள்ளுகிறார்கள். தைரியமற்றவர்களும் பெண்டுகளும் குறுக்குச்சட்டத்தில் உட்கார்ந்து கயிற்றூஞ்சலில் ஊஞ்லுடன் துணியால் சேர்த்துக் கட்டப்பட்டு குறுக்காக இழுக்கப்படுகிறார்கள். இது முற்காலத்திய ஏற்பாடு. மிக விபத்துள்ளது. ஸாக்ஷாத் கயிறுவடப் பாலம் போடுவதே நலம். அதில்லாமலிருப்பது கண்டு வருந்தினேன். காலை குளிர்ச்சியாயிருந்தது. ஆகாயத்தில் மேகம் கவிந்திருந்தது. பலவக்காட்டில் போல் (Balvakot) மாலை புழுக்கமாயிருந்தது. அப்பிரதேசம் ஸமுத்ர மட்டத்திற்கு மேல் 3000 அடி உயரத்தில் தான் இருக்கிறது அதைச் சுற்றி பர்வதங்களும் இருக்கின்றன. ஆகையால் தான் அவ்வளவு புழுக்கம். நேபாள (Nepal) தேசபக்கத்தில் நேபாள தேசத்து ஜட்ஜும் அவர் ஆபீஸ் கட்டிடமும் உண்டு. தார்சூலா (Darchula) காஷ்மீர தேசத்தின் (Kashmir) சில பாகங்களைப் போலிருக்கிறதாக நினைக்கலாம். மலை பக்கங்களிலுள்ள ஆறுகளின் தண்ணீரை நெல்வயல்களுக்குத் திருப்பி நெற்பயிரிடுகிறார்கள். எங்கள் மகாராஜா மாலையில் இராம கிருஷ்ண தபோவனத்தைச் சேர்ந்த அனுபவானந்த ஸ்வாமிக்கு பேட்டிகொடுத்தார்கள். அத்தபோவனம் கேலா (Khela) வுக்குப் போகும் வழியில் நாங்கள் இப்பொழுது இருக்குமிடத்திலிருந்து இரண்டு மைல் தூரத்தில் உள்ளது.

1931 ஞு ஜூலை 6ௗ

தார்சூலா(Dharchula)விலிருந்து கேலா(Khela)

அடுத்த மஜலியாகிய கேலா (Khela) வுக்கு நாங்கள் போகும் வழியானது பாரம் சுமக்கும் கோவேறு கழுதைக்கு ஏற்றதாயில்லை. ஆகையால் எங்கள் மூட்டை முடிச்சுகள்கூலிக்காரர்களால்

கொண்டுபோகப்பட்டது. காளிநதியைத் தொடர்ந்தே எங்கள் வழி சென்றது. அது அகலமானதல்ல. சிலவிடங்களில் 3-அடி மாத்திரம் அகலமுள்ளதாயும் சிலவிடங்களில் அதற்கும் குறைவாயும் இருந்தது. அது சுமார் 4-மைல் தூரம் போகக் கூடிய அகலமுள்ளது. கடைசி 4-மைல் தூரம் மிகசெங்குத்தான மேடாயும் கோணலாயுமிருந்தது. தவிர காடுமுரடான கற்களால் பாவப்பட்டும் வழுக்கலாயும் இருந்தது. அங்கிருந்து கீழேயுள்ள பள்ளத்தாக்கைப் பார்த்தால் கிறுகிறுப்புண்டாகும். தார்சூலா (Dharchula) விலிருந்து காலை 5-மணிக்குப் புறப்பட்டு 10-மைலுக்கப்பால் உள்ள கேலா (Khela) வுக்கு காலை 9-30 மணிக்கு வந்து சேர்ந்தோம். அப்பொழுது வெய்யில் மிகக் கடுமையாய் இருந்தது. கேலா (Khela) வைச் சுற்றி செங்குத்தான குன்றுகள் உண்டு. கூடாரம்போடக்கூட இடமில்லை. அவ்விடத்திய பட்வாரிக்கு (Patwari)ச்சொந்தமான சில வீடுகளில் தங்கினோம் உண்மையில் இன்று செய்த பிரயாணம் இதுவரையில் செய்த கஷ்டமான பிரயாணங்களில் ஒன்று. எங்கள்கூடாரத்திற்கு எதிர் பக்கத்திலுள்ள செங்குத்தான மேட்டுப் பிரதேசத்தின் வழியாய், அடுத்தமஜலிக்கு நாங்கள் போகவேண்டிய மிகக்கோணலானவழியானது கால்நடை வழிப்போக்கர்களுக்குஅத்யந்தம் அதைர்யத்தை உண்டு பண்ணத்தக்கது. கடல் மட்டத்திற்கு அவ்விடம் 5500-அடி மேலானது. ஆகையால் தார்சூலா (Dharchula) வைவிட அதிக சீதளமானது. இங்கு நாளையுமிருந்து புதிதாய் வேண்டிய குதிரைகளையும்,கூலிக்காரர்களையும்வேலையில் அமர்த்தப் போகிறோம்.

1931-ஹு ஜூலை 7உ கேலாவில் (Khela) தங்கல்

அன்று காலையெல்லாம் மப்பாயிருந்தது. 10-மணிக்குப் பிறகு வெய்யில் உபாயமாய் புறப்பட்டது. எங்கள் முன் தித்லா (Thithla)வுக்குச் சென்று எங்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்யத்தகுந்த ஆஸாமிகளை காலையிலேயே அனுப்பிவிட்டோம். பிற்பகலில் எங்கும் மப்பாயும் புழுக்கமாயும் இருந்தது.

1931ஹு 8உ

கேலா (Khela) விலிருந்து தித்லா (Thithla)

காலே5-மணிக்கு கேலா (Khela) வை விட்டு 8-மைல் தூரம் சென்று 9-30 மணிக்கு தித்லா (Thithla) போய்ச் சேர்ந்தோம். சுமார் ஒரு மைல் பள்ளத்தாக்கில் இறங்கி காளிநதிக்கு உபநதியாகிய ஒரு சிறு காட்டாற்றை பாலத்தின்மீது சென்று காடிச் சதே (Khadi Chadhi) என்று சொல்லப்பட்ட ஒரு செங்குத்தான மேட்டின் மேலேறினோம். அங்கிருக்கும் ஜனங்கள் அக் குன்றுகளின் மேல் வழக்கத்தினுல் வெகு லெகுவாய் ஏறுவார்கள். போடியா (Bhotia) குதிரைகள் கால்வழுவாமல் 13-மைல் உயரமுள்ள அக்குன்றுகளின் மீது நின்று நின்று நெடுமூச்சு விட்டுக் கொண்டு எங்களைக் கொண்டுபோய்ச் சேர்த்தன. அவைகளுக்கு லாடமில்லை. மற்றும் சிலவிடங்களில் ஏறியும் சிலவிடங்களில் இறங்கியும் சில நேர்த்தியான கிராமங்களைப் பார்த்தும் சில ஆறுகளைக்கடந்தும் நாங்கள் சேரவேண்டுமிடத்தைச்சேர்ந்தோம். முந்தின இரவு மழை கனமாய் பெய்து பூமியெங்கும் ஈரமாயிருந்தது. ஒரு சரிவான வெளியில் கூடாரமடித்தோம். குளிர் மிகுதியால் தகுந்த உடுப்புகளணிந்தோம். பிற்பகலில் கிராமவாஸிகள் அனேகர் மருந்துக்காக எங்களிடம்வந்தார்கள். நாங்களும் கூடியதைக்கொடுத்தோம். சிக்காளிகளுக்கு அம்மலை பிரதேசங்களில் சிகிச்சை ஸாதனங்கள் போதுமானவையில்லை. நாங்களிருந்தவிடத்திற்கு எதிரில் ஒரு குன்றின்மேல் ஒருவித தேவதாரு விருக்ஷம் அடர்ந்திருந்தது. அவ்விடம் 9000• அடி உயரத்திலிருந்தது. மஹாராஜா அவர்களின் உப-கார்யதரிசி(Mr. Sadeg-ZShah) சாடக் Z ஷா) அவர்கள் இந்த யாத்திரையைப் பற்றி இன்று ஒரு ஸாமான்ய கவனம் செய்தார்.

1931ஹு 9உ

தித்லா (Thithla) விருந்து கலஹார் (Galagar)

காலே 4-40 மணியில் தித்லா (Thithla)வை விட்டுப் புறப்பட்டோம். முதல் நாள் மழையால் குளிர் அதிகரித்திருந்தது. முதல் 4-மைல் தூரம் பள்ளத்திலேயே இறங்கிச் சென்றோம். சில நேர்த்தியான கிராமங்களைப் பார்த்தோம். ஆங்கு சாகுபடி நிலங்

கள் சிற்ருறுகள் இவைகளையும் கண்டோம். பிறகுசமார் 4-மைல் மேடேறிப்போனோம். இவ்வழி நெடுகிலுமுயர்ந்த மரங்கள் உண்டு. அவைகளின் இடையில் வளரும் பசும் பயிர்களும் வெண்மை,நீலம்முதலிய வர்ணங்களுடன்கூடிய காட்டு புஷ்பங்களும் ஏராளமாய்க்காணப்பட்டன. அழகானவும் நற்கந்தமுமுள்ள புஷ்பச் செடிகள் அனேகம் அங்கிருந்தன. அவைகளில் சில மரங்களின் அடியில் வளர்ந்தன. சிலவிடங்களில் மரங்களின்மீது அழகான கொடிகள் வளர்ந்து மூடிக்கொண்டிருந்தன. ஒல்லியான பசும் மூங்கில் கொத்துகளும் ஏராளமாயிருந்தன. கடல் மட்டத்துக்கு 10000-அடி உயரமேறி அக்குன்றின் உச்சியை அடைந்து பிறகு $1\frac{1}{2}$-மைல்இறங்கி ஒரு ஆற்றையும் கடக்க வேண்டியிருந்தது. பிறகு எங்கள் வழி சுளுவாய் இருந்தது. 11-மைல் சென்று 9.30க்கு கலகர் (Galagar) அடைந்தோம். நாங்கள் ஏறியும் இறங்கியும் சென்ற வழி மிக கசிவுள்ளது. அழுகி மடித்த இலைகள் மிகுதியாய் அங்கே கிடந்தன. ஆகிலும் காற்று அனுகூலமாய் அடித்தது. எங்களுக்கு களைப்பே உண்டாகவில்லை. வழி வழுக்கலாயும் இருந்தது. ஒரு பள்ளத்தாக்குக்கு மேல் சில சமதரைப்பிரசேத்தில் கூடாரம் அடித்தோம். ஆங்கு ஒரு காஷ்மீர தேசக்கூடாரந்தான் அடிக்கமுடிந்தது. அதற்குமேல் அடிக்க இடமில்லை. ஆகாயம் மப்பாயிருந்தது. அச்சமயம் குளிர்ச்சியும் இருந்தது. அவ்விடம் 8000-அடி உயரமுள்ளது. அவிடத்திலேயே போதிய (Bhotia) வியாபாரிகளும் கூடாரம் அடிப்பார்கள். ஆகையால் ஆங்கு ஈக்கள் மிகுதி. எங்கள் கூடாரத்திற்கெதிரே மேட்டில் மரங்களடர்ந்திருந்தன. உறுதியான எங்கள் குதிரைகள் கஷ்டப்பட்டு நெடுமூச்சுடன் எங்களை மேட்டில் ஏற்றிக்கொண்டுபோயின. பள்ளங்களிலோ நாங்களே நடந்து சென்ருேம்.

1931ஆ ஜூலைமீ 10உ

கலகாரிலிருந்து (Galagar) மல்பா(Malpa)

சுமார் காலை 5-மணியில் புறப்பட்டு 2-மைல் குதிரையின் மீது ஏறிச் சென்று காளியாற்றுத்தரையை நோக்கிக் கீழ்இறங்கினோம்- இவ்வழியில் குதிரைகளும் போக முடியாது. தண்டி (Dandies) களுக்குப் போகமுடியாது. ஆகையால் குதிரை



CROSSING THE KALI TO THE NEPAL SIDE
ON THE WAY TO MALPA

OURSELVES IN WARM CLOTHING AT GARBAYANG

யை விட்டு இறங்கினோம். வழியில் பெரும்பாலும் சிறுகற்கள் பரவியிருந்தன. வழி கோணலாயும் செங்குத்தாயும் இருந்ததுடன் முதல் நாள் பெய்த மழையால் வழுக்கலாயும் குழம்பாயும் இருந்தது. காளிநதி இரண்டு நாளாய் கண்ணில் படாமலிருந்து இன்று புலப்பட்டது. சுமார் 2மைல் ஜாக்கிரதையாய் இறக்கத்தில் சென்று தாற்காலிக பாலத்தின்வழியாய் காளியாற்றைக் கடந்து நேபால் (Nepal) பக்கம் போனோம். அப்படிச்செல்லாவிடில் தண்ணியற்றப் பிரதேசமான நிற்பாணி (Nirpani) வழியாய் 4-மைல் தூரம் குறுகின பாதையில் போகும்படி ஏற்படும். காளிநதியில் வெள்ளமிருந்தால் ஜனங்களுக்கு அவ்வாபத்தான வழியில் போகநேரும். ஆற்றின் வலதுகரையில் இப்படியும் அப்படியும் திரும்பி மேலும் கீழும் ஏறும் மாறுமாய் சிறுகற்கள் பெரிய கூழாங்கள் இவைகளின் மீது நடந்து சென்றோம். மறுபடியும் குறுகலான இடத்தில் காளியாற்றைக்கடந்து மேடேறியும் பள்ளமிறங்கியும் குறுகினபாதையாய் செங்குத்தான சரிவில் தொத்தித் தொத்தியேறினோம். அப்பொழுதெல்லாம் அபாயமிருந்துகொண்டே இருந்தது. இவ்வழியில்தான் அதிகடுமையான கஷ்டத்தை அனுபவித்தோம். மனோதைரியம் மற்றவர்களின் நிலைமை சொல்ல முடியாததாயிருந்தது. கடைசியில் 10-மைல் சென்று பிறகு காலை 9-30 மல்பா (Malpa) வை அடைந்தோம். இப்பாதையில் இரண்டு காட்டாறுகள் நேபால் (Nepal) பக்கமிருந்து ஒன்றும் எங்கள் பக்கமிருந்தே ஒன்றும் மேட்டிலிருந்து கீழ் ஓடி நீர்வீழ்ச்சியாகி காளிநதியுடன் சேருகின்றன. இவ்வாற்றின் கரையில் பாளையமிறங்கினோம். கல்லெறி தூரத்தில் வேறொரு காட்டாறும் அவ்வாற்றுடன் சேருகின்றன. எங்கள் குதிரைகளில் ஒன்று கட்டி (Khud) லிருந்து விழுந்து காயப்பட்டன. கற்பயங் (Garbayang) லிருந்து எங்களுபயோகத்திற்கு வந்த வேறொரு குதிரை வழியில் ஆற்றில் விழுந்து இறந்தது. இன்று யாத்திரையைப் பற்றி காபிடன் நாபிகான் (Capt. Nabi Khan) பின் காட்டிய கருத்துள்ள செய்யுளைச் செய்திருக்கிறார்:—

“கலகாரி (Galagar) லிருந்து கற்பயங் (Garbayang) வரையில் சிறிதும் பெரிதுமான கூழாங்கல்களின்மீது 8மைல்தவிழ்ந்து சென்றோம். அவ்வழிரோடேயல்ல. ரோட் என்று சொல்வது சுத்தப்பொய், பக்கமாய் சறுக்கினால் ஸ்வர்க்கம் சீக்கிரம் போக

லாம்: எங்களுடன் வந்த டாக்டரோ பத்தடிபோனால் பாதி மணி நிற்பார். எங்கள் பாதைஇருந்தது ஒருமைல்நேபாள தேசம்.ஜுலை 10வ ஒருபொழுதும் மறக்கத் தக்கதல்ல. அன்பான மகாராஜா முன் சென்று நடத்தினர். அவர் அன்பும் உருக்கமும் பேச்சுக் கெட்டாது. "கைலாஸபதியே" தாங்கள் தான் அம் மன்னரை விடாது காக்கவேண்டும். இதுதான் எங்கள் விண்ணப்பம்."

அம்மேடுகளில் அனேகமாய் புற்களுமில்லை விருக்ஷங்களும் ஸ்வல்பம்.

1931 ஜுலை 11வ
மல்பா (Malpa) விலிருந்து பூடி (Budi)

காலை 5மணிக்கு மல்பா (Malpa) வைவிட்டு 7மைல்சென்று 9மணிக்கு பூடி (Budi) யையடைந்தோம். இன்று யாத்திரையும் எவ்விஷயத்திலும் நேற்றுயாத்திரைக்கு இரண்டாவதுதான். ஒரு மைல் குதிரையின்மீதுசென்றோம். பிறகு சவாரி அபாயமானதால் நடந்தேபோனோம். வழி மிகக் குறுகலாய் வழக்கம்போல் செங் குத்தான மேட்டின் ஓரமாய்ச்சென்றது. அனேக விடங்களில் பூமி நழுவிச் சந்துகள் ஏற்பட்டிருந்தன. அச்சந்துகளுக்கு கனத்த மரப்பலகைப்பாலங்கள் போட்டிருந்தன. ஓரிடத்தில் நாங்கள் போன அடியோடு பின்புறம் ஓர் பெரிய பாறை மளமள வென்று முறிசப்தத்தோடு மேலிருந்து பள்ளத்தில் விழுந்தது வழிநெடுகிலும் மழையும் பெய்தது. மறுபடியும் பள்ளத்தாக்கில் காளிநதிஓரமாகச்சென்றோம். பள்ளத்திலிருந்துதிரும்பமேடேறும் பொழுது இருபக்கங்களிலும்பள்ளத்தாக்கு ஜலத்தின்மீது பெரிய பெரியபனிப்பாறைகளைப் பார்த்தோம். வழியில் விருக்ஷங்கள் வெ குவாய்இல்லை. பூடி (Budi) க்கு 3மைல் இப்பாலிருந்துகுதிரையின் மீதுசென்று பள்ளத்திலிறங்கி மரப்பாலம்போட்ட ஓர்பெரிய காட் டாறைக்கடந்து பிறகு ½மைல் ஏறி எங்கள் கூடாரம்சேர்ந்தோம். அக்கூடாரம் சுமார் 2 ஏகரா விஸ்தீர்ணமுள்ள ஸமநிலத்தில் நாட் டப்பட்டிருந்தது. அப் பூடி (Budi) கிராமம் மலையிறக்கத்திலிருக் கிறது. அது அழகானது. அதிலனேக சாகுபடி நிலங்களுண்டு. நாங்கள் தங்கினநிலத்தைச்சுற்றிகற்கள் ஒன்றின்மேல்ஒன்றாய்எற றப்பட்டு 4அடி உயரமுள்ள ஒரு காம்பௌண்டு சுவராயிருந்தன அதற்கு வெளியேஓடும் ஆற்றிலிருந்து வேண்டிய ஜலம் எடுத்துக்

கொண்டோம். சிலவிடங்களில்சமீபத்தில் ஜலம் அகப்படாமல் ஒரு மைலிலிருந்து கொண்டுவரவேண்டியிருந்தது. நேபால் (Nepal) பக்கம் பள்ளங்கண்ட விடங்களில் பெரிய பனிக்குவியல்களும் சிறு விருக்ஷங்களும் உண்டு. ஆங்கு எல்லாப்பக்கங்களிலும்காட்டுப்புஷ்பங்கள் மிகுதி. அவைகளின் பெயர் எனக்குத்தெரியவில்லை. மாலை 4-மணிவரையில் நல்ல சூர்யவெளிச்சமிருந்தது. பிறகு மப்பும் குளிர்ந்தகாற்று முண்டாயின. அவ்விடம் 9600 அடி உயரம் உள்ளது. மாலை சந்திரவெளிச்சத்தில் மப்பு விலகி, பனிமூடின மலையுச்சிகள் நேபால் (Napal) பக்கத்தில் கண்ணிற்குப் புலப்பட்டன.

1931ஆ ஜூலை 12உ
பூடி (Budi) யிலிருந்து கற்பயங் (Garbayang)

காலை 5-மணிக்கு பூடி (Budi)யை விட்டோம். ஒரு மைல் சென்று இரண்டு மைல் செங்குத்தான கோணவழியில் குதிரை மீதுபோய் பிறகு 2-மைல் சரிவிலிறங்கி 5.மைல் கற்பயங் கிராமத்திற்கு 7-30 மணிக்குப் போய்ச் சேர்ந்தோம். வழியில் பள்ளப்ரதேசங்களில்பனிக்குவியல்களும் சுமாராய்உயர்ந்திருந்த தேவதாரு விருக்ஷங்களும் தென்படக்காணப்பட்டன. கற்பயங் (Garbayang) கில் சாகுபடிக்கேற்ற சமநிலம் நிரம்பவிருந்தது. இங்கு இருப்பவைகளுள் கற்பயங் (Garbayang) பெரிய கிராமம். அது அழுக்கும் துர்வாஸனையும் உள்ளது. அங்கிருக்கும் ஜனங்கள் பெரும்பாலும் போதியர்கள் (Bhotias) திபதர்கள் (Tibetans) கூடியிருந்தார்கள். அனேகமாய் அவலக்ஷணமானவர்கள். அழுக்கானவர்கள். அங்கே ஒரு பள்ளிக்கூடம் இருந்தது. அதில் படித்தது 30-பிள்ளைகள். அவர்கள் நல்ல உணவைக் காணாதவர்கள். எங்கள் மஹாராஜாவை சங்கீதத்துடன் எதிர்கொண்டு உபசரித்தார்கள் பள்ளத்தாக்கில் சுற்றும் வயலுள்ள ஒரு சமவெளியில் நாங்கள் தங்கினோம். அங்கிருந்து காளிநதியை நன்றாய்பார்க்கலாம். இங்கே குளிர் மிகுதி. காலையில் சீதோஷ்ணஸ்திதி 56° பாரன்ஹீட்(Fahrenheet)இடத்தின்உயரம்10500அடி. மாலையில் டிபெடன்ஸ் (Tibetans)அவ்வூரில் செய்யப்படும் கம்பளித்துணி பாதரக்ஷைகளைக்கொண்டுவந்துவிற்றார்கள். அப்பாதரக்ஷை

யின் அடி கனமானக்கம்பளிச் சாட்டால்செய்யப்படுகிறது. அதன் மேல்பாகம் நானாவர்ணமான சகலாத்து, மக்மல் முதலியவற்றால் செய்யப்பட்டு முழங்கால் வரையில் செல்லக்கூடியதாயிருக்கும். அடி பாகம் சாதாரணமாய் $1\frac{1}{4}$ அங்குலமுள்ளது. அதைமெலிந்த தோலால்மூடுவதுண்டு. போதியர்களின் (Bhotias) 3ம் நாள் அபர க்ரியைநான்பார்க்க அப்பொழுது நேர்ந்தது. இக்கிரியையில் கட்டைகளைக் குவித்துஎரிக்கிறார்கள். அந்நெருப்பைச்சுற்றி பேரிகை தாளத்துடன் ஸ்திரீகள் புருஷர்கள் குழந்தைகள் யாவரும் பாடிக் கொண்டு நர்த்தனம் செய்கிறார்கள். நர்த்தனம் செய்யும்பொழுது அவர்கள் இடதுகையில் கேடகமும் வலதுகையில் உறையற்ற குத்துவாளும் இருக்கும். அடிக்கடி மாஸீஸாவிலிருந்து கிண்ணற்றில் சாராயம் எடுத்துக் குடிப்பார்கள். அச்சாராயம் புளித்துப் பொங்கின அரிசி ரஸம் வெல்லம் இவைகளிலிருந்து ஸர்கார் உத்திரவு அன்னியில் செய்யப்படுகிறது.

1931ஆ ஜூலை 13, 14உ

கற்பயங்கில் (Garbayang) தங்கல்.

இவ்விரண்டு நாளும் இவ்விடத்திலேயே தங்கினோம். நாங்கள் போகவேண்டிய வழியில் பாலம் ஒன்று ரிபேர் செய்யவேண்டியிருந்தது. இரவில் குளிர்ச்சி மிகுதி. காலை 8-மணிமுதல் 2-மணிவரை நல்ல வெயிலும் பிறகு வெயிலும் தூறலும் மாறி மாறி வந்தன.

டிபடன்ஸ் (Tibetans) சிலர்கள் தக்லகாட்டிலிருந்து எங்களுபயோகத்திற்காக குதிரைகளைக் கொண்டுவந்திருந்தார்கள். அவர்கள் தலையில் மயிரை வளர்த்து முன்னெற்றி மயிரை வகுத்து நம்முடைய தென்தேசசாஸ்திரீபோல் பின் பின்னலுடன் இருக்கிறார்கள். மேலுதட்டில் அவர்களுக்கு மயிரில்லை. தாடியும் இல்லை. அவர்கள் திடமானவர்கள். திபெட் (Tibit)கிராமத்தலைவன். ஒருவன் தக்லகாட்டிலிருந்து எங்களிடம் வந்தான். அவன் ராணுவத்தலைவனும். சர்க்கார் வேண்டும்பொழுது 1000 யுத்த வீரர்களை சேர்க்க வலிமையுள்ளவனும். அவனுடன் வேறொரு டிபடனும் (Tibetan) வந்தான். அவன் தனிகனென்று சொன்னார்கள், அவன் கட்டிக்கொண்டிருந்ததோ கந்தை. அவ்விரு



CROSSING THE KALI AT DHARCHULA

CROSSING THE KALI AT DHARCHULA

வர்களும் எங்கள் மகாராஜாவுக்கு மரியாதையிட்டு எங்களைக்கணக்கிட்டு எங்களுடனிருந்த போராயுதங்களையும் எங்கள் யாத்ரை நோக்கத்தையும் குறித்துக்கொண்டு போய்விட்டார்கள். மாலை 6 மணிக்கு ஐக்யமாகாண சங்கேய் (Sanghai) இராணி எங்கள்மகாராஜா தர்சனத்திற்கு வந்தாள். அவள் வயது முதிர்ந்தவள். போற்றத்தக்கவள். அவளும் கைலாஸயாத்திரைபோகிறவள். ஏற்கனவே சொல்லப்பட்ட குமாரகட்க ஸிம்ஹபால் (Kumar Khadga singh Pal) என்பவரும் அவளுடைய சௌகரியத்தை உத்தேசித்து கூட வந்தார். ஸூர்யாஸ்தமன வேளையில் மப்புவிலகி நேபாள தேசப்பக்கம் எங்கள் முன்னால் சில பனிமுடிமலைபுச்சிகள் வெகு நேர்த்தியாயும் தெளிவாயும் காணப்பட்டன.

14௳ காலை மிகுந்த சீதளமாயிருந்தது. 13௳ இரவில் மழை கனமாய் பெய்தது 14௳ காலை முழுவதும் தூரலாயிருந்தது. மகாராஜாவும் எங்களில் சிலரும் பள்ளத்தாக்கில் ஆற்றுத் தரைக்கு உலாவச் சென்றோம். எங்கள் முன் சென்று ஏற்பாடுசெய்யவேண்டியவர்கள் பகல் 12 மணிக்குப் புறப்பட்டுவிட்டார்கள். பிற்பகல் வெய்யிலாகவேயிருந்தது.

1931௵ ஜூலைமீ 15௳

கற்பயங்கி(Garbayang) லிருந்து காலபாணி(Kalapani)

காலை 6 மணிக்கு கற்பயங்கை (Garbayang) விட்டுசுமார் 10 மைல் சென்று $10\frac{1}{4}$-மணிக்கு காலபாணி (Kalapani) யை அடைந்தோம். முதலில் $\frac{1}{2}$ மைல் தூரம் காளிபாற்றின் தரைக்கு இறங்கிச் செல்லவேண்டியிருந்தது. வழி வழுக்கலானது. கொண்டையாணி அடித்த எங்கள் பாதரக்ஷையின் அடியில் சுமார் இரண்டங்குலக் களி ஒட்டிக்கொண்டது. பிறகு சுமார் ஒரு மைல்தூரம் காளியாறு போகும் வழியே சென்றோம். அப்புறம் பாதை குறுகலாயும் அபாயமானதாயுமிருந்ததால் ஆற்றைக் கடந்து நேபாள் (Nepal) பக்கம் சேர்ந்தோம். அப்பாதையில் செங்குத்தாய்ஏற வேண்டியதும் இறங்கவேண்டியதுமான அவசியமேயில்லை. பாதை பெரும்பாலும் ஸமதரையாகவே இருந்தது. இப்பொழுதுதான் நாங்கள் கற்பாரையில் போகலாச்சுது. அனேகவிடங்களில் குதிரையின் மீதோ தண்டிலோ (Dandie) போவது

அஸாத்யம். உயர்ந்த பிரதேசமானதால் அங்கிருக்கும் வாயுமெலிந்தது. கால் நடையால் அவ்விடம் செல்வது ஆயாசமானது நேபாள் (Nepal) பக்கம்காளி நதிக்கரை நெடுக 2-பர்லாங் அகலமுள்ள, துண்டு நிலம் ஒன்று இருந்தது- அது நன்ருய் பயிரடப் பட்டது. இருபக்கங்களிலும் தேவதாரு மரங்கள் அனேகமுண்டு ஆனல் ராணிகேட்டில் (Ranikhet) போல் அவைகள் நன்ருய் வளர்ந்தவைகளல்ல. வெண்மையான காட்டுரோஜா ஆங்கு மிகுதி வெண்மை, மஞ்சள், சிகப்பு, நீலம், முதலிய நிறமுள்ள புஷ்பங்களுள்ள செடிகளும் மிகுதி. நேபாள ராஜ்யத்தில் சுமார் 5-மைல் சென்று கொஞ்சம் களைப்படைந்து முன்னிருந்த பக்கமே திரும்பவும் வந்தோம். காலபாணி (Kalapani) யில் காளிநதியைக்கடந்தோம்.

ஆற்றுத் தரைக்கு 50-அடிமேல் ஒரு ஸமதரை நிலத்தில் நாங்கள் பாளையமிறங்கினேம். எங்கள் கூடாரத்திற்குப் பின் ஒரு ஊற்றிலிருந்து சிற்ருறுகிளம்புகிறது. அதுதான் காளி நதிக்குக் காரணம். இதிலிருந்து எங்களுக்கு வேண்டிய ஜலம் கிடைத்தது. பாதையில் செங்குத்தாய் திடீரென்று திரும்பவேண்டிய ஓரிடத்தில் என் குதிரை முழுந்தாட்படியிட்டுச் சென்றது. அப்பொழுது என் பாதம் அங்கபடியில் அகப்பட்டு அச்சேணம் இடது பக்கமாய் நழுவி விழுந்தது, அதிருஷ்டவசமாய் வேலைக்காரர்கள் எனக்கு உதவிபுரிந்தார்கள். மெள்ள விடுவித்துக்கொண்டு காயமன்னியில் கிளம்பினேன். பிற்பகல் முழுமையும் நல்ல வெயிலிருந்தது. முன் பாளையத்திலிருந்ததுபோல் குளிர்ச்சி மிகுதியாயில்லை. மலைகளின்மேல் குழிவானவிடங்களில் பனிக் குவியல்கள் உண்டு. போகும் வழியில் பனிக்குவியல் ஒன்றை தாண்டிச் செல்லவேண்டியிருந்தது. கீழ்பள்ளத்தாக்கில் ஓடும் விரைவான ஆறு காளிக்கு உபநதி. நாங்கள் இப்பொழுது இருக்குமிடம் 12000-அடி உயரமுள்ளது. எங்களில சிலருக்கு கொஞ்சம் கிறுகிறுப்பு உண்டாயிற்று.

1931-ஷு ஜூலை 16உ.

காலபாணி (Kalapani)யிலிருந்து ஸயங்சம்(Siangchum)

இரவு 3மணிக்கு நாங்களெல்லோரும் படுக்கையை விட்டு எழுந்தோம். 4-30 மணிக்கு கோவேறு கழுதைகள் எங்கள்

மூட்டை முடிச்சுகளுடன் புறப்பட்டன. நாங்களும் 5மணிக்குக் கிளம்பி 5,6 மைலுக்கப்பாலிருக்கும்ஸயங்சமுக்கு (Siangchum) 7-45 மணியில் போய்ச் சேர்ந்தோம். எங்கள் வழியில் பாதி சமவெளியில் சென்றது. ஆனால் சிறிதும் பெரிதுமான விடுபட்ட கூழாங்கற்களால் அது நிறைந்திருந்தது. அதனால் எங்கள் நடை வேகம் மிகவும் குறைவுபட்டது.

வழியில் மலையருவிகள் அனேகங்களைக் கடந்து செல்ல வேண்டியிருந்தது. அங்கு குட்டைச் செடிகளைத் தவிற மரங்களே இல்லை. குன்றுகளில் புல் அருமை. ஆனால் இங்குமங்கும் புல்லுள்ள துண்டுப் பிரதேசங்களுண்டு. உறைந்த பனிப் பிரதேசங்களுமுண்டு. எங்களதிர்ஷ்டம் அப்போது மழையில்லை. கடைசி 2½ மைல் யாத்திரையும் மலையருவி ஒன்றினுடன் நெடுக பிரயாசைப்பட்டுச் செல்லலாயிற்று. கடைசியில் பாளையம் இறங்க வேண்டிய இடம் போய்ச் சேர்ந்தோம். அது சுமார் 10 ஏகரா விஸ்தீர்ணமுள்ள சரிவான பிரதேசம். ஸயாங்சம் (Siangchum) கேவலம் தங்கலிடம். ஆங்கு வீடுகளில்லை. சாகுபடி நிலமும் இல்லை. வழியில் போதிய (Bhotias) கணங்களைக் கண்டோம். அவர்கள் கோவேறு கழுதைகளின் மீது பாரமேற்றிக்கொண்டு கழுதைகள் ஆட்டு மந்தைகள் ஸஹிதம் பாளையமிறங்கியிருந்தார்கள். அவ்விடம் 1500 அடி உயரமுள்ளது, அதி சீதளமானது. எங்களுக்கு கல்லெரி தூரத்தில் உறைந்த பனிப் பிரதேசங்களிருந்தன. எங்களில் ஒருவர் Mr. வெங்கட்டராங்கய்யர் அவ்வுயர்ந்த பிரதேசத்தில் அவர் சரியாய் மூச்சுவிடமுடியாமல் மிகவும் சோர்வடைந்தார். அவரை மேலும் நெடுக அழைத்துப்போவது அபாயமென்றெண்ணி (Darchula) தார்சூலாவுக்குத் திரும்ப அனுப்பினோம். அங்கே இராமகிருஷ்ணதபோவனத்தில் ஒரு சிறு வைத்ய சாலையுண்டு.

1931ஸ் ஜூலைமீ 17உ

ஸயங்சமிலிருந்து (Siangchum) டக்லகாட் (Taklakot)

முதல் நாள் இரவு முழுவதும் எவ்வளவோ போர்வை போட்டுக்கொண்டும் எங்களால் குளிர்தாங்க முடியவில்லை. எங்களில் அனேகர்களுக்குத் தலைவலி ஏற்பட்டது. நன்ராய் தூக்கமும்வாவில்லை. இரவிலும் காலையிலும் தூறலுமிருந்தது. 4-மணிக்கு

எழுந்தபொழுது குளிர் மிகுதியாயிருந்து காலைக்குரிய ஆடையை அணிவது மிகக் கடினமாயிருந்தது. கொட்டும் மழையில் 5-20 மணிக்கு ஸயாங்சமை (Siangchum) விட்டு குதிரையின் மீது லிபுலேக் (Lipulekh Pass) கணவாய்க்குச் சென்றோம். அது 16750 அடி உயரமுள்ளது. போகும் வழி கோணலானது. வழுக்கலும மிகம், உறைந்த பனியோ வெகுதூரத்துக்கு வெகுதூரமிருந்தது குதிரைகளின் குளம்பு ஒரு அடிக்குமேல் பனியில் புதைந்தது. அவ்விடமோ எவ்விதத்திலும் புதுமையாயிருந்தது. எங்களுக்கு மூச்சுவிடுவது மிகக் கஷ்டம் எவ்வித பரிச்ரமும் அசாத்யம். கணவாய் பயங்கரமானது. எல்லாவற்றையும் கவனித்துப் பார்க்கும் போது ஈசுவரனுக்கு இவ்வளவு மகிமையா என்று எவனுக்கும் புலப்படாமலிராது.

கணவாய் நெடுக சப்தமேயில்லை. ஒருவித சலனமுமில்லை. அந்நிலைமை எங்களுக்குப் புதுமையாயிருந்ததேயொழிய அங்கிருப்பவர்களுக்கு அது ஸஹஜமாய்த்தானிருந்தது. அம்மேட்டைக் கடந்து ஒரு மைல் செங்குத்தாய் கீழிறங்கி ஒரு பள்ளத்தாக்கை அடைந்தோம். அங்கு ஓர் ஆறு ஓடிற்று- அதில் இருபக்கங்களிலும் மலைமேலிருந்து பனிஉறுகி சிற்றாறுகளாய் வந்து சேர்ந்தன. அந்த ஆறை அனுஸரித்து நெடுகச்சென்றோம். இப்பள்ளத்தாக்கு மிக அகலமானது. ஸமவெளியிலிருந்ததாகவே எண்ணினோம். அக்குன்றுகளில் ஒன்றும் காணப்படவில்லை. புல்கூட வளரவில்லை. தோற்றத்திலோ அவ்விடம் உதகமண்டலப் பிரதேசம்போலிருந்தது. சூரியன் உக்கிரமாயிருந்தது, அதில் 12 மைல் சென்று காலை 10-30-மணிக்கு தக்லகாட் (Taklakot) போய்ச்சேர்ந்தோம். லிபுலேக (Lipulekha Pass) கணவாய் இங்கிலீஷ்காரர் ஆளும் இந்தியாவுக்கும் டிபெட் (Tibet)க்கும் எல்லையாயிருந்தது. அவ்வாற்றிலிருந்து ஒரு நேர்த்தியான வாய்க்கால் ஓடி அனேக ஏகரா நிலங்களுக்கு பாசன சௌகரியத்துக்குதவுகிறது. அது ஒரு பெரியகிராமம் வீடுகள் மண், கல், இவைகளால் கட்டப்பட்டிருந்தன. கூரைகளோ மாவிட்டங்களின்மேல் மண்போட்டு அமைக்கப்பட்டவைகள். டிபெட்தேச கிராமத்தார்கள் மிக அவலக்ஷணமும் அழுக்குமுள்ளவர்கள். அவர்களின் நிறம் சுத்தக்கறுப்பு. பழுப்பு நிறமுமுண்டு. இடதுகாதில்பெரிய குண்டலங்கள்புருஷர்களுக்குண்டு. அக்கிராமம் கர்நாளிநதி (Karnali) வலதுபக்க

1 2 3 4 5 6 7 8 9 10 11 12

HIS HIGHNESS, THE JUNGPON & PARTY AT TAKLAKOT

1. The Jungpon's servant
2. Major S. Gopal Rao
3. Mr. Prathap Singh, Tahsildar
4. Lieut. Nanjaraj Bahadur
5. Col. A. V. Subramanyaraj Urs
6. Mr. Sadeg Z. Shah
7. Mr. N. Rangachar
8. Tibetan servant
9. His Highness the Maharaja
10. Tibetan officer
11. The Jungpon's daughter
12. The Jungpon

THE JUNGPON AND HIS DAUGHTER
WITH HIS DUCKS

மிருந்தது. அன்னதியின் இடதுபக்கம் ஓர் பெரிய ஸமவெளியில் நாங்கள் பாளையமிறங்கினோம். எங்கள் கூடாரம் பின்பக்கம் அதி சமீபத்தில் 300 அடி உயரமுள்ள மேடுஒன்று இருந்தது. அம் மேட்டில் டிபெட் (Tibet) கமிஷனர் மாஜிஸ்டிரேட் ஜங்பான் (Jungpon) இருந்தார். அவரிருந்தவிடம் கோட்டைபோலிருந்தது அதுடன் பௌத்தாச்ரமி மடம் ஒன்று சேர்ந்திருந்தது.

ஜங்பான் (Jungpon) மாலையில் எங்கள் மகாராஜாவின் பேட்டிக்கு வந்து இரத்தின கம்பளங்களை பரிசளித்தார். போடிய (Bhotia) மொழிபெயர்ப்பவர்கள் ஒத்தாசைசெய்து சிலநேரம் ஜங்பானும் மகாராஜாவும் சம்பாஷித்தார்கள். அவர்களைச்சேர்த்து சாயாபடம் (Group Photo) எடுத்தார்கள். அவர் 14, 15, வய துள்ள தன் பெண்ணைக்கூட அழைத்துவந்திருந்தார். எங்களிட மிருந்த இருவிழிக் கண்ணாடிகளிலும் (Binouolars) படமெடுக் குங்கருவிகளிலும் (Cameras) பற்றுக்காட்டினார்கள். ஆகிருதியில் அவர் உயர்ந்தவர். திருடாங்கர். அதிகாரம்செலுத்தப் பாங்குள் ளவர். குன்றுகள் எங்கும் உறைபனிப் பிரதேசங்கள் காணப் பட்டன. ஆங்கு மரங்களில்லை. புல்லுமிலலை. ஆனால், வாற் கோதுமை, பட்டாணி, முதலியவைபயிரிடப்பட்டன. டிபெடர்கள் அனேகர் பிரார்த்தனாசக்கிரங்களை உருட்டினார்கள். செம்மண் பூசப்பட்ட கற்கள் இங்குமங்கும் குவிக்கப்பட்டிருந்தன. அக் குவியல்களிடையில் கோல்கள் நாட்டப்பட்டிருந்தன. அக்கோல் களில் நாநாவர்ணமுள்ள கந்தைகள் கட்டப்பட்டிருந்தன. சில கற்களின்மேல் பௌத்தமதப் பிரார்த்தனைகள்செதுக்கப்பட்டிருந் தன. அவ்விடம் 13100 அடி உயரமிருந்தும ஸயாங்சம் (Siang-chum) இல் இருந்த குளிரில் பாதியில்லை.

1931 ஸு ஜூலைமீ 18௨ 19௨
தக்லகாட்டில் (Taklakot) தங்கல்

இரவு சீதளமாயிருந்தது. காலையில் சூரியன் நன்றாய்ப் பிர காசித்தது. அனாவசியமான போர்வைகளைத் தள்ளிவிட்டு காலை 8மணிக்கு ஜங்பான் (Jungpon) இருக்குமிடம் செல்லப் புறப் பட்டோம். எங்கள் வழி மேட்டில் கோணலாய்ச் சென்றது. அது ஒற்றையடிப்பாதை. தளர்ச்சியான கல்லுள்ள பூமி. மிக

வழுக்கலானது. மலைப்பக்கங்கள் தளர்ந்திருந்தன. அவை பூமி சரிந்து விழுந்ததாலுண்டாயின. இங்குமங்கும் குகைபோன்ற வீடுகளுண்டு. கோட்டைகளின் கொத்தளங்களைப் போலிருக்கும் துவாரங்கள் அவ் வீடுகளிலிருக்கின்றன. மலை உச்சியை அடைந்தவுடன் மகாராஜாவை ஜங்பான் (Jungpon) நன்முகங் கொடுத்தழைத்தார். குறுகலான வாயில் வழியாய் எங்களைத் தன்னிருப்பிடம் அழைத்துப்போனார். கதவைக்கடந்து படிகள் ஏறி ஓர்வித முற்றத்தில் புகுந்தோம். அது கோவேறு கழுதைகள் கட்டுமிடம். ஆங்கு ஓர் மேற்றளத்தில் அவருடைய உக்கிரமான டிபெட் தேச நாய் கட்டப்பட்டிருந்தது. அது எங்கள் மேற் பாய குரைத்துக்கொண்டு கயிற்றை இழுத்துப் போராடிக் கொண்டிருந்தது. அது கொழுத்த கருமை நிறமுள்ள நாய். கப்புக்காலுள்ளது. மயிர் நெருக்கமுள்ளது. அதன் தலை மிகப் பெரிது. அங்கிருந்தபடிகளேறி வேறொரு அழுக்கான முற்றத்திற்குச் சென்றோம். அங்கே இரும்பு வெள்ளி வேலை செய்யும் கம்மாளர்கள் (Jungpon) ஜங்பானுக்காக சேணம்செய்துகொண்டிருந்தார்கள். அவர்கள் மிக அழுக்கானவர்கள். அவ்விருவர்களில் ஒருவன் பயங்கரமான பார்வையுள்ளவன். ஜங்பான் எங்களை தன்னிடமிட்டுக்கொண்டு போய் உட்காரவைத்தார். அவ் வறை இருட்டானது ஒரே ஜன்னலுள்ளது. ஒரு பக்கத்தில் புத்தர் விக்கிரஹம் மற்றும் வேறு வேறான விக்கிரஹங்கள் இருந்தன. வெள்ளி வெண்கலங்களால் செய்த போகணிகளைப் பார்த்தோம். அவைகளில் புண்யதீர்த்தமிருந்தது மணிகளும் வேறு பூஜா பதார்த்தங்களும் அங்கிருந்தன. இவைகளெல்லாம் மரப்படிகளில் வெகு நேர்த்தியாய் அடுக்கிவைக்கப்பட்டிருந்தன. சுவர்களில் பச்சைபூசி அதன்மேல் பறவை, நாகம், கிளி, மான் முதலியவைகளின் சித்திரங்கள் வரையப்பட்டிருந்தன. அவ்விடமெங்கும் பழுதுபட்ட வெண்ணெய் நெய் வாசனை இருந்தது. அவருபயோகத்திற்கு மாத்திரம் வஸதியான மெத்தை டிபெட்தேச இரத்தின கம்பளம் போட்ட மேடையிருந்தது. அவர் தலைக்குமேல் சுவற்றில் சீன தேச துப்பாக்கிக் கருவிகள் தொங்கிக்கொண்டிருந்தன. தந்திக்கம்பி வாத்தியக் கருவி ஒன்றுமிருந்தது. அதில் அவர் டிபெட்தேச ராகங்களில் சிலவைகளைப்பாடுவார் அவருக்கு ஒரு கிராமபோனும் மூன்று இந்து பாலஸ்ரெகார்டுகளும் இருவிழி



TAKLAKOT MONASTERY & JUNGPON'S
RESIDENCE

LAMAS IN PRAYER AT TAKLAKOT MONASTERY

தூரதிர்ஷ்டி கண்ணாடிகளும் இனும் கொடுக்கப்பட்டன, எப்படி கிராமபோனை உபயோகப்படுத்தவேண்டுமென்றும் அவர் கற்பிக்கப்பட்டார். எங்கள் மகாராஜா ஒரு மலாக்காபிடி கழி வைத்திருந்தார். அதன்வளைவில் வெள்ளிவாய் பூட்டுப்போட்ட நாய்தலை ஒன்று செதுக்கப்பட்டிருந்தது. அக்கழியைப்பார்த்து ஜங்பான் மிக சந்தோஷமடைந்தார். ஒரு ஸமயம் அக்கழியை கிரஹித்துக் கொண்டு ஆநந்தப்பட்டார். போகும்வழி ஒன்றில் ஓர் இருட்டறை இருந்தது. அது சிறைச்சாலையாக உபயோகப்படுத்தப்பட்டது. அதைக்கண்டு எங்களுக்கு திகிலுண்டாயிற்று. பிறகு அடுத்த ஆச்ரமி மடத்துக்கு எங்களையழைத்துப்போனர். அதற்கு அனேக மெத்தைகளுண்டு. எல்லாவற்றிற்கும் மண்கூறைகள் தான். அக்கூறைகளில் மண்மூடியோடு கூடிய சிறு துவாரங்கள் காற்றுக்காகவும் புகை போக்குக்காகவும் ஏற்பட்டிருந்தன. கூழாங்கல், களி, இவ்விரண்டையும் சேர்த்து இடித்த கலப்பால் தளவரிசை போடப்பட்டிருந்தது. அங்கே ஒரு விஸ்தாரமான கூடம் ஒழுங்கற்ற கல்தூண்களுடன் இருந்தது. அங்கே திபெட் தேச பௌத்த குருக்களுக்கு மரத்தால்செய்த ஆஸனங்களும் அவர்களுக்குக் கீழ்பட்ட குருக்கள் முதலானவர்களுக்குக் குறுகலானமெத்தைகளும் இருந்தன. இவையெல்லாம் உட்காரவோ சாப்பிடவோ வரிசை வரிசையாய் செப்பனிடப்பட்டிருந்தன.

அதற்குமேல் புண்ணியஸ்தலம் ஒன்று இருந்தது. அதில் களியால்செய்த புத்தர் விக்கிரகம் உட்கார்ந்திருத்தல் நிலைமையில் அமைக்கப்பட்டிருந்தது. அதற்குத் தங்கவர்ணம் கொடுக்கப்பட்டிருந்தது. அதன் முகவிலாஸம் ஆநந்தகரமாயிருந்தது. அந்த பிம்பத்துடன் திபெட்தேச பௌத்தமத தலைமை குருக்களின் விக்கிரகம், வெண்ணெயிருக்கும் வெள்ளி, பித்தளை கிண்ணங்கள் முதலிய பூஜைக்குறிய ஸாமான்களின் பிரதிமைகள், மற்றும், கணக்கற்ற விளக்குத்திரி, முரசுவாத்தியம், கைத்தாளம் முதலிய உபகரணங்களின் உருவங்கள், இவைகளெல்லாம் காணப்பட்டன. வெள்ளித்தகடு உள்ளிட்ட மனுஷ்ய மண்டையோடு கோகணி ஒன்றும் அங்கேயிருந்தது. அதிலிருந்து உத்தரணியால் பூஜா தீர்த்தம் பக்தர்களுக்குக்கொடுப்பார்கள். சுற்றிலும் தட்டுகளின் மீது புஸ்தக ஸமூகங்களடுக்கப்பட்டிருந்தன. அவ்விடம் எங்கும் இருட்டாயிருந்தது. பழுதுபட்ட வெண்ணெய் வாஸனை நிறைந்

திருந்தது. குருக்கள், அவர்கள் சிஷ்யர்கள், இவர்களெல்லோரும் எங்கும்போல் அழுக்கானவர்களாயும், பழுப்புவர்ணமானகம்பளி நிலையங்கியுள்ளவர்களாயும் இருந்தார்கள். தலைமயிரை நெருக்கமாய் கத்தரித்திருந்தார்கள். பிறகு தலைகுருக்களைப்பார்த்தோம். அவர் மிகக் கிழவர். எங்கள் க்ஷேமத்தைப்பற்றி அன்புடன் விசாரித்தார். டிபெட் மகா குருக்களிடமிருந்து அனுக்கிரகத்துடன்வந்த, ரவைசெல்லா, உலர்ந்த பாசியுடன் சேர்க்கப்பட்ட நறும்புகை பிரசாதம், இவைகளை எங்களுக்களித்தார். நாங்கள் செல்லும் பாதைகளில் நெடுக பிரார்த்தனைச் சக்கிரங்களும் முரசுகளுமிருந்தன, அச்சக்ரங்களை பக்தர்கள் போகும்பொழுது உருட்டுவார்கள். அவ்விடம் எங்கும் ஒரே அழுக்காயிருந்தது. இங்கு எவ்வளவு தெய்வத்தன்மையிருக்குமோ! சொல்லமுடியாது கடைசியில் ஜங்பானிடமிருந்து விடைபெற்றுக் கொண்டோம். காலை 11-மணிக்கு நல்ல வெயிலில் திரும்பவும் எங்கள் கூடாரம் போய்ச்சேர்ந்தோம், மாலை 5-மணிக்கு டிபெட்தேசநர்த்தகர்கள், இரண்டு ஸ்த்ரீகளும் புருஷர்களும், விநோத ஆடைகளையணிந்து கொண்டு ஜங்பான் உத்திரவின்பேரில் வந்தார்கள். புருஷர்கள் மாறுவேஷம்பூண்டும், மடிப்புமடிப்பாய்த் தொங்கும் சல்லடம் தரித்துக்கொண்டுமிருந்தார்கள். அவர்கள் நர்த்தனம் செய்யும் பொழுது சல்லடம் புடைத்தும் பிதுங்கும். ஸ்திரீகள் இடுப்பைச் சுற்றி குஞ்சரங்களநேகங்களைக் கட்டிக்கொண்டிருந்தார்கள். பாவாடைகளுடன் அக்குஞ்சங்கள் நர்த்தனம் செய்யும்பொழுது குடையைப்போல் விரியும். ஒரு ஸ்திரீ முரசுவாத்யமும் ஜாலரும் கையாடி, அதற்கேற்ப நர்த்தனத்தை இந்நாட்டியக்காரர்கள் மகாராஜாவின் முன்னிலையில் சுமார்அரைமணிநேரம் நடித்தார்கள். அது முற்றிலும் அற்புதமானது. வாஸ்தவத்தில் திபெட்ஜனங்கள் சம்பந்தமானது எதுவும் தென்னிந்தியாவில் நாடகசாலைகளில் காட்டப்படும் புராண இராக்ஷஸர்களின் சேஷ்டைபோலிருந்தது. வர்ணங்கொடுக்கப்பட்ட மேஜைகள். ஆஸனபீடங்கள், வெண்கல மணிகள் வெள்ளி விசித்திரவேலைகள் போன்ற டிபெட்தேசத்து விநோத சாமான்கள் எங்கள் கூடாரத்திற்கு விற்பனைக்குக் கொண்டுவரப்பட்டன. அவைகளை விஸ்தாரமாய் நான் வர்ணிக்க வேண்டிய அவசியமில்லை, உள்ளபடி நேரில் பார்த்தால் மிகவும் நன்றாய் விளங்கும். நாபிகானி (Nabi Khan)ன் படங்கள் நான்



TIBETAN DANCERS OF TAKLAKOT

TAKLAKOT MONASTERY

சொல்லும் வார்த்தைகளைக் காட்டிலும் எந்த விஷயத்தையும் தெளிவாய் எடுத்துக்காட்டக்கூடுமென்பது அனைவருக்கும் தெரியும். நாங்கள் கம்பளிமயமாயிருந்தோம். பகல் முழுததும் காற்று பலமாய் அடித்தது. இரவு குளிர்ச்சியாயிருந்தது. இளம்பிறைச் சந்திரன் மேகமற்ற வானத்தில் பிரகாசித்தது. அச்சந்திர வெளிச்சத்தில் தூரத்திலுள்ள மலைகள் நன்றாய்காணப்பட்டன. அவைகளின் மேலிருந்த உறைந்த பனியும் அவைகளுக்குப்பின் அடிவானத்தில் தென்பட்ட மேகவட்டமும் மிகவும் நேர்த்தியாய் ப்ரகாசித்தன. அப்பிரதேசம் முழுமையும் நிச்சப்தமாகவும் சாந்தமாயுமிருந்தது. அவ்விடத்தில் விறகு அருமை. காய்ந்த கவரிமானின் சாணி, காய்ந்தவேர்கள் செடிகள் இவைகளெல்லாம் ஜங்பானின் வீட்டில் சேர்த்து வைக்கப்பட்டிருந்தன. கவரிமான் ஒன்றுகூட இவ்விடத்தில் காணப்படவில்லை. அவைகள் பெரும்பாலும் ஸமீபகாலத்தில் கோமாரியாலிறந்துபோயின. பௌத்தகுருக்கள் கோவிலுக்குள் கூட பாதரக்ஷை தரிக்கிறார்கள். நாய்கள் எங்கும் தடையின்றி சஞ்சரிக்கின்றன. ஜங்பான் தன் பூஜாஸ்தலத்தில் மேஜை விளக்கு ஒன்றை வைத்திருந்தார். அவ்விளக்கிற்கு சுற்றிக்கொண்டிருக்கும் ஷேட் ஒன்று இருந்தது. ஷேட்டின் மேல் பாகத்திலிருக்கும் பொத்தல்கள் வழியாய் செல்லும் உஷ்ணகாற்று அதைச் சுற்றும்படி செய்கிறது. அம்மலைமேல் ஜலமேயில்லை. ஸ்திரீகள் ஆற்றிலிருந்து தங்கள் முதுகின்மேல் இரும்புப் பீப்பாய்களில் வேண்டும் ஜலத்தைக்கொண்டுபோகிறார்கள். டிபெட்ஜனங்கள் புருஷர்களோ ஸ்திரீகளோ எல்லோரும் பருத்தவர்கள், வலிமையுள்ளவர்கள். பிறர்களுக்கு மரியாதை காட்டவிரும்பினால் தங்கள் நாவை பல்முறை வெளியில் நீட்டுவார்கள். அவர்கள் சாப்பிடுவது பச்சை அல்லது காய்ந்த இறைச்சி பொரித்த கோதுமைமா, இடையிடையே ஒருவித ரொட்டியையும் புஜிப்பார்கள்.

1931ஆ ஜூலைமீ 19உ

தக்லகாட் (Taklakot) இல் தங்கல்

இரவில் குளிர் மிகுதி. மறுநாள் முழுவதும் வெயிலுமுக்ரஹமாயிருந்தது, தவிற குளிர்ந்தகாற்றும் பலமாயடித்தது. ஸாமான்களைக் கொண்டு போதலுக்குத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய நாங்

கள் அவ்விடத்திலேயே அத்தினமும் தங்கினோம். தவிர மேலி ருந்த பௌத்தாச்ரமத்தில் ஓர் காரியமுமிருந்தது. முன் சென்று ஏற்பாடுசெய்யவேண்டியவர்கள் பகல் 12-மணிக்கு புறப்பட்டுப் போனார்கள். எங்கள் மகாராஜா பௌத்தாச்ரமம்போய் முக்ய குருக்களுக்கு விருந்தளித்தார்கள். அப்பொழுது அக்குருக்கள் மதஸம்பந்தமான தர்பார் ஒன்று கூட்டியிருந்தார். திரும்பவும் மேலேறிச் செல்ல சக்தி எனக்கில்லாமையால் நானந்த தர்பாருக் குப் போகவில்லை. ஸ்ரீமான் நாபிகான் (Mr Nabikhan) சாயப் படங்களெடுத்தார். முக்கிய குருக்கள் தனி மேடையில் உட்கா ர்ந்ததாகத் தெரிந்தது. அவருக்கு முதலில் புண்யதீர்த்தமும் தேனீரும் கொஞ்சம் அளிக்கப்பட்டதாம். பிறகு மற்றொரு குருக்களுக்கும் இவை கொடுக்கப்பட்டனவென்றுசொன்னார்கள். பாடிக்கொண்டு உலர்ந்த இறைச்சி, ஸத்து ஓர்வித (Sattu) பணி யாரம் இவைகளை அவர்களெல்லோரும் புஜித்தார்கள் பக்தர்கள் முக்கிய குருக்களுக்கு காணிக்கைகள்சமர்ப்பித்தார்கள். அவரிடமி ருந்து பிரஸாதங்களையும் பெற்றுக்கொண்டார்கள். ஸ்ரீமான் ஷா வுக்கு (Mr. Sha) மானஸஸரஸிலிருந்து இன்று உணவுக்காக வாத்து முட்டைகள் கிடைத்தன. அவைகள் கோழிமுட்டைகளைப் போல் நான்கு பங்கு பருமன் உள்ளன.

1931 ஜூலை 20உ.

தக்லகாட் (Taklakot) டிலிருந்து ரங்(Rungung)

இன்று ப்ரயாணம் இதுவரை செய்யப்பட்டவைகளில் சுளு வானது தக்லகாட்டை (Taklakot) காலை 5-மணிக்கு விட்டு ஓர் ஆற்றின் தலைக்கு இறங்கிச் சென்றோம். பிறகு அவ்வாற்றை மரப்பாலத்தால் கடந்தோம். நெடுகப்போய் வழியிலனேக கிராமங் களைப் பார்த்தோம். ஆங்கு வாற்கோதுமை (பட்டாணி) ஒட் முத லிய தானியங்கள் சாகுபடி செய்யப்படும் வயல்களும் ஆடுமாடு கள் முதலியவை கூட்டம் கூட்டமாயிருக்குமிடங்களுமிருந்தன. இரு பக்கங்களிலுமுள்ள குன்றுகள் உதகமண்டல மேட்டு ப்ரதே சங்கள் போலிருந்தன. ஆனால் செடி மரங்கள் அங்கே முற்றி லும் இல்லை. அம்மேட்டுப்ரதேசங்களில் நதியிருக்குமிடம் தான் கிராமங்களிருந்தன. சமதரை பிரதேசங்களில் ஒருவித முட்

செடி உண்டு அங்கிருப்பவர்கள் அச்செடியை வேரோடு பிடுங்கி காயவைத்து கவரிமானின் சாணிமுட்டையோடு சேர்த்து விறகாக உபயோகிக்கிறார்கள். வழியில் புல் காணப்படவில்லை. ஒரு கிராமத்தில் மாத்திரம் அலரிமரம் போன்றமரங்கள் மூன்றுநான்கு காணப்பட்டன. 8-மைல் சென்றபிறகு விஸ்தாரமான புல்லுள்ள மைதானம் போய்ச் சேர்ந்தோம். அதன் பக்கத்தில் ஆறு ஒன்று ஓடிற்று. ரங் (Rungung) கிராமத்துக்கு 2-மைல் அப்பால் பாளையமிறங்கினோம். அக்கிராமத்துக்கப்பால் தண்ணீர் கஷ்டமிருந்ததாகச் சொன்னார்கள். அன்று முழுவதும் வெயிலும் குளிர்ந்த காற்றும் கடுமையாயிருந்தன. அவ்விடம் 14400 அடி உயரம் உள்ளது. அன்று வழியும் கல்லுள்ளதாயுமிருந்தது. எங்கள் குதிரைகளின் கழுத்து மணியோசை எங்களைக் கண்டு குரைத்த குக்கிராம நாய்களின் சப்தம் இவைகளைத் தவிர வேறு சப்தத்திற்கு வழியில்லை. பக்ஷிகளொன்றும் கண்ணிற் புலப்படவில்லை. இவ்வுயர்ந்த ப்ரதேசம் வந்தது முதல் புதிய காய்கறிகளும் கனிகளும் எங்களுக்குக் கிடைக்கவில்லை. உருளைக் கிழங்கு, வெண்காயம் புதிய சீமை இலந்தைப்பழம் தகரத்தில் கட்டிவந்த பழங்கள், காய் கிறைகள், ஆல்மோரா (Almora) விலிருந்து வந்த அடக்கம் செய்யப்பட்ட பால் இவைகளை மிகுதியாய் எங்களுடன் கொண்டுவந்தோம். இவ்வுயர்ந்த பிரதேசங்களில் அரிசிதாழவே விக்கப்பட்டது, போதுமான அளவு சோறு சமையவில்லை. எங்களுதடுகளும் மூக்குகளும் குளிரால் வெடிப்படைந்தன. அவைகளுக்கு இலேபனம் தடவினோம்; இப்பொழுது நாங்களிருந்தவிடத்துக்குக் கீழே உறைந்த பனியுள்ளப் பிரதேசங்கள் தூரத்திலுள்ள குன்றுகளில் காணப்பட்ட டிபெடின் (Tibet) பீடபூமி எங்கும் கடல் மட்டத்துக்குச் சராசரி 14000 அடி உயரத்திலிருக்கிறது.

1931ஆ ஜுலைமீ 21உ

ரங் (Rungang) யிலிருந்து கோரி ஓடியல் (Gori-Odial)

வழக்கம்போல் காலை 5-மணிக்கு மிகக் குளிரில் ரங் (Rangung) சமீபமிருந்து கூடாரம் விட்டுக் கிளம்பினோம். அரை மைல் ஒரு வைல் வரை அகலமுள்ள ஓர்மைதானத்தின் வழியாய் சென்றோம். எங்கள் வலது பக்கத்தில் தாழ்ந்த புல்லற்ற குன்று

கள் தொடர்ச்சியாயிருந்தன- இடது பக்கத்திலுல் வெள்ளி போன்ற உறைந்த பனி ரேகைகளோடு கூடிய குன்றுகள் தொடர்ச்சியாயிருந்தன- மைதானத்தில் சிலவிடங்கள் மணலாயும் சில விடங்கள் கற்களாயுமிருந்தன. மரங்களே இல்லை. ஆனால் இங்குமங்கும் முட்செடிகளுண்டு. உண்மையில் நாங்கள் போகும் ப்ரதேசம் மேடுபள்ளமான பாலைவனம் போலிருந்தது. அங்கிருக்கும் சிற்றாறுகள் பாலைச் செழுநிலங்களைப்போலிருந்தன. எங்கள் குதிரைகளின் குளப்பு சப்தம், நாங்கள் கடந்த ஆறுகளின் முறுமுறுப்புச் சப்தம் இவைகளைத் தவிர வேறுசப்தமேயில்லை. அன்று காலமே முழுவதுமிருந்த மூடுபனி அவ்விடத்தை மனதுக்குவாட்டத்தை உண்டுபண்ணத்தக்கதாகச் செய்தது. கோரி ஒடியலுக்கு (Gori-Odial) சமீபத்தில் நாங்கள் தங்கவேண்டியவிடத்திற்கு படிப்படியாய் ஏறவேண்டியிருந்தது. அவ்விடம் 11-மைலுக்கப்பாலிருந்தது. அதை காலை $8\frac{1}{2}$-க்கு அடைந்தோம்' அங்கிருக்கும் ஆறுகளுக்கு சமீபமிருக்கும் தாழ்ந்த பிரதேசங்கள் சிலவைகளில் மெலிந்த குட்டையான புல்லுண்டு. நாங்கள் பாளையம் போட்டவிடம் ஒரு மைல் புல்லுள்ள மைதானம். அதில் சதுப்புநிலத்தில் போல் அநேககுவடுகள் வெட்டப்பட்டிருந்தன. அதில் ஒரு சிற்றாறும் சென்றது. மாலை 4-மணி வரை குளிராயும் காற்றுள்ளதாயும் மப்பாயுமிருந்தது. அம்மப்பில் ஒன்றும் கண்ணிற் புலப்படவில்லை. பொதிகள் சுமக்கும் கவரிமான் சிலவைகளைக் கண்டோம். அவ்விடம் 16000 அடி உயரமுள்ளது. அன்று பக்ஷியே காணப்படவில்லை. மாலையில் வெய்யில் நன்றாயிருந்தது, ஆகாயத்தில்மப்பில்லை. கூடாரத்துக்குப்பின் கூர்லா மன்தாதாசிகர (Gurla Mandhate Peaks) ஒன்று கண்ணுக்கு வெகு நேர்த்தியாய் தெரிந்தது. லிங்கத்தின் தலையைப்போல் அதன் உச்சிவட்டமாக இருந்தது. சுத்தமான உறைந்த பனி அந்த உச்சியை வெகுவாக மூடியிருந்தது. சூரிய வெளிச்சம்பட்டு அப்பனி மிக பளபளப்பாய் பிரகாசித்தது. அப்படியே இரவில் வெகு நேரம் காற்று தாங்க முடியாததாயிருந்தது. அச்சமயம் குளிர் எங்களுக்கு அதி உக்ரமாயிருந்தது.

1931௵ ஜூலை 22௳

கோரி ஓடியலி (Gori-Odial) லிருந்து மானஸரோவர் (Manasarowar)

காலை ஆரம்பம் மிகக்குளிர்ச்சியாயும் மூடுபனியாயுமிருந்தது. காலை 5½-மணிக்கு கோரி ஓடியலுக்கு ஸமீபம் கூடாரத்தைவிட்டு விஸ்தாரமான கற்களுள்ள தரிசான ஸமவெளிகள் வழியாய்ச் சென்றோம். அவ்வெளிகளின் இருபக்கங்களிலும் சுமார் 3-மைல் தூரம் புல் செடி ஒன்றுமில்லாத மேட்டுப் பிரதேசங்களுண்டு. பிறகு ஒரு அகன்ற ஆற்றுத்தலையைக் கடந்தோம். அவ்வாற்றில் மழமழப்பாயும் வட்டமாயுமிருந்த கூழாங்கற்கள் பூர்ணமாய் இருந்தன. அதன் நடுவில் வேகமாய் ஓர் நீரோட்டமுமிருந்தது. இங்கிருந்து கூர்லா (Gurla-Pass) கணவாய்க்கு 500 அடி உயரத்தில் படிக்கிரமமாய் ஏறவேண்டியிருந்தது. அக்கணவாய் கடல் மட்டத்திற்கு மேல் 16200 அடி உயரிலுள்ளது. உறைந்த பனி மூடின கூர்லாமாந்தாதா (Gurla Mandhata Range) குன்று. அதற்கு அதிசமீபத்திலிருந்தது. எங்களுக்கிருபக்கத்திலும் உதக மண்டலம் குன்றுகளில் போல் புல்பூண்டற்ற மலைச்சரிவுகளிருந்தன. கூர்லாகணவாய் போய்ச் சேர்ந்தவுடன் எங்களிடது பக்கமாய் சூரியனும் மலைக்கு மேல் கிளம்பிற்று. இதுவரை அங்கிருந்த மூடுபனி மறைந்தது, இங்கிருந்து நீல நீருள்ள (Manasarowar) மானஸரோவர் ஸரஸ் வியக்தமாய் தெரிந்தது. அந்த ஸரஸுக்கும் ராகஸ்டால் (Rakastal) என்னும் வேறொரு ஸரஸுக்கும் நடுவே ஒரு சிறு குன்றுகளின் தொடர்ச்சியுண்டு. கைலாஸ் (Kailas) பர்வத சிகரமும் தெரிந்திருக்க வேண்டும். ஆனால் எங்கள் துரதிர்ஷ்டத்தில் அதை மப்பு மறைத்துவிட்டது. கூர்லா (Gurla) கணவாயிலிருந்து மானஸ ஸரஸை நோக்கி சுமார் ஒரு மைல் இறங்கி அதன் கரை நெடுக விஸ்தாரமான ஸமவெளிவழியாய் 3-மைல் சென்று காலை 9-மணிக்கு கூடாரமடைந்தோம். ஏற்கனவே நாங்கள் தங்கினவிடத்திற்கும் இப்பொழுது தங்குமிடத்திற்கும் 10, 11-மைல் தூரமிருக்கும். இது மானஸஸரஸ் ஜலக்கரையிலிருந்து சுமார் 30 அடி தூரமிருக்கும். இங்கிருந்து மானஸஸரஸ் பூர்ணமாய்த் தெரியும். அந்த ஸரஸ் குன்றுகளின் நடுவில் ஒரு விஸ்தாரமான தாழ்ந்த பூமியில் இருக்கிறது. கண்ணுக்கு வெகு நேர்த்தியானது. அதன் நீர் தூரத்திலிருந்து பார்த்

தால் நீலமாய்த் தோன்றும். உண்மையில் மிகத்தெளிவாயும் இனிமையாயுமிருக்கிறது. சுற்றியிருக்கும் குன்றுகளின் பனிஉருகிஅதற்கு ஜலம் சேருகிறது. டிபேட் (Tibet)தேசத்தில் மழை அதிகஸ்வல்பமென்றுர்கள். மேலிருந்து பார்த்தால் முட்டைவடிவமானதாய் தோன்றும். ஸ்ரீமான்ஷெரிங் (Mr. Cherring) மற்றும் சிலர் அந்த ஸாஸ்ஸின் சுற்றளவு சுமார் 40 மைல் என்று மதித்தார்கள். ஆனுல் டிபெடில் 3 வருஷம் வசித்து ஒரு புஸ்தகமும் எழுதின எகெய் காவகுசி (Ekai-Kawaguchi) என்ற ஒரு ஜப்பான் தேசத்திய பௌத்த முனிவர் அந்த ஸாஸ்200மைல் சுற்றளவுள்ளதென்றும் ஏறக்குறைய எண்கோணவடிவமுள்ளதென்றும்சொல்கிருர். இவ்வுயர்ந்த பிரதேசங்களில் ஸமீபமாய்தோன்றும் வஸ்துக்கள் ஒர்வித கண்மாயத்தால் அவ்விதம் தோன்றும் உண்மையில் தூரத்திலிருக்கும். அங்கிருக்கும் வாயுமண்டலம்மெலிந்திருப்பதால் அவ்விதக் கண்மாயம் ஏற்படுகிறது. அந்த பௌத்த முனிவர் சொல்வதுசரியென்று என் அபிப்பிராயம். மகாராஜாவும் கூடாரத்திலிருந்த ஹிந்துக்களனைவரும் அந்த ஸாஸில் ஸ்நானம் செய்தார்கள். அந்த ஏறியில் ஸ்நானம் செய்த எவரும் மூச்சுத் தெணறி அரைமணி நேரம் குளிர் நடுக்கமடைவார்கள். நாங்களும் டிபெட் தேசத்தார்களும் அதை புண்யதீர்த்தம்என்றுநினைத்தோம். ஆகையால் அத்தீர்த்தத்தில் பித்ருக்களுக்கு தர்பணம் செய்தோம். அதில்மீன் பிடித்தல் கூடாது. அந்த ஸாஸில் தீவுகள் கிடையா. ஆனுல் ஸமீபமிருந்த (Rakstal) ராக்ஸ்டால் ஸாஸ் உருவத்தில் ஒழுங்கற்றதாயும் புல் பூண்டற்ற சிறு தீவுகளுள்ளதாயும் இருந்தது. ஆகிலும் மானஸஸாஸைப்பார்த்த பிறகு காஷ்மீர தேசத்திய அழகான ஹூவலர் (Wular) ஸாஸையும் நம்முடைய பிரதேசத்திலுள்ளகிருஷ்ணராஜஸாகாம்,வாணீவிலாஸஸாஸ் இவைகளையும்அசட்டை செய்யக்கூடாதென்று சொல்லவேண்டியதவச்யமாத்தான் தோன்றுகிறது.

இக்கடின வழிகளில் சென்று இவ்வேரிகளைப்பற்றியும், உறைபனிமூடின இக் குன்றுகளைப்பற்றியும் புராணங்களில் எழுதப்பட்டிருப்பதிலிருந்து நம் முன்னோர்களுக்கு எவ்வளவு பொறுமையும் விடாமுயற்சியுமிருந்தனவென்று மிகத் தெளிவாய்த் தெரிகிறது. மாலையில் ஒருவிதகுளிர்காற்று அதி தீவிரமாயடித்தது. அக்காற்றின் எதிரில் பேசினுல் மூச்சடைக்கும். முட்செடிக் கொத்

MANASAROWAR CAMP

MOUNT KAILAS AS SEEN FROM BARKHA MAIDAN

துகள் தானங்கே ஏராளமாய் வளர்ந்தன. அவைகள் பச்சையாயி ருந்தாலும் நன்றாய் எரியும். அது எனக்கு அதிசயமாயிருந்தது. அங்கிருக்கும் கூலிக்காரர்கள் அச் செடிகளை விறகாய் உபயோகப் படுத்துகிறார்கள். அச் செடிக்குத் தாமா (Dama) என்று அவ்வூர் பெயர். டிபெட் தேசியர்களின் அழுக்கான நடைக்கு உடைக் காரணம் அடுப்புவிறகின்மை, அவர்களின் கொடிய வறுமை கோடைக்காலத்தில் ஸகிக்கமுடியாதசீதளந்தான். மானஸஸாஸில் ஹம்ஸம் ஒன்றைக்கூடப் பார்க்க எங்களுக்கதிர்ஷ்டமில்லை. ஒருக் கால் எங்கள் கூடாரத்தைக் கண்டு அவைகள் விலகிப்போயிருக்க லாம், நாங்களிருந்த மைதானத்தில் மெலிந்தும் கூராயுமிருந்த புல் உண்டு. அதை எங்கள் குதிரைகள் ஆவலாய் மேய்ந்தன. அவ் விடம் 14900-அடி உயரமுள்ளது. சாங்கே இராணி (Rani of Sanghai) குமார கட்கஸிம்ஹ பால் (Kumara Khadga Singh Pal) இவ்விருவர்களும் கற்பயங் (Garbayang) விலிருந்து எங் களுடன் கூடவந்தார்கள். மற்றும் சில ஸாதுக்களும் எங்களுடன் கைலாஸ யாத்திரை வந்தார்கள். மகாராஜாவும் மகாராணி ஸ்கே பாவும் கூட வந்த ஸாதுக்களுக்கு பணமும் உணவும் கொடுத்து ஒத்தாசை செய்தார்கள்.

1931-ஞு ஜூலை-மீ 23உ

மானஸ ஸரோவரிலிருந்து (Manasarowar)

ஜீயு கோம்பா (Jieu Gompa)

காலை 5-30-மணிக்கு மானஸ ஸாஸ் மேல் கரையிலிருந்து கூடாரம் விட்டு ஜலக்கரை நெடுக சுமார் 6மைல்தூரம் வடக்கு நோக்கிச் சென்றோம். வழியில் ஒரு செங்குத்தான குன்று இருந்தது. ஏரிப்பக்கத்தில் அது தளர்ந்தும் வழுக்கலாயுமிருந் ததுடன் அதில் ஒரு பௌத்தாச்ரமமுமிருந்தது. அவ்வாச்ரமத் திற்கு மகாராஜாவும் மற்றுமனேகர்களும் சென்றார்கள்.

அது டக்லகாட் (Taklakot) ஆச்ரமத்திற்கு மிகக் குறைவா னது. பார்வைக்கும் நன்றாயில்லை, 6-மைல்தூரம் சென்று அவ் வேரியில் வாத்துகளனேகங்களைக் கண்டோம். அவை சுமார் பருமனுள்ளவை. அவைகளில் சில தலையில் கருமைப் புள்ளியும்

மற்றபாகங்களில் வெண்மையுருவுள்ளவை. சில பழுப்புநிறமுள்ளவை. ஏரிக்கரையில் வேறு சில சிறிய பறவைகளையும் பார்த்தோம். நாங்கள் கிட்டச்செல்ல அப்பறவைகள் பறந்துபோயின. பிறகு படிக்கிரமமாய் ஒருமேட்டின்மேல் இடதுபக்கமாய்ச்சுற்றிச் செல்லவேண்டியிருந்தது. அதன்பிறகு விஸ்தாரமுள்ள தரிசு ஸமவெளிகளில் சென்றோம். அவ்வெளிகளில் நிலத்தின் கீழ் தங்கமிருப்பதாக நினைப்பதுண்டு. அதற்கு மேல் 5-மைல் சென்று எங்கள் கூடாரம் போய்ச் சேர்ந்தோம். கூடாரம் ஏரிக்கரையில் ஒரு வாயிலுக்குச் சமீபம் இருந்தது. ஸட்லெஜ் நதியோ (Sutlej) இந்து நதியோ (Indus) அவ்விடமிருந்து உற்பத்தியாகிறதாகச் சொல்லுகிறார்கள். நாங்கள் கூடாரமடைந்தபொழுது காலை 9-30 மணி. அவ்விடம் கூடாரத்திலிருந்து 11-மைல்தூரமுள்ளது. அதன் ஸமீபத்தில் ஓர் கந்தக ஊற்று காணப்பட்டது. ஜீயூகாபா (Jieu Gompa) என்ற பௌத்தாச்ரமம் ஒருசிறியகுன்றின்மேலிருந்தது. அது பார்வைக்கு அவலக்ஷணமாயிருந்ததால் நாங்களங்கே போகவில்லை. நடுப்பகலில் மேகத்தின் இடைவெளி வழியாய் தூரத்தில் கைலாஸபர்வத சிகரம் க்ஷணப்பொழுது கண்ணிற்குப் புலப்பட்டது. அன்று முழுவதும் குளிர் காற்று தீவிரமாயடித்தது. சூரியன் நன்றாய் பிரகாசித்தும் கூடாரத்திற்குள்ளேயே இருத்தல் சௌகரியமாயிருந்தது. எங்களுக்கெதிரில் ஸரஸுக்கு ஒரு வாயிலிருக்கிறதாகவும் அதிலிருந்து பிரம்மபுத்ரா நதி உற்பத்தியாகிறதாகச் சொல்லப்பட்டது. ஸரஸில் நேற்றுக்குளிரில் ஸ்நாநம் செய்ததால் எங்களுடன் வந்த ஹரிகார் சேஷாசாரு (Harkar Sesharu) க்கு மார்சளி கபவாதஜுரம் மேலிட்டது.

1931ஞ ஜூலைமீ 24உ

ஜீயு காம்பாவிலிருந்து (Jieu Gompa) பார்கா (Barkha)

காலை 5-30 மணிக்கு ஜீயு காம்பாவிலிருந்து புறப்பட்டு இருபக்கங்களிலும் குன்றுகளுள் அகன்ற மைதானங்கள் வழியாய்ச் சென்றோம். ஆங்கு சில பிரதேசங்கள் மணலுள்ளவைகளாயும் இருந்தன. $1\frac{1}{2}$ அங்குலம் நீளமுள்ள கருமைக் கம்பளிப் பூச்சிகளுடன் டாமா (dama) செடிகள் விசேஷமாய்க் காணப்பட்டன. 11மைல் சென்றபிறகு 8-30 மணிக்கு கைலாஸபர்வத அடிவாரத்

திலிருக்கும் பார்கா (Barkha) மைதானம் போய்ச் சேர்ந்தோம். வழியில் சிறு முயல்கள் ஓடி அலைந்துகொண்டிருந்ததைப் பார்த்தோம். சூரியகாந்தி புஷ்பம்போன்ற காலணு அளவுள்ள நடுவில் மஞ்சள் நிறமும் நீலமான இதழ்களுடனும் கூடிய சிறு புஷ்பங்களும் காணப்பட்டன. மெலிந்த காய்ந்தபுல்லும் மிகுதியாயுண்டு. மேகங்கள் கலைந்தது. கைலாஸபர்வத சிகரம் புலப்பட்டது. அது ஒரு குன்றின்மேல் கட்டப்பட்டுப், உறைபனியால் எங்கும் மூடப்பட்ட ஓர் பெரிய விலமண்டபத்தோடுகூடிய மகத்தான கோட்டைபோலிருந்தது. அதனொருபக்கத்தில் இணையான இரண்டுவரிசையாய் பாதம்முதல் உச்சிவரை படிக்கட்டுபோல் கிரமமாய்க் கற்கள் பிதுங்கியிருந்தன. அது கண்ணிற்கழகாயிருந்தது. ஆனால் மகிமையொன்றும் தோன்றவில்லை. கூடாரமிருந்தவிடத்தில் பூமி களியாயிருந்தது. கற்களேயில்லை. ஓர் சிற்ருறு ஆங்கு ஒருவித சக்தியால் சுற்றுவழியாய்ச் செல்லுகிறது. அது பழையகாலத்தில் ஒரு ஏரித்தரையாயிருந்திருக்கலாம். அவ்விடம் ஒரு அழகியபறவை யந்திரஸ்தலமாயுபயோகிக்க உதவும். இரண்டு வீடுகள்தான் ஆங்கேயிருந்தன. கவரிமான்கள் கூட்டம் கூட்டமாய்க் காணப்பட்டன. அன்று மாலை முழுவதும் குளிர்காற்று அதி பயங்கரமாயடித்தது. அங்கு வாயுமண்டலம் மெலிந்தது. மிருகங்களோ, மனிதர்களோ அதிகமாய்ப் பிரயாசப்பட முடியாது. இங்கிருக்கும் ஜங்பானின் துணையாளி தானில்லாதகாலத்தில்தனக் கிஷ்டமானவனைப் பதிலாக நியமிக்கலாம். அவ்வதிகாரமவனுக்குண்டு. மகாராஜா அவரிருக்குமிடம் கண்டுகொள்ளப்போனுர். ஒரு சிறிய ஜன்னலுள்ளவும், அதிக வெளிச்சமில்லாததுமான அறையில் எங்களை அழைத்துப்போனுர். தக்லகாட்(Takla Kot)ஜங்பான் க்ரஹத்திலிருந்த சாமான்களேற்பாடே இங்குமிருந்தது. தந்திக் கம்பி வாத்யம் ஒன்று அங்கேயிருந்தது. அதிலிரண்டு சுருக்கமான இராகங்களை வாய்ப்பாட்டுடன் பாடினுர். ஒரு டிபெட் தேசத்திய இடையன்வீட்டிற்குப்போனேம். அது10-அடி சதுரம் பூமியில் இடுப்பளவு ஆழமுள்ளது. மண் தரையானது கவரிமான் மயிரால் நெய்ததும், ஜலமிறங்காததுமான துணியால் மூடப்பட்டிருந்தது. சமையலுக்கு மண்ணடுப்பிருந்தது. ஒரு மூலையிற் புத்தர் விக்ரஹம், விளக்கு, புண்ணியதீர்த்தக் கிண்ணம் முதலியவை யிருந்தன. மிக அடக்கமானவிடம். இவ்வறையில் குடும்

பம் முழுவதும் வசித்தது. அவர்களுக்கு அடுப்பு விறகு, டாமா செடி வேர் தண்டு, பசு, கவரிமான், ஆடு, குதிரை, இவைகளின் சாணி. அடுப்புமூட்டத் துருத்தி உண்டு. பால் சர்க்கரை இவைகளுக்குப் பதிலாக வெண்ணெய் உப்பு இவ்விரண்டையுமுபயோகப்படுத்தி கூலிக்காரர்கள் தேநீர் தயாரித்துக் குடிப்பார்கள். டிபெட் தேசத்தில் முக்கியமாய் ஸ்த்ரீகள் கன்னத்திலும் மூக்கிலும் அலங்காரமாக வெல்லப்பசையைப் போட்டுக்கொள்கிறார்கள். அது அதி விகாரமாய்க் காணப்படுகிறது. சரீரத் தோல் வெடிக்காமலிருக்க இப் பசையை அவர்களுபயோகிக்கிறார்கள். நம்முடையப் பிரதேசங்களிலிருக்கும் காக்கைகளைக்காட்டிலும் நான்குமடங்கு பருமனுள்ள காக்கைகளங்கே காணப்பட்டன.

1931-ஹு ஜூலை-மீ 25உ

பார்க்கா (Barkha) விலிருந்து (Darchin) டார்ச்சின்

இரவும், காலையும், அதி சீதளமாயிருந்தன. காலை 5-மணிக்குக் கூடாரத்தைவிட்டு வெளியே வந்தபொழுது ஆகாயம் தெளிவாயும், கைலாஸ பர்வதம் கண்ணுக்கு வியக்தமாயுமிருப்பதைக் கண்டோம். கொடுமுடிகளுடனும், கோபுரங்களுடனும், பரிகைகளுடனும், மேடுகளுடனும் கூடிய மலைக்கோட்டைக்குள்ளிருக்கும் திருமாளிகையின் பிரதானமண்டபம்போல் கைலாஸபர்வதம் காணப்பட்டது. மைதானத்தின் அப்புறத்தைக் கடந்துசெல்லவேண்டியிருந்தது. அம்மைதானம் சதுப்பு சக்தியுடனும்அனேககோணலான நீரோட்டங்களுடனும் கூடியது. அதைக் குறுக்கிட்டுத்தான் சுமார் 7-மைலுக்கப்பாலிருக்கும் கைலாஸ பர்வத அடிவாரத்திலுள்ளடார்ச்சினுக்கு (Darchin) ச்செல்லவேண்டியிருந்தது. டார்ச்சின் (Darchin)ஸிக்கும்(Sikkum State)மாகாணத்துக்குச் சொந்தமென்கிறார்கள். வழியில் டிபெட்தேசீய இடையர்கள் ஓரிடத்தில் சேர்ந்திருந்தார்கள். அவர்களிடம் ஆட்டுமந்தை, கவரிமான் மந்தை, கன்றுகள் இவைகளிருந்தன. இவைகளின் சாயாபடம் பிடிக்கப்பட்டது. ஒருவர் தன் சைனாதேசத்துத் துப்பாக்கியை உபயோகப்படுத்தி குறி தவிரவிட்டார். டார்ச்சினில் (Darchin) அப் பிரதேச கவர்னரிருக்கிறார், அவராண்மனைக்கெதிரில்

நாங்கள் பாளையமிறங்கினோம். நடுவில் ஓர் சிற்றாறு ஓடுகிறது; மற்றும் அனேக குடிகள் இருக்கும் வீடுகளுமுண்டு. பாளையமிறங்கினவுடன் அவ்வூர் கவர்னருக்கு முதல்நாளிரவு குடித்த சாராய மிகுதியால் மூக்கினால் இரத்தவடிவு உக்கிரமாய் ஏற்பட்டதாகக் கேழ்விப்பட்டோம். நானும் என் துணையாளியும் மருந்திட்டோம். அவருக்கு சிகித்ஸைசெய்வது மிகக்கடினமாயிருந்தது, அவர் உயரமும் பலமுமுள்ளவர். சிவந்த முகம் பரட்டை மயிருமுள்ளவர். மாலையில் ஸ்வஸ்தமானார். கைலாஸ பர்வதத்தைச் சுற்றிருக்கும் பௌத்தாச்ரமங்களுள் மிகப் பெரிதான கங்கடா கோம்பா (GangtaGompa) வுக்கு மாலை 5-மணிக்கு மகாராஜாவும் இதரர்களும் சென்றோம். தக்லகாட் (Takla-Kot) ஆச்ரமம்போல் அவ்வளவு பெரிதாயில்லை. அழுக்கிலும் இருட்டிலும் குறைந்ததல்ல. அது மண் கல் முதலியவற்றால் கட்டப்பட்ட மாடிக்கட்டடம். ஆங்கு காஷ்மீர், ஜம்மு தேசப் பட்டாளத் தலைவர் ஸோரவர்ஸிம்ஹம் (Zoravar Singh) என்பவருடைய கவசமும் கத்தியுமிருந்தன. அவை விநோதமானவை. அத் தலைவர் டிபெட் தேசியர்களை சிலகாலமாண்டதாயும், பிறகு தக்லகாட்டில் யுத்தத்தில் முறிபட்டுக் கொல்லப்பட்டதாயும் அங்கிருப்பவர்கள் கூறினார்கள். அவ்வாச்ரம மேன்மாடத்தில் வாசற்படியண்டை பெரிய குருக்கள் தூபதீபத்துடன் முரசு கொம்பு வாத்தியங்கள் வாசித்துக்கொண்டு எங்கள் மஹாராஜாவுக்கு நல்வரவுகூறி உபசாரம் செய்தார். எங்கள் மஹாராஜாவும் அந்தாச்ரமத்துக்குச் சிவப்பு பனாத்துண்டுகளையும் ரொக்கப் பணத்தையும் பரிசளித்தார்.

1931-ஜுலை-மீ 26உ

டார்ச்சனிலிருந்து (Darchin) திதிபூ (Didiphu)

டார்ச்சின் (Darchin) கைலாஸபர்வதத்தினடிவாரத்தில் கீழ் பக்கமாகவிருக்கின்றது. இவ்விடமிருந்துதான் ஸ்தலதீர்த்தாதி யாத்ரிகர்கள் கைலாஸ பர்வதத்தைப் பிரதக்ஷிணம் செய்கிறார்கள். காலை 5-30 மணிக்குக் கூடாரம் விட்டு ஒரு மேட்டினடிவாரத்தில் நெடுக வலதுகைப் பக்கமாய் சுமார் 2-மைல் சென்று சமதளமுள்ள ஒரு பள்ளத்தாக்குக்கு வந்து சேர்ந்தோம். அதன் வழியாய் ஓர் ஆறு ஓடுகின்றது. அவ்வாறு கைலாஸ பர்வதத்திற்கும்,

வேறொரு குன்றுத் தொடர்ச்சிக்குமிடையிலிருக்கிறது. அப் பள்ளத்தாக்கில் புகுந்து வலதுபக்கம் திரும்பி ஆற்றுடன் நெடுக சுமார் 5, 6, மைல்ச் சென்று கைலாஸ சிகரத்தைத் தென்பக்கமாயும் மேல்பக்கமாயும் பார்த்தோம். அப் பள்ளத்தாக்கின் நடுவில் ஆற்றினக்கரையில் நெந்திபூ (Nentiphu) என்னும் ஒரு சிறிய ஆச்ரமமிருந்தது. அந்தாச்ரமத்திற்கு நாங்கள் போகவில்லை. கைலாஸ பர்வதத்தின் பக்கத்தில் உயரமாகச் சில மலையாடுகள் மேய்ந்துகொண்டிருந்தன. பள்ளத்தாக்கு முழுவதிலும் பசும்புல் மிகுதி. மேய்ச்சல் வசதி விசேஷம். அவ்விடம் அதிக உயரத்திலிருக்கிறது. இங்குமங்கும் கந்தவாஸனையுண்டு. இக் காரணங்களால் ஸமபூமிகளிலுள்ள மனிதர்களோ, மிருகங்களோ எவர்களுக்கும் வேலைசெய்வது மிகக் கஷ்டமாயிருந்தது. பாக்கி செல்லவேண்டிய மூன்று மைலும் தளர்ச்சியான கற்களின்மேல் படிப்படியாய் மேடேறிப்போகவேண்டி யிருந்தது. அப்படி ஏறி திதிபூ (Didiphu) போய்ச் சேர்ந்தோம். அது ஆற்றின் பக்கத்தில் ஒரு சிறிய ஆச்ரமம். ஆகமொத்தம் 11-மைலும் செல்ல காலை 11-மணிவரைபிடித்தது. நாங்களும் மிகக் களைப்படைந்தோம். நாங்கள் பாளையமிறங்கினவிடம் கைலாஸ பர்வதத்தின் அடிவாரம், ஒரு ஸமவெளி. பர்வதத்திற்கு அதி ஸமீபமிருந்தது அதிலிருந்து ஒரு சிற்றாறு பள்ளத்தாக்கின்கீழ் ஓர் ஆற்றில் வந்து வீழ்ந்தது. மாலையில் நான் இராணுவ உத்யோகம் கோபால ராவ், தாசில் ஸ்ரீமான் பிரதாப சிங்கம், அனைவரும் குதிரைகளின் மீது ஏறிக்கொண்டு கைலாஸபர்வதத்தின் அடிப்பக்கம் கற்பாறையும் வழுக்கலுமானபிரதேசத்தின்வழியாய் மேடேறிச்சென்றோம். அவ்வடிப்பக்கம் கடல் மட்டத்திற்கு 18000- அடிஉயரமுள்ளது. நாங்கள் பாளையமிறங்கினவிடமோ 16200-அடி உயரமுள்ளது. கைலாஸ பர்வத அடிப்பக்கம் ஏறையக்குறைய ஒரு தீர்க்க சதுரம் செங்குத்தாய் மேல்கிளம்பினது. உச்சி வில்மண்டபம்போல் காணப்பட்டது. அடிப்பக்கத்தில் ஊதகால்போல் இரண்டு மகத்தான பனிக்குவியல்களிருந்தன. இக் குவியல்கள் சேருமிடமிருந்து அழகான நீரோட்டம் ஒன்று பிரிட்டது. எங்கள் வலது பக்கம் பனிச் சுவரில் மாடம்போல் ஒரு குழியிருந்தது. அதில் 9-அங்குல உயரம் 3-அங்குல குறுக்களவு உறைபனி லிங்கம் காணப்பட்டது. அம் மாடம் மகம்மதியர் கமான் உருவமுள்ளது.

அந்த மாடமும் லிங்கமும் மிக அழகாயிருந்தன. அவை பனிக் கட்டியால் தற்செயலாய் வாய்ந்தனவோ, யாரோ ஒரு கைதேர்ந்த பக்தனால் அமைக்கப்பட்டனவோ சொல்லமுடியவில்லை. ஒருஸமயம் தற்செயலாய் அமைந்திருக்கலாம். அவ்விடம் காந்தம்போல் எங்களை ஆகர்ஷித்தது. ஆங்கு எங்களுக்கு அதி பூரிப்பு உண்டாயிற்று. அவ்விடத்தைவிட்டுவர எங்களுக்கு மனமேயில்லை. ஆகிலும் இருட்டு வந்துகொண்டிருந்தது. சிலவிடங்களில் பனிக் கட்டிகளின் வழியாய்க் கீழிறங்கி கூடாரம்வந்து சேர்ந்தோம். வழியில் நரை வர்ணமுள்ள பிரம்ம கமலமெனச் சொல்லப்படும் மூன்றுவித புஷ்பங்களை சேகரித்துவந்தோம். மாலை 7-30 ஆயிற்று. போய்வந்ததில் எங்களுக்கு மிக சந்தோஷம். கூடாரத்தின் ஸமீபத்தில் மாடப் புறாக்களிருந்தன.

1931-ஆு ஜுலை-மீ 27உ

திதிபூ (Didiphu) விலிருந்து (Zindiphu) ஸிந்திபூ

எங்கள் காரிய கிரம விவரப்படி கைலாஸபர்வதத்தின் பிரதக்ஷிண இரண்டாம் மஜலி ஆரம்பிக்கப்படவேண்டும். காலை 5-30 க்கு நல்ல குளிரில் கூடாரத்தைவிட்டுப் புறப்பட்டோம். ஸிந்திபூ (Zindiphu) க்குப் போகவேண்டிய 11, 12, மைல் யாத்ரை இதுவரை செய்த யாத்ரையைவிட மிகக் கடினமானது. முதல் 3, 4, மைல் மிகச் செங்குத்தாயும், கற்பாறையாயுமிருந்த மேட்டிலேற வேண்டியிருந்தது. எங்களுக்கும் குதிரைகளுக்கும் மிக ஆயாஸமாயிருந்தது. கடல்மட்டத்துக்கு மேல் 18600, அடி உயரமுள்ள டால்மா கணவாய், அல்லது கௌரிகண்டம் (Dalma Pass or Gowri Kund) என்று சொல்லப்படும் உச்சிக்குப் போகவேண்டியிருந்தது. எங்கள் யாத்ரைக்குள் இதுதான் உயர்ந்தப் பிரதேசம். அதற்குப் போவது அங்கிருக்கும் டிபெட் தேசியர்களுக்குப் பிரயாசமேயில்லை. கடைசியில் அந்த உச்சிக்குப் போய்ச் சேர்ந்தோம். ஆங்கு கௌரிகண்டமென்னும் (Gowri Kund) ஒரு சிறிய உறைந்த பனியுள்ள ஏரியைப் பார்த்தோம், அதன் மேல் பனிப்படலங்களிருந்தன- ஏரிப்பக்கங்களில் கற்பாறை நிறைந்திருந்தன, இந்த உச்சிக்கு சமீபம் எங்கள் வழிநெடுக உறைந்த பனிப் பிரதேசங்களிருந்தன. அனேக மலையாறுகளை குறுக்கிட

வேண்டியிருந்தது. சுற்றுமிருந்த கற்கள் வெவ்வேறு விநோதமான உருவங்களுள்ளவைகளாயிருந்தன. அவ்வுச்சியில் எங்களுக்கு மூச்சு விடுவது மிகத் தொல்லையாக இருந்தது. தளர்ச்சியான கற்களின் வழியாய் இரண்டுமைல் கீழிறங்கி ஒரு பள்ளத்தாக்கில் வந்து சேர்ந்தோம். அதில் ஒரு ஆறு ஓடுகின்றது. அது சதுப்பானது. அதன் வழியாய்ச் செல்வது மிகக் கடுமையாயிருந்தது. சூரியன் கடுமையாய் பிரகாசித்தது கந்தக வாஸனையும் சுற்றிலும் இருந்தது, இங்குமங்கும் கிட்டக்கிட்ட பௌத்தமதவசனங்கள் வெட்டப்பட்ட கற்கள் வழியில் குவிக்கப்பட்டிருந்தன. கடைசியில் ஸிந்திப்பூ (Zindiphu) ஆச்ரமத்துக்கெதிரில் நேராய் பாளையமிறங்கினோம். அது சிறிய ஆபாஸமான ஆச்ரமர். சரிவான மைதானத்திலிருந்தது. பக்கத்தில் நீரோட்டம் ஒன்று ஓடிற்று. அவ்விடம் காலை 10-30 க்கு போய்ச் சேர்ந்தோம். உச்சியிலிருந்து இறங்கும்பொழுது ஷோபர்காரியப்பா (Chouffour Kariyappa) என்பவர் சவாரி செய்த குதிரை சறுக்கலடைந்து அவரும் விழுந்து அவர் இடது முழங்கைக்குக் கெடுதியுண்டாயிற்று.

1931ஞு ஜுலைமீ 28உ

ஸிந்திப்பூ (Ziudiphu) விலிருந்து பார்கா (Barkha)

வழக்கம்போல் 5-30-க்கு (Zindiphu) ஸிந்துப்பூவைவிட்டு புறப்பட்டோம். பார்க்கா (Barkha) வை விட்டு டார்ச்சினுக்கு (Darchin) புறப்பட்டபொழுது கைலாஸபர்வதம் கண்ணில்பட்டதுபோல் இப்பொழுது கூர்லாமந்ததா (Gurla Mandhatha) வியக்தமாய் கண்ணிற்குப் புலப்பட்டது. அவ்விடம் பள்ளத்தாக்கில் நீரோட்டத்தின் நெடுக 3-மைல் தூரம் சென்று கைலாஸபர்வத பிரதக்ஷிணம் முடித்துவிட்டு பார்க்கா (Barkha) மைதானம் திரும்பவும் வந்தோம். சுமார் 7-மைல் நேர் குறுக்காக மெள்ளச் சென்று மொத்தம் 10-மைல் போனபிறகு 8-30க்கு பார்காவுக்கு (Barkha) வந்தோம். முன் பாளையமிறங்கினவிடத்திலேயே இறங்கினோம். இப்படி யாத்திரை ஸபலமாகி திரும்புகை இன்று நேரிட்டதைப்பற்றி மிகக் களிப்பு எங்களுக்கு உண்டாயிற்று. குளிர் காற்றடித்ததும் கடைசியாகத் தங்கின இரண்டிடங்களில் போல் அவ்வளவு குளிரில்லை. மைதானம் முழுவதும்



FROZEN GOWRIKUND LAKE



KAILAS PEAK AS SEEN FROM DOLMA PASS

ஆயிரம் பதினாயிரம் ஆடு மாடுகள் நன்றாக மேயும்படியானவிடமாயிருந்தது. மாலையில் ஸூர்யாஸ்தமன ஸமயம் மேகங்கள் ஆகாயத்தில் பொன்வர்ண முள்ளவைகளாகக் காணப்பட்டன. மேகங்களில்லாதவிடத்தில் கைலாஸபர்வதம் எங்களுக்கு நன்றாகக் காணப்பட்டது. கிழக் கடி வானத்தில் சந்திரன் பூர்ணமாய்கிளம்பிற்று.

1931ஹு ஜுலை 29உ

பார்க்கா (Barkha) விலிருந்து ஜியுகாம்பா (Jieu Gompa)

ராகஸ்டாலின் (Rakstal) எல்லையில் நாங்கள் இறங்கவேண்டும். அப்படிச் செய்யாமல் ஸாங்கோராணியின் இஷ்டத்திற்கிணங்கி மானஸ ஸரஸின் பக்கம் ஜியூகாம்பா (Jieu Gompa) வுக்குத் தெற்கில் இரண்டு மைல் தூரத்தில் அது பௌர்ணமிதிதியானதால் பாளையமிறங்கினோம். எங்களில் அனேகர்கள் அந்த ஸரஸில் இன்னும் ஒரு ஸ்னானம் செய்தோம். காலை 5-15க்கு பார்க்கா (Barkha) வை விட்டு 10-மைல் சென்று 8-45க்கு ஜியூகாம்பா (Jieu Gompa) வந்துசேர்ந்தோம். அன்று குளிர்காற்று மிகக் கடுமையாயடித்தது. மாலையில் அதிருஷ்டவசமாக காற்று நின்றது. முதல்நாள் பார்க்கா (Barkha) வில் குமாரகட்க ஸிம்மபால் (Kumara Khadga Simhg Pal) டிபேட் தேசக் குதிரை ஒன்றை வாங்கினார். கீழ்பக்கமாய் அடிவானத்தில் எங்களுக்தெரில் இரண்டுமலைத் தொடர்ச்சிகள் இணையாயும் சரிவாய் சந்தித்தும் இருந்தன. அந்த சந்து வழியாய் மானஸஸரஸிலிருந்து பிரம்மபுத்திராநதி பெருகிவருகின்றது. அப்பிரதேசத்தில் பூர்ணசந்திரன் ஜ்வலித்துக்கொண்டு மிக அழகான உண்டை உருவத்துடன் கிளம்பிற்று. நிச்சலமான மானஸஸரஸ் ஜலத்தில் அச்சந்திர வெளிச்சம் வெள்ளிபோல் வெகு தூரம் பிரகாசித்தது. அதைப் பார்க்க எங்களுக்கு மிகச் சந்தோஷமுண்டாயிற்று. ஸ்ரீமான் நாபிகான் படமெடுக்கும் கருவியைக் காட்டி படமெடுக்க ஏற்பாடு செய்தார். படமும் நன்றாயிருக்கும்.

1931ஆம் ஜூலை 30உ

ஜியுகாம்பா (Jieu Gompa) விலிருந்து ராக்ஸ்டால் (Rakstal)

காலை 5-15 மணிக்கு அதி உக்கிரமான குளிரில் அடுத்த மஜிலிக்குச் செல்லப் புறப்பட்டோம். 3-மைல் ஏரி ஜலகரையோடு நெடுகச் சென்று ஒரு பெரிய மைதானம் வந்து சேர்ந்தோம் அங்கு ஏரிஜலத்தில் வாத்துகளநேகம் விளையாடிக்கொண்டிருந்தன. மானஸஸரஸுக்கும் ராகஸ்டால் (Rakstal) ஸரஸுக்கும் நடுவிலிருக்கும் ஒரு மலைத்தொடர்ச்சியினுச்சியை நோக்கி தென் சிறக்காய் திரும்பினோம். வழியில் வட்டமான ஒரு பெரிய ஏரியைப்பார்த்தோம். அதனடுவில் வெண்மையான வெண்காரத் திட்டொன்று இருந்தது. வாத்துகளநேகம் அதிலிருந்தன. டிபெட் ராஜாங்க உத்திரவை அனுஸரித்து ஒருவரும் வெண்காரத்தை வெட்டியெடுக்கிறதில்லை. 3மைல் மலையுச்சிக்கு, படிப்படியாய் மேடேறிச் செல்லவேண்டியிருந்தது. வலதுகைப் பக்கம் திரும்பி ராகஸ்டால் (Rakstal) ஏரியை நோக்கி 3மைல் தூரம் படிப்படியாய் ஏறிச்சென்றோம். ஆங்கு ஒருகாலம் தர்மசாலையாயிருந்த லகான்தோ (Lakando) என்ற ஒரு பாழடைந்த கட்டிடத்தைக் கண்டோம். இன்னும் மூன்றுமைல் சென்று ஏரியின் தென்மேற்கு ஓரத்தில் கூடாரமடித்தோம். ராகஸ்டால் (Rakstal) ஏரி ஒழுங்கான உருவமுள்ளதல்ல. மிகஅழகுள்ளது. அதில் சிறிய திட்டுகள் அனேகமுண்டு. மானஸஸரஸைப்போல் பெரியது. ஒருக்கால் அதைவிடப் பெரியதாயுமிருக்கலாம். அன்று முழுதும் காற்றும் குளிருமாயிருந்தது. காலையில் சூர்யன் உக்கிரமாய்ப் பிரகாசித்தது. 12மைல் சென்று காலை 10மணிக்கு லகாண்டோ (Lakando) போய்ச்சேர்ந்தோம். எங்கள் மிருகங்களும் மிகக் களைப்படைந்தன. மானஸஸரோவர் ஏரியை விட்டு நாங்கள் வந்தபொழுது வழியில் விகாரமாய் மெலிந்த சிறுத்தைப் பிலியொன்று மலை ஏறிச்செல்லுவதைக் கண்டோம். (Rakstal) ஏரியில் ஹம்ஸங்கள் அனேகமிருந்ததாகச் சொல்லுவார்கள். ஆனால் எங்கள் கண்ணில் ஒன்றுகூடப் படவில்லை. குளிர் காலத்தில் ஏரிஜலம் முற்றிலும் உறைந்திருக்கும்பொழுது உறைந்த பனியின்மீது இத் தீவுகளுக்கு நடந்து வந்து ஹம்ஸமுட்டைகளை சேகரிப்பார்கள்.

1931-ஞு ஜூலை-மீ 31வ

ராக்ஸ்டால் (Rakstal) இலிருந்து ரங்ங் (Rungung)

இரவும் காலையும் அதிகுளிராயிருந்தது. குளிர் நிவர்த்திக்கேற்ப உடுப்பு எவ்வளவோ இருந்தும், எலும்பினுள்ளே கூட குளிர் பிரவேசித்தது. மேல டிபெட்தேசத்தை கூடிய சீக்கிரத்தில் விட்டு சௌகரியமானப் பிரதேசம்போக மிக ஆவலுண்டாயிற்று. காலை 5-15க்கு ராக்ஸ்டாலை விட்டு 10மைல் சென்று 9-30மணிக்கு ரங்ங் (Rungung) போய்ச்சேர்ந்தோம். ஷை பிரதேசம் உயரத்திலிருந்து வாயுமண்டலம்மெல்லிதாயிருந்ததால் குதிரைகள் மெள்ள மெள்ளப் போயும் மிகக் களைப்படைந்தன. கோரி ஓடியல் (Gori-Odial) கூர்லா கணவாய் (Goorla Pass) ஆகிய முன் சென்ற வழியாய் திரும்பிவாராமல் சமதரையாயுள்ள ஒரு பள்ளத்தாக்கின் வழியாய் வந்தோம். அது கோரி ஓடியலைப்போலவ்வளவு உயரமில்லை, ஆனால் கற்பிரதேசமாயிருந்தது. நெடுக டாமாசெடிகளிருந்தன. ஆவலுடன் எங்கள் குதிரைகள் சாப்பிடக்கூடிய வேறு சில செடிகளுமிருந்தன. ஈச்வரன் ஒன்றையும் வியர்த்தமாய் சிருஷ்டிப்பதில்லை, டாமாசெடிகூட விறகுக்குதவும். எங்களிட துபக்கத்திலுள்ள கூர்லாமந்தாதா (Goorla Mandhata) பர்வதம் முழுவதும் மேகங்களால் மூடப்பட்டிருந்தது, அதனால் அப் பர்வதத்திற்கு சமீபம் கிழேயிருந்தும் அதை நன்றாய் பார்க்க எங்களால் முடியவில்லை. காலை முழுவதும் அனேகமாய் மப்பாயிருந்தது. சமதரைப் பிரதேசத்தில் கூடாரமிறங்கினோம். அது பசும்புல் நிறைந்த சதுப்பான பள்ளத்தாக்குக்கு ஸமீபமிருந்து, அதன் வழியாய் ஒரு ஆறும் கோணலாய் ஓடுகின்றது. எங்களுக்கும் எங்கள் குதிரைகளுக்கும் ஜலவஸதி மேய்ச்சல் வஸதி இவைகளுக்குக் குறைவில்லை. இங்கும் குளிர்காற்றடித்துக் கொண்டிருக்கிறது.

1931-ஞு ஆகஸ்டு 1வ

ரங்ங் (Rungung) இலிருந்து தக்லகாட் (Taklakot)

ராகஸ்டால் (Rakastal) குளிரில் பாதிகூட ரஙகிலில்லை. காலை 5-20க்கு ரங்ஙைவிட்டு 4-மணி நேரத்தில் தக்லகாட் (Taklakot) வந்தோம். தக்லகாட்டுக்கு 3-மைலிப்பால் பட்டாணி, வால்கோதுமை, ஓட்ஸ், இவைகள் நன்றாய் வளர்ந்த ஓர் கிராமத்திற்கு ஸமீ

பம் ஒருவிடத்தைக் காட்டி அதில் டிபேட் தேசியர்கள் ஸோரவர் ஸிங் (Zoravar Sing) என்ற இராணுவத் தலைவருடன் போர் செய்து அவரைக் கொன்றதாகச் சொன்னார்கள். தக்ல காட்டை விட்டுச் சென்ற தேசங்களைவிட தக்லகாட்டில் குளிர் வெகுக் குறைவானது. 10-மைல் சென்று அவ்விடம் வந்து சேர்ந்ததில் எங்களுக்கு மிகச் சந்தோஷமுண்டாயிற்று.

1931-ஹு ஆகஸ்டு 2உ

தக்லகாட்டிலிருந்து (Taklakot) கோஜர்நாத் (Khojarnath)

கோஜர்நாத்தில் பெயர் பெற்ற ஆச்ரமத்திற்குப் போவதாக நேற்று தீர்மானம் செய்யப்பட்டது. ஆகையால் வழக்கம்போல் காலை 5-30-மணிக்கு டாக்லகாட்டைவிட்டு 4 மணிநேரத்தில் கோஜர்நாத் போய்ச்சேர்ந்தோம். அது டாக்லகாட்டுக்குத் தென் கிழக்கில் மாப்சு (Mapchu) அல்லது கர்ணலி (Karnali) ஆற்றண்டைவிருக்கின்றது. அவ்வாற்றின் நெடுகச் சென்றோம். வழியில் பாதி ஸமவெளி. இரண்டு மூன்று நதிகளைக் கடக்கவேண்டியிருந்தது. அழகான சிறிய கிராமங்கள் வழியாய்ப் போனோம். அவைகளில் பட்டாணி வாற்கோதுமை, ஜாவ் என்ற மற்றொரு வித கோதுமை இவைகள் சாகுபடி செய்யப்பட்டன, நல்ல பாசனவஸதிகள் அங்கு உண்டு. சிலவிடங்களில் அலரிபோன்ற மரங்களுமுண்டு. ஒவ்வொரு கிராமத்திலும் வாய்க்கால் பக்கங்களில் ஆடு மாடு மேயும் ஸ்தலங்களுண்டு. சாகுபடி செய்யப்பட்ட நிலங்களின் பசுமை மிக நேர்த்தியாயிருந்தது. வாய்க்கால்களின் பக்கங்களில் சில நீல வர்ணபுஷ்பங்கள் உண்டு. எங்கள் வழியில் பின்பாதி மேடுபள்ளமுமாயிருந்தது. கோஜர்நாத்கிராமம் ஸிக்கிம் (Sikkim) ராஜ்யத்திலிருக்கிறது. அது சாய்வான அரைவட்டப் பிரதேசம். அதன் குறுக்களவு இரண்டுமைல். அதற்குப்பின் பக்கம் ஒரு மலைத்தொடர்ச்சி. நேபாள தேசப்பக்கமாய் வேறொரு மலைத்தொடர்ச்சி இருக்கின்றது. இத்தொடர்ச்சிகளுக்கு நடுவில் கர்ணலி (Karnali) என்ற பெரிய நதி ஓடுகிறது. கோஜர்நாத் ஆச்ரமம் தென்னிந்தியாகோவில்களைப் போல ஆற்றின்கரையிலிருக்கின்றது. இதுவரையில் பார்த்த ஆச்ரமங்களோ செங்குத்தான மலைப்பக்கங்களிருந்தன. கோணலாயும் மூடப்பெற்றதாயுமிருந்த வாயில்வழியாய் உட்சென்றோம். ஆங்கு திறந்த ஸமசதுரப்பிரதேச

மொன்று இருந்தது. அதின் பக்கங்கள் நான்கிலும் கட்டிடங்க ளுண்டு. கோவிலின் பிரதானபாகம் சுவர்களின் வெளியில் மட் சாந்து பூசலுள்ளதாயிருந்தது. மேன்மாடத்தில் இருபக்கங்களி லும் பித்தளைமான்களுள்ள ஒருபித்தளைபிம்பம் கண்ணில்விழும்படி யாய் நேரெதிரில் அமைக்கப்பட்டிருந்தது. வாயற்படி சென்றவு டன் ஒரு முற்றத்தைப்பார்த்தோம். அதன் சுவர்களில் புத்தர்பட ங்களும் புஷ்பங்கள் காட்டுமிருகங்கள் இவைகளின் சித்திரங்களும் வரைந்திருந்தன. உள்ளிருக்கும் வாயில்படி நுழைந்து சென்றோம். இருபக்கங்களிலும் தோல்போட்ட பீப்பாய்கள் பிரார்த்தனைசம்பந் மாய் உருண்டு கொண்டிருந்தன. பின்னும் சென்று ஒரு சிறிய அறையில் புகுந்தோம். அதன் இரு பக்கங்களிலும் சுமார் 8-அடி உயரமுள்ள களிமண்ணால் செய்யப்பட்டு வர்ணங்கொடுக்கப்பட்ட இரண்டு அஸுர பிம்பங்கள் நிற்க வைக்கப்பட்டிருந்தன. அவை களில் ஒன்று இராவணபிம்பம் என்பார்கள். அந்த அறைக்கப் பால் இரண்டு வரிசை மரத்தூண்களுடன் 50-அடி நீளம் 20-அடி அகலமுள்ள ஒரு ஹாலிருந்தது. பௌத்தகுருக்கள்மார் உட்கார்ந்துப் பிரார்த்தனை செய்ய மெத்தை போட்ட ஆஸனங்கள் இரண்டு வரிசையிலிருந்தன. ஹாலின் கடைசியில் பௌத்த பிம் பம் உட்கார்ந்த நிலைமையில் ஒன்றிருந்தது. அதன் பக்கத்தில் கிண்ணங்கள் மணிகள் முதலிய பூஜை ஸாமான்களிருந்தன. அத ற்கப்பால் சுமார் 5-அடி உயரமுள்ள பீடத்தின் மேல் விசேஷமாய் செம்பு உலோகத்தால் வார்க்கப்பட்ட ஸீதா, ராம, இலக்ஷ்மணா ளின் பிம்பங்கள் நின்றுகொண்டிருந்தன. ஒவ்வொரு பிம்பமும் 7, 8-அடி உயரமுள்ளது. பின்னும் பிரபாவளியுமிருந்தது. அவை களின் வார்ப்பு அதி நேர்த்தியானது. பீடத்தின் ஒரு பக்கமுனை யில் யானை பிம்பமும் மற்றொரு பக்க முனையில் குதிரை பிம்பமும், மத்தியில் உட்காரும் நிலைமையில் அநேகமான ஸ்வாமி அம்மன் பிம்பங்களுமிருந்தன. அதன்மேல் தாமரைத் தண்டுபோன்ற பிம் பம் ஒன்றிருந்தது. இருபக்கங்களிலும் இரண்டுவன தேவதை பிம் பங்கள் குனிந்து கைகளை மடித்துக்கொண்டு ஆகாயம் பார்த்துக் கொண்டுமிருக்கும் நிலைமையில் அமைக்கப்பட்டிருந்தன. அதற்கு மேல் தாமரைப் பூவிதழ்கள் அமைக்கப்பட்டிருந்தன. உயர் நிலை யில் வலது பக்கமாய் இராம, ஸீதா, பிம்பங்களும்இடதுபக்கமாய் இலக்ஷ்மண பிம்பமும் நின்றுகொண்டிருந்தன. அப்பீடம் பிம்பங்

களுக்குத் தக்கபடி வெகு அழகாய் அமைக்கப்பட்டிருந்தது. முக ங்களில் அழகாய் வர்ணங்கொடுக்கப்பட்டிருந்தன. பிம்பங்களில் வெள்ளிக் கலப்பு மிகுதி பிரபாவளியில் மயில் முதலிய பிராணிக ளின் குறிப்பும் சில கொடிகளின் உருவங்களும் அழகாய் வரை யப்பட்டிருந்தன. பீடத்தில் தாழக்குனிந்த இரண்டுஸிம்மங்களின் பிம்பங்களுமிருந்தன. அப்பிம்பங்களுக்கு தங்க ஆபரணங்களும் கற்களாலமைக்கப்பட்ட ஆபரணங்களும் இருந்தன. ஒவ்வொரு பிம்பத்தின் தலைக்குச் சித்திரத் தையல்வேலை செய்த உடுப்பிருந் தது. வார்த்தல் வேலையேமிக அழகாயிருந்தது இவ்விக்ரகங்கள் எவ்வளவு பழைமையானவையென்று சொல்லமுடியாது. அவ்வூர் குருக்கள்மார் அவை மனிதன் செய்த விக்ரஹங்கள் அல்ல என் கிறார்கள். ஒருவேளை அது ஹிந்துமதக் கோவிலாயிருந்து பிறகு பௌத்தாச்ரமமாக உபயோகப்படுத்திருக்கலாம். யாத்ரிகர்கள் கோவிலைச்சுற்றிப் போக குறுகலாயும் இருட்டாயுமிருந்த ஒரு பாதை உண்டு. அக்காக்ஷியே அதிஸந்தோஷகரமாயிருந்தது.விக்ர ஹங்களுக்கெதிரில்உயரமானவிசிப்பலகையில்வெள்ளிக்கிண்ணங்க ளும்தங்கக்கிண்ணங்களும் இருந்தன. அவைகளில் நெய்விட்டுஇர வும் பகலும் விளக்கெரிக்கிறார்கள். அக்கட்டிடத்தைச்சுற்றி பிராகா ரம் ஒன்றுண்டு. அதில்சுழலும்ப்ரார்த்தனைப்பீப்பாய்கள்அனேக ங்களுண்டு. ஒரு அறையில் 10-அடி உயரம் 5-அடி குறுக்களவு உள்ள ஒருபெரியபீப்பாயிருந்தது. அதைச்சுற்றுவதற்கு இரும்பு வளையங்களுண்டு. டிபெட் தேச எழுத்தில் ("Om Mani-padme ham") என்ற அவாளுடைய மந்திரங்கள் அப்பீப்பா யின் மேல் எழுதப்பட்டிருந்தன, வயதுசென்றஒரு ஸ்திரீ கிட்ட உட்கார்ந்து அப்பீப்பாயை உருட்டிக்கொண்டிருந்தாள், அவ்வி டம் விட்டு வெளிவந்து வேறொரு ஹாலில் நுழைந்தோம். அதன் கடைசியில் ஒரு இருட்டான அரையில் களியால்செய்து வர்ணங் கொடுக்கப்பட்ட ஒரு பெரிய புத்த விக்ரஹம் நாற்காலியில் உட் காரவைக்கப்பட்டது போல் அமைக்கப்பட்டிருந்தது. அந்த ஹா லுக்கிடதுபக்கம் ஒரு பெரிய அறையில் ரிஷிகளின் விக்ரகங்கள் களியால் செய்து வர்ணங்கள் கொடுக்கப்பட்டிருந்தன. அவ்விக்ர கங்கள் கால்களை குறுக்கமாக மடக்கிக்கொண்டும் ஜபம் செய்யும் அங்கவிந்யாஸரீதியிலுமிருந்தன. அந்த ஹாலுக்கு வலதுபக்கம் மற்றொரு இருட்டறையில் இம்மாதிரியே ஏழு விக்ரகங்கள் உட்



TIBETAN HOUSE AT TAKLAKOT



LAMAS IN PRAYER AT TAKLAKOT MONASTERY

கார்ந்து கைகளைமாத்திரம் அனேக முத்ரா ரீதியில் வைத்துக்கொண்டிருப்பதுபோல அமைக்கப்பட்டிருந்தன. இவைகளை ஸப்தரிஷி பிம்பங்கள் என்கிறார்கள். புத்தர் கோவிலுக்கு இடதுபக்கம் ஒரு இருண்ட அறையில் வர்ணங்கொடுக்கப்பட்ட களிமண்தோல் இவைகளால் செய்யப்பட்ட காளன் காளி என்ற தேவதைகளின் பயங்கரமான உருவங்களிருந்தன. பெரிய ஹால் கூறையில் ஓர் மூலையில் இறந்த கவரிமான் புலி இவைகளின் தோலில் வைக்கோலடைத்துத் தொங்கவிட்டிருந்தார்கள். இவை பயங்கரமாயும் பெரியதாயுமிருந்தன. பிறகு அக்கட்டிடம் முதல் மாடத்துக்குச் சென்றோம். ஆங்கு காளி இலக்ஷ்மி இவர்களுடைய களிமண் விக்ரத்தைப் பார்த்தோம். அவ்விக்ரகங்கள் அச்சிட்ட டிபெட் தேசீய வேதக்ரந்தங்களிருக்கும் பெரிய புஸ்தகசாலையிலிருந்தன. இவ்வாச்ரமம் இதுவரைப்பார்த்த ஆச்ரமங்களைவிட சுத்தமானதாயிருந்தது. பூஜைக்குறிய இடமென்றே மனதில் பதிந்தது. சுற்றுப் பிரதேசங்கள் அழுக்கானவைகள். கட்டிட வெளிச்சுவர் ஒன்றில் ஜபமந்திரங்கள் பெரிய ஒழுத்துக்களில் மண்சாந்தால் எழுதப்பட்டு வெண்மை வர்ணங்கொடுக்கப்பட்டிருந்தன. சமீபத்தில் ஒரு கோபுரமிருந்தது. அதனடிபாகம் ஒரு ஸமசதுரம். ஒவ்வொரு பக்கமும் தாழ்ந்த வளைவுள்ளது. அவ்வாச்ரமத்தை விட்டு அந்தப் பள்ளத்தாக்கின் மேல் பாகத்திலிருக்கும் ஒரு சிறு குறுக்கள் வீட்டுக்குப்போனோம், அது மண் கல் இவைகளால் கட்டப்பட்ட நேர்த்தியான கட்டிடம். அதன் மேற்றளம் மாப் பலகையால் செய்யப்பட்ட முற்றம். அது சுத்தமாயிருந்தது. சுவர்களில் சித்திரங்கள் வரையப்பட்டிருந்தன. கிராதி அடைப்புள்ளது. முற்றத்தின் ஒரு பக்கத்தில் குருக்கள் மேடையில் உட்கார்ந்திருந்தார். அவர் 16-வயதுள்ளவர். அவர் பக்கத்தில் 6-வயதுள்ள ஒரு சிறு குறுக்கள் சற்று கீழிருக்குமாஸனத்தில் உட்கார்ந்திருந்தார். அவ்விருவர்களையும் அவதார புருஷர்கள் என்றார்கள். அவர்கள் நன்முகநிறமுள்ளவர்கள், சுறுசுறுப்பானவர்கள். முதிர்ந்தவர். சடைத்த மயிறுள்ளவர். வேதக்ரந்தம் பார்த்துக்கொண்டிருந்தார். மூன்று வருஷங்கள் வெளியே போகிறதில்லையென்ற பிரமாணமுள்ளவர். மஹாராஜாவைப் பற்றி அன்பு விசாரணை செய்தார். மஹாராஜாவும் அவருக்கு சிவப்பு, நீலம், இவ்வர்ணங்களுள்ள பதாத்துகளும் ரொக்கப் பணமும் இனாம் கொடுத்தார்.

குருக்கள் எங்களை ஆசீர்வதித்துப் பிரஸாதம் கொடுத்தார். இங்கும் பூஜைக்கு புத்த விக்ரஹம் இருந்தது சுற்றுமிருக்கும் பூமிகள் மிகச் செழிப்பானவை. தக்லகாட்டை விட (Taklakot) 600-அடித்தாழவிருந்ததால் அதிசீதளமாயில்லை. இவ்வழகான கோஜர்நாத் (Khojarnath) தைத் தர்சித்ததில் எங்களுக்கு மிக சந்தோஷமாயிருந்தது.

1931-ஞூ ஆகஸ்டு 3௳

கோஜர்நாத் (Khojarnath) இலிருந்து தக்லகாட் (Taklakot

இரவில் நன்றாய் நித்திரை செய்தபிறகு காலை 9-30-மணிக்கு தக்லகாட்டிற்கு திரும்பிவந்தோம்.

1931-ஞூ ஆகஸ்டு 4௳

தக்லகாட்டிலிருந்து (Taklakot) பாலா (Pala)

தக்லகாட்டுக்கு 5-மைல் தூரத்திலுள்ள லிபுலேகை (Lipu-lekh) நோக்கி பாலா (Pala) வில் பாளையந்தங்கினோம். ஏற்கனவே மிக சீதளமென்றும், ஸௌகரியக் குறைவுள்ளதென்றுந்தெரிந்த ஸ்யாங்சமில் (Siagchum) தங்காமல் அடுத்தநாள் லிபுவை(Lipu) க்கடந்து சென்று நேராக காலபாணிக்குப் போவது தான் எங்களெண்ணம். மாலையில் சூர்யன் உக்கிரமாய் பிரகாசித்தும், மறுபடியும் குளிர்காற்றடித்தது.

1931-ஞூ ஆகஸ்டு 5௳

பாலாவிலிருந்து (Pala) காலபாணி (Kalapani)

காலை 5-30-மணிக்குப் பாலாவை விட்டு லிபு (Lipu) மேட்டிற்குச்சென்றோம். அப்பொழுது காலை மணி 7-30. தூறலும் மப்பும் எங்குமிருந்தன. லிபு (Lipu) பனியாயும் நிச்சப்தமாயும், பயங்கரமாயுமிருந்தது. அது எங்கள் கொலைஸ்தலம்போல் காணப்பட்டது. மேட்டிலிருந்துக் கீழிறங்குவது வழியில் கற்களிருந்தும் சுளுவாயிருந்தது. 14, 15, மைல் சென்று காலை 10-45.க்கு காலபாணி வந்துசேர்ந்தோம். முன்னிறங்கின காளி ஊற்றுப் பக்கத்தில் கூடாரமடித்தோம். ராணுவம் ஸ்ரீமான் நஞ்சராஜபகதூர் நேற்று மூர்ச்சியடைந்து ஸ்ரீமான் ஸி வீ. சுப்பிரமணிய ஐஜா அர்ஸ் அவர்களால் தெளிவிக்கப்பட்டார். அம்மாதிரியே ஸாங்கேய் இராணியம்மாளின் வேலைக்காரி மூர்ச்சியடைந்துஎன்னுதவி

BRIDGE NEAR KALAPANI

BHOTIAS OF GARBAYANG READY TO DANCE

டாக்டரால் தெளிவிக்கப்பட்டாள், மற்றவர்கள் ஸௌக்கியமாய் காலபாணியை அடைந்தார்கள். டிபெட்தேசத்தை விட்டு இந்திய ராஜ்யம் வந்துசேர்ந்தோம். மிகச் சந்தோஷமாயிற்று.

1931-ஹு ஆகஸ்டு 6உ

காலபாணியிலிருந்து (Kalapani) கார்பயங் (Garbayang)

காலை 5-30-மணிக்குக் காலபாணியிலிருந்து புறப்பட்டு 8-30க்கு கார்பயங் வந்தோம். பெரும்பாலு மிறக்கமானதால் நடந்தே சென்றோம். பகல் 2-மணிக்கு அங்கிருக்கும் போதியர்கள் மகாராஜாவுக்கு முன்னால் இடதுகையில் கேடகத்தையும் வலது கையில் கத்தியையும் வைத்துக்கொண்டு முரசு ஜல்லரிவாத்யத்துடன் நர்த்தனம் செய்தார்கள். அன்று முழுவதும் தூறலாயும் மப்பாயுமிருந்தது.

1931-ஹு ஆகஸ்டு 7உ

கார்பயங் (Garbayang) இல் தங்கல்

நாங்கள் செல்லவேண்டிய வழி குதிரைக்கு ஏற்றதாயிராததால், டார்சூலாவுக்கு (Dharchula) தட்டுமுட்டு சாமான்களைக் கொண்டுபோக கூலியாட்களை நியமிக்க அன்று முழுவதும் கார்பயங்கில் தங்கினோம்.

1931-ஹு ஆகஸ்டு 8உ

கார்ப்பயங் (Garbayang) இலிருந்து மால்பாவுக்கு (Malpa)

காலை 6மணிக்கு கார்ப்பயங் (Garbayang) ஐ விட்டு பூடி (Budi) யில் தங்காமல் மால்பாவுக்கு வந்து சேர்ந்தோம். வழி கடினமாயும் அபாயகரமாயுமிருந்ததால் மிகக் களைப்படைந்தோம். வெயிலும் உக்கிரமாயிருந்தது.

1931-ஹு ஆகஸ்டு 9உ

மால்பாவிலிருந்து (Malpa) கலகார் (Galagar)

காலை 6-மணிக்கு மால்பாவிலிருந்து (Malpa) புறப்பட்டு 10-30-மணிக்கு கலகாருக்கு (Galagar) வந்து சேர்ந்தோம். ஏற்கனவே சொல்லியபடி பாதை மிக அபாயகரமானது. அதிருஷ்ட வசமாக க்ஷேமமாய் வந்தோம். வரும்பொழுது பெரிய கல் ஒன்று விழுந்து 2, 3, கூலியாட்களை ஸ்வல்பமாய் தீங்கு செய்தது. கூடாரக்கம்பங்களில் சில முறிந்துபோயின. ஆனாலும் யாத்திரையின் மிக ஆபத்தானபாகம் முடிவுபெற்றது.

1931-ஹு ஆகஸ்டு 10உ

கலகாரிலிருந்து (Galagar) தித்லா (Thithla)

இன்று கலகாரிலிருந்து தித்லாவந்தோம். புறப்படும்பொழுது மழை பெய்தது. குதிரைகள் 4மைல் செங்குத்தாய் ஏறியும், நாங்கள் 4மைலிறங்கியும் வெகுவாய் ச்ரமமடைந்தோம். இறங்கும் வழி சோராயும், வழுக்கலாயுமிருந்தது. ஸ்ரீமான் வெங்கட சுப்பய்யாவும் அவர் குதிரையும் பெரிய கல்விழும் ஆபத்திலிருந்து மயிரிடை தப்பித்துக்கொண்டார்கள், இவ்விடம், முன் நாங்கள் விட்டபிறகு நல்ல மழையால் குளிர்ந்து புல் பூண்டு செடி கொடிகள் முளைத்து பசுமையாயிருந்தது. பயிர்கள் மிகச் செழிமையாய் வளர்ந்தன.

1931-ஹு ஆகஸ்டு 11உ

தித்லாவிலிருந்து (Thithla) கேலா (Khela)

தித்லாவிலிருந்து கேலா வரும்பொழுது கனமழைபெய்தது. மழையால் ஆறுகளில் பிரவாகம் மிகுதி, சிலவிடங்களில் பூமி சரிவுமிருந்தது. காடு செடிவழியாய் 3மைல் இறங்கிக் கஷ்டப்பட்டோம், சோளம் முதலிய பயிர்கள் நன்றாய் உயர்ந்து வளர்ந்திருந்தன.

1931-ஹு ஆகஸ்டு 12உ

கேலா (Khela) வில் தங்கல்.

ஒருவேலையுமின்றி அன்று முழுவதும் கேலாவிலிருந்தோம். முந்தின இரவு மழை கனம். பிறகு பகலில் வெயிலும்மிகுதி.

1931-ஹு ஆகஸ்டு 13உ

கேலாவிலிருந்து (Khela) டார்ச்சூலா (Dharchula)

காலை 6-மணிக்கு கேலாவைவிட்டு 10-15-க்கு டார்ச்சூலாவுக்கு வந்தோம். வழிநெடுக ஸஸ்யாதிகள் நேர்த்தியாயிருந்தன, ஆறுகளிலும் மழையால் வெள்ளம் மிகுதி. டார்சூலாமாத்திரம் முன்னிருந்ததுபோல உஷ்ணமாயிருந்தது.

1931-ஹு ஆகஸ்டு 14உ

டார்சூலாவிலிருந்து (Dharchula) ஆஸ்காட் (Askot)

இன்று நேராக டார்சூலாவிலிருந்து 22, 23-மைல் சென்று உஷ்ணமான பலவக்காட்டில் (Balavakot) தங்காமல் ஆஸ்காட் (Askot) போவதாகத் தீர்மானித்தோம், காலை 6-க்குப் புறப்

பட்டு 9-30க்கு பலவக்காடு வந்தோம். காலைப் பசியாற்றிக் கொண்டு 11-30க்கு மறுபடியும் வெயிலில் அவ்விடம் விட்டு மாலை 4-15க்கு ஆஸ்காடு வந்தோம். ஆஸ்காடு ஸமீபம் 3-மைல் மிகச் செங்குத்தாயிருந்து. ஏறிச்செலவது எங்களுக்கும் எங்கள் குதிரைகளுக்கும் மிகக்கஷ்டமாயிருந்தது. ஆஸ்காடு புழுக்கமாயும் கொசு முதலிய பூச்சிகளின் தொந்திரவுள்ளதாயுமிருந்தது.

1931 ஷூ ஆகஸ்டு 15உ

ஆஸ்காட்டில் (Askot) தங்கல்.

அதிகாலையில் அன்று மழை மிகுதி. பிற்பகலிலும் மிகுதி. கூடாரங்களெல்லாம் நனைந்தும் ஈரமாயும் சௌகரியமற்றவைகளாயும் இருந்தன. பிற்பகலில் ராஜ்வார்ஸாஹிப் தேநீர் சாப்பிட எங்களை அழைத்தார்.

1931 ஷூ ஆகஸ்டுமீ 16உ

ஆஸ்காட்டிலிருந்து (Askot) ஸாந்தியோ (Sandeo)

காலை 5-45க்கு ஆஸ்காட்டைவிட்டு 3-மணி நேரத்தில் ஸாந்தியோ வந்தோம். யாத்திரை வெகு இன்பமாயிருந்தது. இடம் குளிர்ந்திருந்தது.

1831 ஷூ ஆகஸ்டுமீ 17

ஸாந்தியோவிலிருந்து (Sandeo) தால் (Thal)

காலை 5-30க்கு ஸாந்தியோவை விட்டு 8-45க்கு தாலுக்கு (Thal) வந்தோம் கீழிறக்கமாயிருந்தது. நடந்து சென்றோம். அன்று 4மணி வரை டார்ச்சூலாவில் போல் உஷ்ணமாயிருந்தது. அதிதியர்வையடைந்தோம்.

1931 ஷூ ஆகஸ்டுமீ 18உ

தாலிலிருந்து (Thal) பேரிநாக் (Berinag)

காலை 5-45க்கு தாலைவிட்டு 3½-மணி நேரத்தில் பேரிநாக் (Berinag) வந்தோம். மேட்டிலேறிச் சென்றோம். வெயிலே இல்லை. மிக மப்பாயிருந்தது. தாலின் உஷ்ணத்திலிருந்துப்பிழைத்து வந்தது சந்தோஷகாமாயிருந்து.

1931 ஷூ ஆகஸ்டுமீ 19உ

பேரிநாக்கிலிருந்து (Berinag) ஸாநியோதியார் (Saniodhiar)

காலை 5-30க்கு பேரிநாக்கைவிட்டு 11, 12 மைல் சென்று 4மணி நேரத்தில் ஸநியோதியார் (Saniodhiar) கூடாரம் வந்து

சேர்ந்தோம். வழியில் தேவதாரு மரங்களுண்டு. ஸஸ்யாதிகள், ஆறுகள் கூடின அழகான கிராமங்களுண்டு. எங்கள் மகாராஜா வின் தர்சனத்திற்கு கிராமத்தார்கள் காத்திருந்தார்கள். அவர் செல்லும்பொழுது புஷ்பவர்ஷம் வர்ஷித்தார்கள். பாதை செங் குத்தாயும், கோணலாயுமிருந்தது. குதிரைகள் கஷ்டப்பட்டுச் சென்றன. நாங்கள் இரக்கங்களில் கால்நடையாய்ச் சென்ருேம். காலை நேரம் குளிர்ந்து மப்பாயிருந்தது. மாலை வெப்பமாயிருந் தது. சிறிய அநாதாலயம் ஒன்று ஆங்கு இருந்தது. அமெரிக்கா தேசத்திய பாதரிஸ்திரீகள் சிலர் அவ்வாலயத்தை நடத்தி வந்தார் கள். கிராமத்திற்கு வெளியே ஒரு மைல் தூரத்தில் ஒரு சோலை யில் தங்கினேம்.

1931ஹு ஆகஸ்டுமீ 20உ

ஸாநியோதியாரிலிருந்து (Saniodhiar)பகேச்வர் (Bageshwar)

காலை 5-30க்கு ஸாநியோதியாரைவிட்டு 12மைல் சென்று 10மணிக்கு பகேச்வர் சென்ருேம். முந்தின தேதியில் போல் அழகான பர்வதப் பிரதேசத்தின்வழியாய் பாதையிருந்தது. காலை முழுவதும் மப்பாயிருந்தது. ஸர்ஜூநதி பகேச்வர் (Bageshwar) ஸ்தலத்தின் குறுக்காக ஓடுகிறது. ஜலக்கரைக்கு 20 அடியிலிருக் கும் பிரயாணிகள் தங்கும் பெரிய பங்களாவில் தங்கினேம். எங் களுக்கு இடதுபக்கமாய் ஆற்றுக்கு 60 அடி நீளமுள்ள ஒரு அழ கான தொங்கு பாலமிருந்தது அவ்விடம் 3200 அடி உயரமுள் ளது. பாலத்துக்கப்பால் கோமதி (Gomati) யாறு ஸர்ஜூவு டன் (Sargue River) சேருகிறது. அச்சங்கம பிரதேசத்தில் பழைய பகேச்வார் கோவில் அழகாய்க் காணப்படுகிறது. ஆற் றினிருபக்கங்களிலும் கடைவீதிகள் இருந்தன. நவம்பர் மாதம் அனேக ஜனங்கள் சேரும் பெரிய சந்தை ஒன்று இங்கே கூடுவது வழக்கமாம். தெருவீதிகளுக்கு அலங்காரஞ்செய்து புஷ்பவர்ஷம் வர்ஷித்தது. அவ்வூர்ஜனங்கள்எங்கள் மகாராஜாவுக்கு வரவேற்கு முபசாரஞ் செய்தார்கள். ஊரில் பிரஸித்த மாணவர்கள் மாலை மகாராஜாவின் பேட்டிக்கு வந்து சித்திரத் தையல் வேலைசெய்த மக்மல் பையில் ஹிந்திபாஷையில் பிரேமை பாராட்டி எழுதப்பட்ட உபசாரப் பத்திரம் ஒன்றை வைத்து ஸமர்ப்பித்தார்கள். தங்கள் பள்ளிக்கூடத்தை விரிவாக்க ரூ. 5000 நன்கொடை எங்கள் மகா

ராஜாவிடம் யாசித்தார்கள். மகாராஜாவும் அவர்களுக்கேற்ற மறுமொழி கூறினர். பகேச்வர் (Bageshwar) மொத்தத்தில் அழகான ஸ்தலம். அன்று பகல் 12மணிக்கு ஆரம்பித்த மழை மாலை 6-மணிக்குத் தான் நின்றது.

1931ஞு ஆகஸ்டுமீ 21உ

பகேச்வரிலிருந்து (Bageshwar) பின்ஸார் (Binsar)

காலை 5-30மணிக்குப் பகேச்வரைவிட்டு 17-மைல் சென்று பகல் 12-மணிக்கு பின்ஸாருக்கு வந்தோம். செங்குத்தாய் மேடேறிச் செல்லவேண்டியிருத்தலால் எங்களுக்கும் குதிரைகளுக்கும் ஆயாஸமுண்டாயிற்று. பின்ஸார் (Binsar) 7000 அடி உயரத்திலிருத்தலால் சீதளமாயிருந்தது. நல்லவிடத்தில் கட்டப்பட்டும் அழகாயும் விசாலமாயும் தகுந்த சாமான்களுடனும்கூடினவுமான ஓர் பங்களாவில் தங்கினோம். அது செல்வமிக்க ஆல்மோரு (Almora) வியாபாரியாகிய ஸ்ரீமான் தேவி லால் ஷாவுக்குச் சொந்தம். ஒரு காலத்தில் அது ஆல்மோரு கமிஷனர் ராணுவம் ராமஸேக்குச் சொந்தமானது. அதில் ஈ, கொசு இவைகளின் உபத்திரவம் மிகுதி. இப்பெரிய பங்களாவைச் சுற்றி தோட்டத்தில் சீமை இலந்தை கோவை முதலிய பல விருக்ஷங்களுண்டு.

1931ஞு ஆகஸ்டுமீ 22உ 23உ

பின்ஸாரில் (Binsar) தங்கல்.

தினபாணி (Dinapani) யில் தங்காமலே நேராக ஆல்மோருவுக்குச் செல்லத் தீர்மானித்தோம். ஆல்மோராவை விடபின்ஸார் (Binsar) குளுமையானது. ஆகையால் 22உ 23உ பின்ஸாரில் தங்குவதாக மகாராஜா தீர்மானித்தார். தங்குமிடம் மலையுச்சியில் ஒரு அழகான கட்டடம். அங்கேயிருந்து பார்த்தால் எல்லாம் நன்ருய் காணப்படும். அதை நெருங்க ஒரு மைல் செங்குத்தாயும் கோணலாயும் ஏறிச்செல்லவேண்டும். 23உ காலை முழுவதும் மப்பாயிருந்தது. அன்று உலாவி நல்ல தேகபயிற்சி எங்களுக்கிருந்தது. சிலவிடங்களில் மேடேறி தளகர்த்தா ராமஸே தான் கம்மிஷனராயிருக்கும்பொழுது கொடிகட்டின ஜாந்தாரா (Jhanda Dhara) என்று சொல்லப்படும் பிரதேசத்திற்குப் போனோம்.

1931ஆு ஆகஸ்டுமீ 24உ
பின்ஸாரிலிருந்து (Binsar) ஆல்மோரு (Almora)

இன்று பின்ஸாரிலிருந்து ஆல்மோருவுக்கு வந்தோம். இப் பிரதேசத்தில் சென்ற 27உ கைலாஸயாத்திரை போகும்பொழுது தங்கினோம். காலை 6-30மணிக்கு பின்ஸாரைவிட்டு 12, 13 மைல் கடந்து 10-30க்கு ஆல்மோருவையடைந்தோம். வழி சுளுவான தாயும் இன்பமாயுமிருந்தது. இதுவரை வழி இப்படியிருந்தது இல்லை. ஆனுல் தூறல் சில மணி நேரமிருந்தது. அதி ச்ரமசாத்யமான யாத்திரைக்குப் பிறகு நாகரீகமானவிடத்திற்கு எங்களைக் கொண்டுவந்து சேர்த்த சர்வசக்தனை கடவுளுக்கு மிக சந்தோஷத்துடன் நன்றி பாராட்டினோம்.

1931ஆு ஆகஸ்டுமீ 25, 26உ
ஆல்மோருவில் (Almora) தங்கல்.

இவ்விரண்டு நாளும் மகாராஜா சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் பிரஸித்தமான நகரவாஸிகள் இவர்களுக்குப்பேட்டியும் அரபி குடும்பபதிகள் குதிரைக்காரர்கள் முதலியவர்களுக்கு ஞாபகக் குறி கிள்ளத் (Khillats) இன்னும் உதாரமான பரிசு இவைகளையும் கொடுத்தார்.

1931 ஆகஸ்டுமீ 27உ முதல் செப்டெம்பர்மீ 7உ வரை
ஆல்மோரா (Almora)விலிருந்து மைசூர் முடிவு.

ஆகஸ்டு 27உ காலை 10மணிக்கு மோடார் வண்டியில் ஆல்மோராவை விட்டுக் கிளம்பி மாலை 3-30-மணிக்கு கத்கோடம் (Kathgodam) வந்தோம். அடுத்தநாட் காலையில் ஹரித்வாரம் வந்தோம். பகல் முழுதும் அங்கு தங்கிவிட்டு இரவு 10-மணிக்குப் புறப்பட்டு டில்லி (Delhi) மார்க்கமாய் ஆகஸ்டுமீ 30உ பம்பாய் வந்தோம். செப்டெம்பர்மீ 4உ இரவு வரையில் பம்பாயில் தங்கி அன்றிரவே புறப்பட்டு மறுநாள் காலையில் பூனு வந்து சேர்ந்தோம். செப்டெம்பர் 5உ இரவு ஸ்பெஷல் டிரெயின் (தனி ரயில்வண்டி) வைத்துக்கொண்டு அர்ஸிகேர்(Arsikera)ஹாஸான் (Hassan) வழியாய் செப்டெம்பர்மீ 7உ திங்கட்கிழமை காலையில் க்ஷேமமாய் தெய்வா நுக்ரஹத்தால் மைசூர்வந்துசேர்ந்தோம்.

சுபம்.

Route to Kailas and Manasarowar from Almora Taken by His Highness the Maharaja of Mysore in June, 1931



Thick Lines indicate the Route taken by His Highness the Maharaja